

# தமிழரசு

16-2-1978 50 காசு

சென்னை, அண்ணா மேம்பாலம்

# அரசு சிமெண்ட்

உபயோகித்துக் கட்டப்பட்டது!



- கண்கவர் வண்ணம்
- துல்லியமான பூச்சு
- அதிகப்படி மணல் கலந்து உபயோகிக்கக் கூடியது.
- காங்க்ரீட் சுண்ணும்புக் கலவை வேலைக்குகந்தது.
- அதிக உழைப்பு உறுதி
- கந்தக நீர் மற்றும் அமில மண்ணுல் பாதிப்பு ஏற்படாது.

IS தர நிர்ணயங்களின் படி தரமேன்மையுடன் தயாரிக்கப்பட்டது.

ARASU CEMENT
TIDCO

**தமிழ்நாடு சிமெண்ட்ஸ் கார்ப்பொரேஷன் லிமிடெட்**
ஆலங்குளம் தொழிற்சாலை,
இராமநாதபுரம் மாவட்டம்

*மேற்கண்ட சார்பு நிறுவனத்தின் முழு உரிமையாளர்கள்:*

TIDCO

**தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம்,**
150-A அண்ணுசாலை, சென்னை — 600 002.

## இந்த இதழில் :-

**வணக்கம்.**

டெல்லியில் நடைபெற்ற தேசிய மாணவர் படைகளின் அனைத்து இயக்ககங்களிடையேயான போட்டியில், தமிழ்நாடு தேசிய மாணவர் அணி இவ்வாண்டும் முதன்மையில் நின்று வெற்றிவாகை சூடியுள்ளது. தலைமை அமைச்சர் திரு மொரார்ஜி தேசாய் அவர்களிடமிருந்து வீர முதன்மை வெற்றிக் கொடியை தமிழ்நாடு அணி பெறுகின்ற காட்சியை இவ்விதழின் மேலட்டை தாங்கி வந்துள்ளது. நமக்கெல்லாம் பெருமை அளிக்கும் இந்நிகழ்ச்சியின் மாட்சியினை, உள்ளே 'அட்டை சொல்லும் செய்தி' விரிவாக விளக்குகிறது.

குடியினால் வரும் கேட்டினை மக்களின் மனத்தில் பசுமரத்தாணி போல் பதியும்படி மாண்புமிகு முதல்வர் அவர்கள் 'குடிகெடுக்கும் குடியைக் கை விடுவீர்' என்று உருக்கமாக வேண்டுகோள் விடுத்துள்ளார்கள். உழைப்பாளர் உலகம் 'மதுவைத் தொடுவதில்லை' என்று மட்டும் சபதம் எடுத்துக் கொள்ளுமேயானால்—செந்தமிழ்நாடே பூத்துக் குலுங்கும் புன்னகைப் பூங்காவாகத் திகழும் என்பது உறுதி.

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் நான்மாடக் கூடலாம் மதுரையம்பதியில் அரசினர் மீனாட்சி மகளிர் கல்லூரிப் பட்டமளிப்பு விழாவில் ஆற்றிய பேருரை இவ்விதழில் இடம் பெற்றுள்ளது. இலக்கியச் செறிவுடனும்-கலை நயத்துடனும் மிளிரும் அவ்வுரையில், 'புதிய நூற்றாண்டைப் பெற்றுத் தரப்போகும்' தாய்க்குலத்தின் பெருமையை விளக்குவதுடன் மட்டுமல்லாமல்-அவர்களுடைய கடமைகளையும், இனிய தமிழில், அமைச்சர் அவர்கள் வலியுறுத்தியுள்ளார்கள்.

பேரறிஞர் அண்ணாவின் எழுத்தில் உள்ள தெளிவு, மென்மை, பிறரைத் தன்பால் ஈர்க்கும் எழுத்தாற்றல் ஆகிய சிறப்பியல்புகளை, அண்ணாவின் எழுத்தோவியங்கள் சிலவற்றை மேற்கோள்களாக எடுத்துக்காட்டி, திரு பி. சி. கணேசன் அவர்கள், அழகு தமிழில் வடித்துக் கொடுக்கிறார் 'அண்ணா எனும் இலக்கியவாதி' என்னும் தொடர் கட்டுரையில்.

சட்டங்களைத் தமிழில் மொழி பெயர்க்கும் பணியினை ஆற்றும் தமிழ் மாநிலச் சட்டத்துறை ஆட்சி மொழி ஆணையத்தின் தலைவர் முன்னாள் உயர்நீதிமன்ற நீதிபதி திரு மகராஜன் அவர்களின் பேட்டிக் கட்டுரை, தமிழ்மொழியின் வளத்தையும் தமிழ்ச் சொற்களின் நயத்தையும்-இலக்கியக் கண்ணோட்டத்துடன் விளக்குவது மட்டுமல்லாமல், நீதிமன்ற நடவடிக்கைகளை தமிழில் நடத்த முடியும் என்பதையும் வலியுறுத்துகிறது.

மத்திய வேளாண்மை அமைச்சரின் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகப் பட்டமளிப்பு விழாப் பேருரையும், இந்திய விவசாய ஆராய்ச்சிக் கழக டைரக்டர் ஜெனரல் திரு எம். எஸ். சுவாமிநாதன் அவர்களின் கட்டுரையும்-படித்துப் பயன்பெறக்கூடியவை.

'சிந்தனையின் மலை முகடே' என்ற கவிதை-பேரறிஞர் அண்ணாவின் பெரும் புகழினைப் பாடுகிறது.

அன்னை கஸ்தூரி பாவின் மறைவு நாள் 22-2-1944. அண்ணல் காந்தியடிகளின் பொதுவாழ்விலும், குடும்ப வாழ்விலும் உறுதுணையாக விளங்கி, அழியாப் புகழ்பெற்று மாதர் குல திலகமாகத் திகழ்ந்த கஸ்தூரி பாவின் வாழ்க்கையில் நடந்த சில நிகழ்ச்சிகள் "கஸ்தூரி பாவின் வாழ்விலே" என்ற கட்டுரையில் சொல்லப்பட்டுள்ளன.

சுற்றுலாப் பொருட்காட்சியில் செய்தி-மக்கள் தொடர்புத் துறை அரங்கின் நுழைவாயிலின் தோற்றத்தைக் கடைசி அட்டையில் காணலாம்.

'தமிழரசி'ல் சிறுகதைகள் வெளியிட முடிவு செய்துள்ள செய்தியினை கடந்த இதழில் அறிவித்திருந்தோம். சிறுகதைகளை அனுப்பி வைக்குமாறு எழுத்தாளப் பெருமக்களைக் கேட்டுக் கொள்கிறோம்.

## முகப்பில்...

*தேசிய மாணவர் படை அனைத்து இயக்ககங்களுக்கான வீரமுதன்மை வெற்றிக் கொடியை 27.1.'78-ல் டெல்லியில், தலைமை அமைச்சர் அவர்களிடமிருந்து, தமிழ்நாடு-புதுவை தேசிய மாணவர் படையின் சார்பாக, திருச்சிராப்பள்ளி ஹோலி கிராஸ் மகளிர் கல்லூரி மாணவி ஓவநிட்டா ரோட்ரிக்ஸ் பெறுகிறார்.*


## தமிழரசு

மலர் : 8 இதழ் : 16

16—2—1978


உள்ளே....


குடியைக் கெடுக்கும் குடியைக் கைவிடுவீர் .. 2

வாழ்க்கைப் பயணத்தின் தலைவாயிலில் .. 3

நீதிமன்றங்களில் தமிழ் .. 9

சிந்தனையின் மலை முகடே .. 17

ஒளிமயமான எதிர்காலம் .. 18

முன்னேற்றத்தின் நுழைவாயில் .. 21

படமும் செய்தியும் .. 24

நலம் பெற வாழ்க .. 27

அலை கடலோரம் அழகிய கல்லூரி .. 33

வேளாண்மைத் துறையில்.. 37

மழை வருவதை .. 39

அண்ணா எனும் இலக்கியவாதி .. 41

கஸ்தூரி பாவின் வாழ்விலே.. 43

வெற்றி வாகை சூடிய என். சி. சி. .. 46

# குடி கெடுக்கும் குடியைக் கைவிடுவீர்!



## முதல்வரின் உருக்கமான வேண்டுகோள்

தொழிலாளர்கள் தங்கள் உள்ளத்தை மட்டும் பாதுகாத்துக் கொண்டால் போதாது, உடலையும் பாதுகாத்துக் கொள்ள வேண்டும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தொழிலாளர்கள் குடிக்க வேண்டாம் எனக் கேட்டுக்கொள்கிறேன். சிலர் குடிப்பதால் புதிய வலுவும், தெம்பும் வந்துவிட்டதாக நினைக்கிறார்கள். இது தவறு என்பதை அவர்கள் உணர வேண்டும்.

உடலில் எந்தப் பகுதியை வேண்டுமானாலும் மாற்றி அமைக்கலாம். ஈரலை மட்டும் மாற்றி அமைக்க முடியாது. ஒருவன் குடிப்பதால் ஈரல் அழிந்து, உயிர் இழக்க நேரிடுகிறது.

அதனால் அவரை நம்பியுள்ள அவரது மனைவி, தாய், தந்தை, குழந்தைகள் அனைவரும் எவ்வளவு கஷ்டப்படுவார்கள் என்பதை அவர் நினைத்துப் பார்க்க வேண்டும்.

'குடிக்க வேண்டாம்' என்று சட்டம் போட்டுத் தான் உங்களைத் திருத்த வேண்டும் என்று நினைக்காதீர்கள். குடிக்க வேண்டும் என்ற எண்ணத்தை மாற்றிக் கொள்ளுங்கள்.

நீங்கள் குடிப்பதால் எவ்வளவு பணம் பாழாகிறது என்பதையும் அதனால் உங்கள் பணம் மட்டுமல்லாமல் உடல் நலமும், குடும்பமும் எவ்வளவு பாதிக்கப்படுகிறது என்பதையும் ஒரு கணம் நினைத்துப் பார்த்தால் குடிக்க மாட்டீர்கள் என நினைக்கிறேன்.

பின்னால் வரும் சமுதாயத்தைக் காப்பாற்ற வேண்டுமானால் நீங்கள் குடிக்காமல் இருக்க வேண்டும்.

சாராயம் விற்பவர்கள் அதிலே பல நச்சுப் பொருட்களைக் கலப்பதுடன், நம்மையும் ஏமாற்றிப் பணம் சம்பாதிக்கிறார்கள்.

சட்டம் போட்டுத்தான் உங்களைத் திருத்த வேண்டும் என்று நினைக்காமல் நீங்களே குடிக்கக் கூடாது என்று நினைத்தால் எங்களுக்கு வேலை எளிதாகும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நீங்கள் உழைத்தால் தான் இந்த உலகம் வாழ முடியும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். எனவே உங்கள் ஒத்துழைப்பு - வேலை செய்தால் மட்டும் போதாது, உங்கள் வீட்டாருக்குத் திருப்தி அளிக்கும் வகையில் உங்கள் பணம் வீட்டுக்குச் சென்று சேர வேண்டும்.

இன்று முதல் குடிக்க மட்டோம் என்று நீங்களே முடிவு செய்து கொள்ள வேண்டும்.

ஒரு வீட்டில் டாக்டரும் வக்கீலும் வரவில்லை என்றால்தான், அது சிறந்த குடும்பம் என்று சொல்வார்கள். அந்த வகையில் உங்கள் குடும்பம் அமைய வேண்டும் எனக் கேட்டுக் கொள்கிறேன்.

தமிழக அரசு தொழிலாளர்களுக்கு வேண்டிய உதவியை, இயன்ற அளவு செய்யும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

எதிர்காலத்தில் இந்த உலகம் படித்தவர்கள் கையில் என்பதையும், உழைப்பவரே உயர்வர் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

பல்லாவரம் கார்டன் உட்ராப் தொழிலாளர்களிடையே, முதல்வர் ஆற்றிய உரையில் ஒரு பகுதி.



# வாழ்வுப் பயணத்தின் தலைவாயிலில் தொடங்கும் திருப்பணியே வருங்கால வளர்ச்சியை வரையறுத்துக் காட்டும்!

உள்ளாட்சித் துறை அமைச்சர்
திரு **கா. காளிமுத்து** அவர்களின்
பட்டமளிப்பு விழாச் சிறப்புரை

**அ**ன்பார்ந்த கல்லூரி முதல்வர் அவர்களே! பேராசிரியப் பெருமக்களே! போற்றுதற்குரிய புலமைக்கலை பொலிய விளங்கும் பட்டதாரிச் செல்வியர்களே!

இவ்வாண்டு இங்கு நடைபெறும் இக்கல்லூரியின் பட்டமளிப்பு விழாவில் பங்குபெற்று உரையாற்றும் இனிய வாய்ப்பினை—அரிய வாய்ப்பினை வழங்கிய பொறுப்பாளர்களுக்கு என் மனங்கனிந்த நன்றியையும் வணக்கத்தையும் உரியதாக்கி மகிழ்கிறேன். ''பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள் செய்வதும் பாரினில் பெண்கள் நடத்த வந்தோம்; எட்டும் அறிவினில் ஆணுக்குப் பெண்ணிங்கு இளைப்பில்லை காண்'' என்ற பாட்டு வரிகளுக்கு உயிர்ப் படங்களாக, மாதர்கள் பேதையர்களல்லர், அவர்கள் மேதைகள் என்று மேதினிக்கு விளக்கும் வகையில், மதுரை மீனாட்சி கலைக்கல்லூரியில் விஞ்ஞானம், கலை, இலக்கியம் ஆகிய பல துறைகளில் நீங்கள் கற்ற கல்வியையும், பெற்ற பயிற்சியையும் தாழ்ந்து கிடக்கும் நமது மக்களுக்கும், வீழ்ந்து கிடக்கும் கலை உணர்வுகளுக்கும் உற்ற வழிகளில் எல்லாம் ஊக்கமூட்டி, உதவி, உயர்த்த வேண்டும் என்ற உன்னத நோக்கத்தோடு ஒளிரும் சுடர்களாகத் திகழும் உங்களைப் பாராட்டுவதிலும், எதிர்காலத்தைப் புதிர்காலமாக அல்ல-உதிர்காலமாக அல்ல-ஒளிமிகுந்த கதிர்களைக் காணும் காலமாக-பொற்காலமாக மாற்றிக்கொள்ளவும், பல்வேறு துறைகளிலும் நெறிகளிலும் வளமான வாழ்க்கையை நீங்கள் வகுத்துக்கொள்ளவும், கல்வி வீட்டைக் கடந்து, சமுதாய வீதிக்குப் பணியாற்ற நீங்கள் தொடங்கும் இந்தப் புனிதமான பொன்னாளில் உங்களை வாழ்த்தவும் வரவேற்கவும் கிடைத்த வாய்ப்பாகவே இதனைக் கருதுகிறேன்.

''பாண்டிய நாடே பழம்பதி'' என்றும், 'சந்தனப் பொதியச் செந்தமிழ் முனியும், சவுந்தர பாண்டியன் எனும் தமிழ்நாடனும், சங்கப்புலவரும் தழைத்தினிதோங்கிய மங்கல மாண்பின் மாநகர் மதுரை என்றும், ''பொருநர்த் தேய்த்த போரறுவாயில் திருவீற்றிருந்த தீதுதீர், நியமத்து மாடமலி மறுகிற் கூடல்'' என்றும் பாடல் சான்ற தமிழால் பாராட்டப்பெறும் கூடல் மாநகராகிய நமது மதுரையில், மீனாட்சி கல்லூரியில் பயின்றவர்கள் நீங்கள் என்பது உங்களுக்கு வாய்த்த பெரும் பேறாகும். ஆண்டநாள் ஆண்ட பாண்டிய மன்னர்கள், தூண்டிலில் சிக்காது நீந்திய மீன்களைத் தாங்கள் ஏந்திய கொடிகளில் பட்டொளி வீசிப் பறக்கச் செய்தார்கள். மீன் ஆட்சி செய்த மாட்சியைத்தான் மீனாட்சி என்றே அழைத்தார்கள். பாண்டிய மன்னவன் தன் கண்ணின் குளிர்ச்சியால் மக்களை மகிழ்ச்சியில் குலுங்க வைத்ததும், தன் கண்ணின் சிவப்பால் பகைவர்களைக் கலங்க வைத்ததும் நாடறிந்ததாகும். தண்ணீரில் அலைகின்ற மீன், தன் கண்பார்வையினாலேயே முட்டைகளிலிருந்து குஞ்சு பொரித்து வெளிப்படச் செய்து, பரிவோடு அவைகளைப் பாதுகாக்கும் என்று பாவலர்கள் பாடுகிறார்கள். அங்கும் இங்கும் செல்

# அரிய கல்வியே அறிவுக் கண்ணாகும்!

லாமல், அலையாமல், இருந்த இடத்திலேயே, கோழி, ஆர்வத்தோடு அமர்ந்து அடைகாக்கும். ஆமையோ, எங்கோ தான் இட்டு வந்த முட்டைகளை, இருந்த இடத்தில் இருந்தபடி எண்ணி எண்ணிப் பார்த்தே பொரிக்குமாம். இவ்வாறு பார்வையாலே மீனும், தன் வேர்வையாலே கோழியும், நினைப்புக் கோர் வையாலே ஆமையும் குஞ்சு பொரிக்கும் என் பார்கள். ''ஒளியால் உலகு ஈன்று உயிர் அனைத்தும் மீன்போல் செவ்வியுற நோக்கி அளியால் வளர்க் கும் அங்கயற்கண்ணி அன்னமே'' என்றும், மீன நோக்கின் மடவரல் என்றும், கயல்மாண்ட கண்ணி என்றும் தமிழ்ப் பெருமக்கள் மீனாட்சியின் மாட்சி யினைக் குறித்துள்ளார்கள். கயல் மீன் நீரோட் டத்தை எதிர்த்துச் செல்வதுபோல இளைஞர்கள் வாழ்க்கையில் இன்னல்களை எதிர்த்து நீந்த வேண்டும் என்ற அடிப்படையில் ஜப்பான் நாட்டு இளைஞர்கள் காகிதத்தினாலும் துணியினாலும் செய்த பெரிய கயல் மீன் வடிவம் கொண்ட கொடிகளைக் கட்டிப் பறக்கவிடுவார்களாம். கண்ணா லேயே இனத்தை வளர்க்கும் கயல்களைப் போல, நமக்குக் கண்ணாக விளங்கி நம்மைக் காப்பதே கல்விச் செல்வம்தான். எனவே, அரிய கல்வியே-கல்விக் கண்ணாக-அங்கயற் கண்ணாக-அறிவுக் கண் ணாக அமைந்த பெருமை மீனாட்சி என்ற பெய ருக்கே உண்டு என்று சொன்னால் அதற்குப் பொருத் தமும் பொருளும் இருக்கும் என்று நம்புகிறேன். கற்பிற் சிறந்த பெண்ணரசிகளின் கண்ணால் வாழ்வு பெறும் காரணத்தினால்தானே ஆற்றல்மிக்க ஆட வர்களும் கணவர் என்ற அரும்பெயரைப் பெறு கிறார்கள்.

உடல் அமைப்புக் காரணமாக ஆடவர், மகளிர் என்ற வேறுபாடுகளைக் காட்டி, உயர்வு சிறப்பு என்ற பேதங்களைச் சொல்லி வீட்டினில் பெண்களைப் பூட்டி வைத்தவர்களும், மாதர் தம்மை இழிவு செய்த மடமைகளும் கொடுமைகளும் இப் போது புதைந்து மறைந்து விட்டன. இவர்கள் மும்தாஜுக்குத் தாஜ்மகாலையும் கட்டுவார்கள். உயிரோடு இருக்கும் அனார்கலிக்குக் கல்லறைகளை யும் கட்டுவார்கள் என்று சொல்லும்படி ஏட்டிலே பெண்களைத் தெய்வம் என்றும் வீட்டிலே பேய்கள் என்றும் விரட்டும் இரட்டை நாடகப் போக்கும் இருபதாம் நூற்றாண்டில் கலந்து வருகிறது. ''அச்ச மும் மடமையும் இல்லாத பெண்கள் அழகிய தமிழ்நாட்டின் கண்கள்'' என்றும், ''கல்வியில்லாத பெண்கள் களர்நிலம், அந்நிலத்தில் புல் விளைந்திட லாம் நல்ல புதல்வர்கள் விளைவதில்லை'', ''படியாத பெண்ணினால் தீமை; என்ன பயன் விளைப்பாள் அந்த ஊமை?'', ''படியாத பெண்ணாயிருந்தால் கேலி பண்ணுவார் ஊரார் தெரிந்தால்'', ''கடல் சூழ்ந்த இத்தமிழ்நாடு, பெண்கல்வி பெண்கல்வி என்கின்ற தன்போடு'', என்ற பாவேந்தரின் பாட்டுவரிகள், பழைய சமுதாயத்தின்மீது வீசிய சாட்டை வரிகளாகப் படிந்து மெல்ல மெல்ல இப் போது புதிய சமுதாயத்தை நம்முன்னே பூக்கச் செய்து வருகிறது. ஆயிரம் நிலாவைப் போல அறி வாலயங்களிலிருந்து இன்று முதல் நீங்கள் அணி வகுத்து நடத்தப் போகும் இந்த வெற்றி உலா தமிழகத்துக்கு இணையில்லாத பெருமிதத்தை ஏற்படுத்த வேண்டும்.

இந்த இருபதாம் நூற்றாண்டு உலக வரலாற்றி லேயே மாற்றங்களையும், மறு மலர்ச்சிகளையும், புதுமைப் போக்குகளையும், புரட்சிப் பூக்களையும் கொழிக்கும் நூற்றாண்டாகும். பேரறிஞர் அண்ணா வின் மொழியில் சொன்னால் சாமான்யர்களின் சகாப்தம் இது. பகுத்தறிவும் விஞ்ஞானமும் பழுத் துக் குலுங்கும் பருவம் இது! ஏழையின் சொல் அம்பலம் ஏறும் காலம்! எத்தர்கள் ஓடி ஒளியும் காலம்! எங்கும் நாம் கேட்கலாம், பொய்யும் புரட்டும் அஞ்சி இடுகின்ற ஓலம்! பொன்யுகம் மலர்ந்துள்ளது-புதுயுகம் புலர்ந்துள்ளது. புது ராகங்கள்-பூபாளங்கள் ஒலிக்கின்றன—அதிசய ராகங்கள் அல்ல இவை; அவசிய ராகங்கள். அங்கிங் கெனாதபடி எங்கும் பாடப்படுகின்றன. அரசும் ஆட்சியும் அணுயுகப் பொறிகளின் முரசும் நிறைந்து முழங்கும் இன்றைய அறிவியல் உலகம் மகத்தான வெற்றிகளைக் குவித்து வருகிறது.

தத்துவத்தின் கதை என்னும் நூலில் வில்ட்யூ ரண்ட் என்னும் பேராசிரியர் ''மனித அறிவானது, மகத்தான அளவிற்கு இப்போது மலர்ந்து மணம் பரப்புகிறது. ஒவ்வோர் அறிவியலும் ஒன்றல்ல, இரண்டல்ல, பன்னிரண்டைப் பெருக்கி விட்டி ருக்கின்றது. ஒரு துறை மற்றொன்றைவிட மிகவும் நுண்ணியதாக அமைகிறது. தொலை நோக்காடி வானத்திலுள்ள விண்மீன்களையும், அவற்றின் இயக்கங்களையும் பற்றி மனித நினைவுக்கு எட்டாத பல செய்திகளைச் சுட்டிக் காட்டுகின்றது. நில நூல் இதற்கு முன்பெல்லாம் ஆயிரம் என்ற அளவில் பேசப்பட்டு வந்தவைகளை, நூறு நூறாயிரம் என்று பேசும்படிச் செய்துவிட்டது. ஆயிரங்களைப் பாயி ரங்களாகப் படித்தது போய் அரிச்சுவடிகளே மிலி யன்களில் இப்போது ஆரம்பமாகின்றன. பௌதிக நூல், அணுவுக்குள் ஒரு பேருலகையே அடக்கிக் காட்டியிருக்கிறது. உயிர் நூல், உடலின் ஒரு சிறு நுண்ணறையில் ஒரு சிறிய உலகையே சித்திரிக் கிறது. உளவியல் நூல், ஒவ்வோர் உறுப்பிலும் எல்லையற்ற மறைபொருள் நுட்பத்தினை உணர்த்து கிறது. மனநூல், ஒவ்வொரு கனவிலும், உணர்வி லும் விந்தையான நிகழ்ச்சிகளை விவரிக்கின்றது. மனித நூல், ஐயத்திற்கு இடமின்றி, மனிதனின் பழைமையைப் புதிதாகப் புகட்டுகின்றது. தொல் பொருள் நூல், புதைந்த நகரங்களையும், மறைந்த



# சாமான்யர்களின் சகாப்தம் இது!

அரசுகளையும் அகழ்ந்தெடுக்கின்றது. வரலாற்று நூல்,வாழ்வுப் பழைமையின் இடறல்களை வரைந்து காட்டுகின்றது. புதிய கண்டுபிடிப்புகள், வாழ்க்கையையும், போரினையும், சிக்கலாக்குகின்றன. பொருளியற் கொள்கைகள், சூழ்நிலைகளை மாற்றி உலகத்தையே நிலைகலங்கச் செய்கின்றன. டாக்டர் வி.சி. குழந்தைசாமி அவர்கள் குறிப்பிடுவது போல பல்வேறு துறைகளில், ஏராளமான ஆய்வு நிலையங்களில் தாராளமாக எண்ணற்ற ஆய்வாளர்கள் புதியன காணும் முயற்சியில் உழைத்தும் இரவு பகலாக விழித்தும் ஈடுபட்டிருக்கின்றனர். பொறியியல் போன்ற துறைகளில் 10 ஆண்டுகட்கு ஒருமுறை இரட்டிப்பாகும் அளவிற்கு உண்மை அறிவு ஊட்டமாக வளர்கின்றது. இன்னும் 10 ஆண்டில் அறிவு இன்றிருப்பது போல் இரண்டு மடங்காகி விடும்.

உயிரியல், பாலியல், நுட்பவியல் போன்ற முறைகளில் நாகரிகம் தொடங்கிய காலத்திலிருந்து 1970-ஆம் ஆண்டு வரை ஏற்பட்ட வளர்ச்சியைவிட 1970-ல் இருந்து கடந்த ஏழு ஆண்டுகளில் ஏற்பட்ட வளர்ச்சியை ஏராளம் என்கிறார்கள். இன்றைய அறிவு வளர்ச்சியின் வேகம், உண்மையிலேயே எண்ணிப் பார்த்தால் மலைப்பைத் தரும்; சிந்தை , அணு ஒவ்வொன்றுக்கும் சிலிர்ப்பைத் தரும். இதுவரை மானிட சமுதாயம் கண்டிராத மகத்தான வளர்ச்சி வேகத்தை வளர்ந்து வரும் நாடுகள் நடத்தி வருகின்றன.

வாழ்வின் பல துறைகளில், மனித ஆற்றலுக்கு அப்பாற் பட்டவை என்று அண்மைக்காலம் வரை நாம் நினைத்திருந்தவையெல்லாம், இன்று நடப்பவைகளாகி விட்டன. கனவுகளாக, கவிஞர்களின் கற்பனைகளாக நேற்று வரை இருந்த நிலைகள் பல, இன்று கண்முன் காட்சிகளாக அறிவாற்றலின் சாட்சிகளாக நிற்கின்றன. நில உலகத்திலிருந்து நிலா உலகுக்குச் சென்று திரும்பி வந்த மானிடம் விண்ணும் வெளியும் தனதே என்று வெற்றி நடை போடுகிறது. மரணமில்லாப் பெருவாழ்வுகூட மனிதனுக்கு இயலாததல்ல என்ற அளவிற்கு அறிவுலகம் வளர்கிறது. வளர்ச்சி, வேகம், எண்ணத் தொலையாத நிலையை எட்டிப் பிடித்திருக்கிறது. இந்தக் கால கட்டத்தில்-வேக யுகத்தில், விரைவுப் போட்டியில் நீண்ட உறக்கத்திலிருந்து நாம் கண் விழித்து ஈடில்லாத இந்த அறிவுப் பயணத்தில் நாமும் இணைந்து கொள்ள வேண்டாமா என்று எண்ணுகிறோம். கண்களைப் பிசைகிறோம். கைகளை அசைக்கிறோம், ஊர்ந்தும், தவழ்ந்தும் எழத் தொடங்குகின்ற இந்த வேளையில் நமக்காகக் காத்திருக்கும் வேலைகளை—கடமைகளை பட்டதாரிகளாகிய நீங்கள் பெரிதும் உணர்வீர்கள் என்று நம்புகிறேன்.

இந்த நூற்றாண்டு முடிந்து புதிய நூற்றாண்டு மலர்வதற்கு இன்னும் கால் நூற்றாண்டுக்காலம் கூட இல்லை. இந்த இருபத்திரண்டு ஆண்டுகளில் நீங்கள் உருவாக்குகிற உலகம் தான் உண்மையிலேயே புதிய உலகமாகும். சரியாகச் சொன்னால் புதிய நூற்றாண்டைப் பெற்றுத் தரப்போகும் தாய்க் குலமே நீங்கள்தான்! எனவே இந்தக் காலத்தில் நீங்கள் செய்வதும், செய்யாததும்தான் வருங்கால வாழ்வை—தமிழ் வையகத்தின் வளர்ச்சியை வரையறுத்துக் காட்டும் என்பதை மட்டும் நீங்கள் மறந்து விடாதீர்கள். நீங்கள் இனி ஆட்படுகின்ற சோதனைகள்தான், வருங் காலத்திற்குச் சாதனைகள். நீங்கள் எடுத்தெறியப் போகும் தடைக்கற்கள்தான் நாளைய நல்வாழ்வு மண்டபத்திற்கான படிக்கற்கள். இந்த நிலையில் சிறிது கண் அயர்ந்தால், கவனம் குறைந்தால், நாம் பெரிதும் பின்தங்கி விடுவோம். நெஞ்சில் உரமும், நினைவில் உறுதியும், அறிவில் தெளிவும், சமுதாயத்தின்மேல் பரிவும் கொண்டு வறுமை, வேலையின்மை, பசி, பிணி, பொருளாதார பேதங்கள், சாதி சமயத் தளைகள், மூட நம்பிக்கைக் களைகள், பழமையில் கொண்டுள்ள கண்மூடித்தனமான பற்றுதல் முதலியவற்றைப் போராடிப் போராடிப் பூக்காமல், காய்க்காமல் வேரோடு பறித்தெடுக்க அறிஞர்கள், கலைஞர்கள், விஞ்ஞானிகள், தொழில் நிபுணர்கள், ஆகியோர் அனைவரும் இணைந்து பணியாற்ற வேண்டும். அத்தகைய பல்கலைவாணர்களின் பண்ணைகளாகத்தான் கல்லூரிகளும், பல்கலைக் கழகங்களும் பரிமளிக்க வேண்டும்.

இன்றைய வாழ்வின் இமாலயச் சிறப்பு மக்களாட்சியின் மலர்ச்சியேயாகும். மன்பதை எங்கணும் பெருமன்னர், குறுமன்னர், சிறு மன்னர்கள் ஆட்சிகளும் அடக்கு முறைகளும் சிதைந்து மறைந்து



# எடுத்தெறியப் போகும் தடைக் கற்கள்
# நாளைய வாழ்வு மண்டபத்தின் படிக் கற்கள்!

சாமான்யர்களின்—எளிய மக்களின் வாக்குரிமையால் உருப்பெறும் ஆட்சி சரித்திரப் புகழ்பெற்று நிமிர்ந்து நிலவுகிறது. மக்களாட்சி என்பது வளர்ந்து வரும் நாகரிகம் நமக்கு வழங்கிய நன்கொடையாகும். பேரறிஞர் அண்ணா ஒருமுறை கூறினார்: ''மக்களாட்சி என்பது வாழ்க்கையின் நடைமுறை' என்று! பரிகாரம் காணலாம் என்ற நம்பிக்கையோடு பஞ்சை பராரிகளும் கூட ஆட்சியாளர்களை அணுகி நலம் பெற வேண்டும் என்பதுதான் அதன் அடிப்படை. யாரோ ஆள்கிறார்கள், எவரோ நடத்துகிறார்கள், ஏதோ நடக்கிறது; எது வந்தால் என்ன? எங்களால் என்ன முடியும்? என்ற முனகல்களை—ஏக்கங்களை—பெரு மூச்சுகளை, தழதழத்த குரலில் வெளிப்படுத்தப்படும் தாபங்களை இடி முழக்கங்களாக, களிறின் பிளிறல்களாக, சிங்கங்களின் கர்ச்சனைகளாகக் கருதி சமுதாயப் பணிக்கு நம்மை ஆளாக்கிக் கொள்ள சமவாய்ப்பை வழங்குவது மக்களாட்சி அறிஞர்கள், மக்கள், அதிகாரிகள், அமைச்சர்கள் என்ற நான்கு தூண்கள் ஜனநாயக மண்டபத்தைத் தாங்கும் என்பார்கள். எனவே எல்லோரும் பங்குபெறும் பொது ஆட்சி அது.

மக்களாட்சியால் மட்டும் வேண்டிய பலன்களை முழுவதுமாக நம்மால் எய்த முடியுமா என்று ஒரு வினாவை எழுப்பி, மக்களாட்சி என்பது ஓர் உருவமே தவிர உள்ளீடாகாது என்று கூடச் சிலர் கூறுவார்கள். அந்த உருவத்துக்கு உயிரூட்டுகின்ற, உயிரோட்டம் தருகின்ற உள்ளீடாகச் சுரண்டலற்ற பொருளாதார அமைப்பைப் பொருத்த வேண்டும் என்பதும் நம் முன்நிற்கும் நடைமுறைச் சிந்தனையாகும். 'எல்லார்க்கும் எல்லாம்' என்றிருப்பதான ஏற்றத் தாழ்வில்லாத இந்தப் பொதுவுடைமை இலட்சியத்தைக் கடைப்பிடிக்க வேண்டும் என்பது அறிவுலகம் வற்புறுத்தும் நெறியாகும். இதுவே தந்தை பெரியாரின், பேரறிஞரின், புரட்சித் தலைவராகிய நம் பொன்மனச் செம்மலின் நோக்கும் போக்குமாக இப்போது நடந்து கொண்டிருக்கிறது.

மூடநம்பிக்கைகளுக்கு முடியாக அல்லது அடியாக விளங்குவதே சாதி என்னும் இந்த வியாதி தான். சாதிகள் அழியும்போது, அதைத் தொடர்ந்து சர்வ மூடநம்பிக்கைகளும் சடசடவெனச் சரிந்து தவிடுபொடியாகும். தாய்க்குலம் இந்தச் சீர்திருத்தத்தை இருகை நீட்டி வரவேற்க வேண்டும். வரவேற்பதோடு இந்தப் பணியில் முனைந்தும் ஈடுபட வேண்டும். இது போன்ற துறைகளில் இந்திய மக்களின் நலனுக்கு உழைப்பதற்கு வேண்டப்படுபவன் ஆண் மகன் அல்லன், சிங்கம் போன்று செயல்படும் பெருமகளே ஆவாள், என்று விவேகானந்தர் நிவேதிதா அம்மையார்க்கு எழுதிய கருத்தையும் இங்கே நினைவூட்ட விரும்புகிறேன். அரசியல், பொருளியல், சமுதாய இயல் மாற்றங்களுக்கெல்லாம் ஆற்றல் மிக்க கருவியாகவும், வாளாகவும், கேடயமாகவும் இருந்து நம்மை வாழ்விப்பதே மொழியும், கலையும்தான். எனவே தான் மொழியையும், கலையையும் நமது இருவிழிகளாகப் போற்றி வருகிறோம். தமிழின் வாழ்வு தமிழர் வாழ்வு! கலையின் வெற்றி கடமையின் வெற்றி என்பதைத் தாரக மந்திரங்களாக நாம் கருத வேண்டும். தமிழுக்கும் கலைக்கும், தாய்க்குலத்துக்கும் உள்ள நீங்காத தொடர்பை நீங்கள் அறியாதவர்களும் இல்லை.

''பண்டு வந்த செழும் பொருளே, பார் அடர்ந்த இருட் கடலில் படிந்த மக்கள் கண்டு வந்த திருவிளக்கே, களிப்பருளும் செந் தமிழே'' என்றும் ''திங்களொடும் செழும் பரிதி தன்னோடும் விண்ணோடும், உடுக்களோடும், மங்குல் கடல், இவற்றோடும் பிறந்த தமிழ்'' என்றும் நம் இன்பத் தமிழ் மொழியின் இயல்புகளை எப்போது எவர் எடுத்துச் சொன்னாலும் வெறும் தமிழ் என்று அடைகொடுக்காமல் நம் நறுந்தமிழைக் குறித்ததே இல்லை. தீந்தமிழ், தண்டமிழ், இன்தமிழ், செந்தமிழ், தென்தமிழ் என்று அழைத்து மகிழ்ந்ததோடு இல்லாமல் அவ்வப்போது சங்கம் வைத்துப் புலவர்களைக் கூட்டித் தங்கத் தமிழுக்கு மேலும் தகத்தகாயத்தைச் சேர்த்து வந்திருக்கிறார்கள். உலக மொழிகள் மூவாயிரத்துள் தொன்மை, முன்மை, எண்மை, ஒண்மை, இளமை, வளமை: தாய்மை தூய்மை, செம்மை, மும்மை, இனிமை, தனிமை, பெருமை, திருமை, இயன்மை, வியன்மை ஆகிய 16 சிறப்புக்களையும் கொண்டது நம் உயர் தனிச் செம்மொழியாகிய ஒண் தீந்தமிழ் என்று மகிழ்ந்து பாராட்டியிருக்கிறோம். இணையில்லாத கவிதைகளும் ஈடு இல்லாத காவியங்களும், படிப்பவர் நெஞ்சத்தைப் பாகாக உருக்குகின்ற பக்திப் பனுவல்களும் இங்கே ஏராளம். ஆங்கிலத்தை வணிக மொழி என்றும், லத்தீனைச் சட்ட மொழி என்றும், இத்தாலியைக் காதல் மொழி என்றும், பிரெஞ்சைத் தூதுவர் மொழி என்றும், ருசிய, ஜெர்மானிய மொழிகளை விஞ்ஞான மொழிகள் என்றும் சொல்லும்போது நம் இன்பத் தமிழை இலக்கிய மொழி என்று பெருமையாகக் குறிப்பிடலாம் என்பர்.

விடுதலை வாழ்வில் உரிமைக் காற்றை நுகர்ந்து கொண்டு வாழும் மக்களின் வாழ்விலும் கலையிலும் எண்ணங்களிலும், எழுத்துக்களிலும், ஆட்சி நிறுவனங்களிலும், அரசுப் பொறுப்புகளிலும், அறமன்றங்களிலும், ஆலயங்களிலும், தாய்மொழி தலைமையான இடத்தைப் பெற வேண்டுமென்பது இயற்கையாகும். இயல்பான உண்மையுமாகும்; உடனடியாக நிறைவேற்றப்பட வேண்டியதுமாகும்; கடந்த முப்பது ஆண்டுகளாக எங்கும் தமிழ், எதிலும் தமிழ் என்ற ஆர்வக் குரல் எதிரொலித்து வந்தாலும் முனைப்பாக முன்னேற்றம் இல்லையென்பதை நான் குறிப்பிடத்தான் வேண்டும். குறிப்பாக மகளிர் இனம், மனம் வைத்தால்தான் தாய் மொழித் தலைமை இன்னும் விரைவும், வேகமும் பெறும். தமிழ் வளர்ச்சி என்றால் அது தமிழாசிரியர்கள், புலவர்கள் இவர்களுடைய பொழுதுபோக்கு என்றும் மற்றவர்களுக்கு அதில் சற்றும் தொடர்பில்லை என்பது போலவும் நம் நாட்டில் கருதப்படுகிறது. உங்களைப் போலப் பல்வகை அறிவுத் துறைகளிலே தேர்ச்சி பெற்ற பட்டதாரிகள், விஞ்ஞானிகள், பொறியாளர்கள், மருத்துவர்கள், வரலாற்றுத் துறையினர்கள், தொழில்நுட்ப வல்லுநர்கள், கலைஞர்கள், அலுவலர்கள், பொருளாதார வல்லு

நர்கள் என்று பல்வேறு துறைகளில் தேர்ச்சி பெற்ற மதிவாணர்கள் அனைவரும் குறிப்பாக, சிறப்பாக நம் நாட்டு ஆடவர், மகளிர்களாகிய அனைவரும் தமிழுக்குத் தலைமை தரும் திருப்பணிக்குத் தங்களை ஆளாக்கிக் கொள்ள வேண்டும்.

நேற்றுப் பிறந்த புதுமொழிகள் எல்லாம் பொது மொழிகள் என்று ஆர்ப்பரிக்கும்போது ஆற்றல் தமிழாகிய முதுமொழிக்கு அழிவா வருவது?, என்று கல்லூரிப் பருவத்தில் கனல் சிந்திய கண்களோடு தழும்புகள் பெற்றுத் தமிழ் கற்ற மாணவன் நான் என்பதை நீங்கள் அறிவீர்கள். பெருமைக்காக நான் இதைப் பேசவில்லை. ஆனால் ஒன்று, எங்களுக்கு அப்போது உணர்வூட்டியவர்களெல்லாம், 'செயல்' என்று வந்தபோது 'புயல்' என்று உதவுவார்கள் என்று எண்ணிக் கொண்டிருந்தேன். ஆனால் அவர்களோ முயலாகப் பதுங்கிக் கொண்டார்கள். எனவேதான் சொல்லுவது போலச் செய்யும் ஆர்வமும் பெருகவேண்டும் என்பதற்காக இதைக் குறிப்பிட்டேன்.

இயற்றமிழ், இசைத்தமிழ், நாடகத்தமிழ் போல, அறிவியல் தமிழ், பொருளியல் தமிழ், ஆட்சித் தமிழ் முதலிய பகுதிகளைக் கலை அறிவியல் புலவர்கள் வளர்த்தாக வேண்டும். கதையும் கவிதையும் கூட மொழிப் புலவர்களால் மட்டுமே வளர்க்கப்படுவதல்ல; பல்வேறு துறைகளில் உள்ள படைப்பாளர்களால்தான் வளர்கிறது.

## பட்டதாரிச் செல்வியர்களே !

இதுகாறும் உலக நிலைகளையும் மக்கள் மனப்போக்கில் விளைந்த-விளைய வேண்டிய கருத்துக்கள் சிலவற்றையும், அவைகளை நிறைவேற்ற வேண்டிய பணியில் நீங்களும் சார்ந்திருக்கிறீர்கள் என்பதையும் நினைவூட்டினேன். 'எல்லாம் சரி! பட்டங்களைப் பெற்று விட்டோம். சமுதாயத்தை நோக்கி நடைபோடுகிறோம், கல்வி கற்ற எங்கள் வாழ்வுக்கு என்ன வழி, இந்தக் கவலையான வினாவைச் சுமந்து கொண்டிருக்கிறோம் என்பதற்கறிகுறியாகத்தானே கறுப்புக் கவுனையும் காகிதச் சுருளையும் நாங்கள் ஏந்தி நிற்கிறோம். கற்றபின் நிற்க என்பது இது தானா?' என்று நீங்கள் கேட்கக்கூடும். நிலைமையை அரசு தெரிந்துகொண்டிருக்கிறது. நிச்சயமாக ஆனால் நிதானமாக நல்ல வழி வகைகளை வகுக்கின்ற பணிகளை நாம் முனைந்து செய்து கொண்டிருக்கிறோம். வெற்றி உருவாகும் என்றும், வாய்ப்புகள் அதனால் விரிவாகும் என்ற நம்பிக்கையை மட்டும் உங்களுக்கு நான் வழங்கக் கடமைப்பட்டுள்ளேன். எனினும் இது தொடர்பாக நம் அருமை நாவலர் அவர்கள் இதே பல்கலைக் கழகத்துப் பட்டமளிப்பு விழாவில் ஏறத்தாழ 10 ஆண்டுகளுக்கு முன்னர் கூறியதை நினைவூட்ட விரும்புகிறேன்.

''இதற்கு முன்பெல்லாம் கல்லூரிப் படிப்பு முடிந்து பட்டம் பெற்றதற்குப் பிறகு, அரசாங்க வேலை பார்க்க முயலுதல், அது கிடைக்காவிட்டால் தனியார் துறையில் வேலை பார்க்க முயலுதல், அதுவும் கிடைக்காவிட்டால் பிறரோடு கூட்டுச் சேர்ந்து வேலை செய்ய முயற்சி தொடங்குதல், அதுவும் முடியாவிட்டால் தாமே முயன்று ஏதேனும் ஒரு வேலை செய்ய முற்படுதல் என்ற நிலை இருந்து வந்தது. அந்த முறையில் வேலைகளைப் பெறுவதற்கான வாய்ப்பும் வசதிகளும், இப்போது நாளுக்கு நாள் குறைந்து வருவதோடு அவை கிடைக்கும் என்ற நிலைமையில் நம்பிக்கையில்லாத நிலையும் ஏற்பட்டிருக்கிறது. இன்றைய நாட்டின் நிலைமையையும், வேலை வாய்ப்புச் சூழ்நிலையையும் பார்க்கும்போது, அரசு வேலையைத் தேடத் தொடங்கித் தங்கள் வேலைக்கு வருவதை விட, தங்கள் வேலையிலிருந்து அரசு வேலைக்குப் போக முற்படுவதுதான் சிறந்த பயன் அளிப்பதாக இருக்கக்கூடும். தத்தம் துறையில் அறிவும் ஆற்றலும் பெற்ற ஒவ்வொருவரும் தமக்குத் தாமே வேலை தேடிக் கொள்ள முடியுமா என்று காண்பதும், அது இயலாத நிலையில் பிறரைச் சேர்த்துக் கொண்டு பார்க்க இயலுமா என்பதை எண்ணுவதும், அதுவும் இயலாத நிலையில், தனியார் துறையில் வேலை கிடைக்குமா என்று பார்ப்பதும், அதுவும் இயலாத நிலையில் அரசுத் துறையில் வேலை கிடைக்குமா என்று முயல்வதும் பெரிதும் பயனுள்ளதாக இருக்கும்'' என்ற கருத்தை உங்கள் முன் படைக்கிறேன்.

யான், எனது என்னும் செருக்கு என்பார்களே அதைத் தொலைத்து யாம், எமது என்னும் கூட்டுப் பொறுப்பை எல்லோரும் சுமந்து கொண்டு, உழைக்கும் திருப்பணிக்கு நீங்கள் முற்பட வேண்டும். வாழ்வுப் பயணத்தின் தலைவாயிலில் முதற்படியில் அடி எடுத்து வைக்கும் பட்டதாரிகளாகிய உங்கள் பயணம் சிறக்கட்டும்! கனவுகள் பலிக்கட்டும்! உங்கள் அறிவுத் திறமையும், ஆற்றல் அருமையும் நாட்டு நிலையை உயர்த்த வேண்டும், மானிட சமுதாயத்தின் மகத்துவத்துக்கு மேலும் ஒளியூட்ட வேண்டும்.

என் இனிய நண்பர் திரு. நா. காமராசர் எழுதுவாரே, ''அனைவருமே மனிதர் என்னும் சம நீதி தழைக்கட்டும்; அதுவரைக்கும் ஐக்கிய நாட்டுக் கொடி அரைக் கம்பத்திலேயே பறக்கட்டும்'' என்பது போன்ற இலட்சிய வீறும், கடைசி மனிதனுக்கும் கடைத்தேற்றம் நல்கும் உள்ளத்து உணர்வுகள் ஓங்கவும், எல்லாருடைய வாழ்விலும் இன்பம் மலரவும் உங்கள் பணிகள் வெல்க என்றும், உங்கள் வாழ்வு வெற்றிப் பெருமிதத்தோடு விளங்க வேண்டும் என்றும் வாழ்த்தி அன்னையும் ஆசானும் ஆருயிரைக் காப்பானும் என்னும்படி அமைந்தீர்; இப்படியே பெண்ணுலகம் ஆகும் நாள் எந்நாளோ, அந்நாளே துன்பமெலாம் போகும் நாள்—இன்பப் புதியநாள் என்று போற்றி, பேரறிஞர் அண்ணா அவர்கள் அண்ணாமலைப் பல்கலைக் கழகப் பட்டமளிப்புப் பேருரையில் கூறியபடி—

மேதகு பணியினைச் செய்திடத்தான் நீவிரெல்லாம் பட்டத் தகுதிப்பேறு பெற்றுச் செல்கின்றீர் என்பதனை மறவாதீர்! அழியாப் புகழ் படைத்த அறிவாலயத்தின் பெருந்திறனும் பேருணர்வும் உமக்குப் பெருந்துணை புரிந்திடும் என்பது உறுதி! எதையும் வெற்றியாக்கும் பேருறுதி நிச்சயம் உம்மிடம் உள்ளது. வாழ்வினைத் தொடங்கிடுங்கள்: வாழ்வுக்களம் நோக்கிச் சென்றிடுவீர், வென்றிடுவீர்!

வளமெலாம் பெற்ற வாழ்வு—புகழொளி மயமான வாழ்வு—உலக முழுமைக்கும் அறிவொளி பரப்பிடும் பெருமித வாழ்வு வாழ்வீராக!

வாழ்த்துகின்றேன் உம்மை, வாயார, மனதார, மகிழ்ச்சிப் பெருக்கோடு வாழ்த்துகின்றேன்! வெற்றி நடை போட்டிடுங்கள். சீரணி வகுத்துச் சென்றிடுங்கள்!

கவலையற்ற, களிப்பு நிறைந்திட்ட சமுதாய நலன் நோக்கி—புன்னகைபுரி நோக்கி நடவுங்கள்! இன்பபுரிப் பயணம் தொடங்கிடுங்கள்! கவலையற்ற சமுதாயம் சமைத்திடுங்கள்! என்று கூறி வாழ்த்துகிறேன். வணக்கம்.

(மதுரைப் பல்கலைக் கழகம் மீனாட்சி அரசினர் மகளிர் கல்லூரியில் மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு. கா. காளிமுத்து அவர்கள் 6—2—1978 அன்று ஆற்றிய பட்டமளிப்பு விழாச் சிறப்புரை.)

# இன்று ரூ. 50 - சிறியதுதான் ஆனால் நாளை ரூ. 1,000/- மிகப்பெரியதாகும்.

**டி.என்.எஸ்.சி. வங்கியின் புதிய மற்றும் உயரிய திட்டத்தின் கீழ்**

# SP 20 R

மாதம் ரூ. 50/- வீதம் 360 மாதங்களுக்கு நீங்கள் முதலீடு செய்து, அதன் பிறகு, (அதாவது 361 வது மாதத் துவக்கத்திலிருந்து) மாதம் ரூ. 1,000/- வீதம் என்றும் பெறலாம். ஆம்! ரூ. 1,000/- ஆயிரம் ரூபாய்.

**2000** கடைசி தவணையை நீங்கள் செலுத்தும்போது ரூ. 2,000/- ரொக்கமாக அளிக்கப்படும்.

மாத ஓய்வூதியமான ரூபாய் ஆயிரத்திற்குப் பதிலாக ரூ. 1,17,000 எப்போது வேண்டுமானாலும் ரொக்கமாகப் பெறலாம். **1,17,000**

**1/2 or 1/5** விகிதப்படியான ஆதாயத்திற்கு விகிதப்படியாக செலுத்துக.

வரி காரணங்களுக்காக, ஆண்டுக்குச் சேரும் வட்டிக்கான சான்றிதழ்களைப் பெற்றுக்கொள்ளலாம். **வரி**



உங்கள் ஆதரவிலுள்ளோர் பயனடையத்தக்க வகையில் கூட்டுக் கணக்கும் வைக்கலாம்.

360 மாதங்களுக்குப்பின் மேற்கூறிய அனைத்துப் பலன்களையும் பெற, மாதத் தவணையில் பணம் செலுத்துவதற்குப் பதிலாக, ரொக்கமாக இன்றே ரூ. 5630/- செலுத்தினாலும் போதுமானது. **5630**

**10¼%.9½%.10¾%.** இந்தத் திட்டம் இந்திய ரிசர்வ் வங்கியின் கட்டளைகளுக்குட்பட்டதாகும்.

விபரத்திற்கும், கணக்கு திறப்பதற்கான படிவங்களுக்கும் அணுகுக.

TNSC BANK

## தமிழ் நாடு மாநில கூட்டுறவு வங்கி லிமிடெட்.,

379, N.S.C. போஸ் ரோடு, சென்னை-600 001
போன்: 20367
அல்லது சென்னையில் உள்ள அதன் 26 கிளைகளிலொன்று.

ELEGANT

# நீதி மன்றங்களில் தமிழ்

'எங்கும் தமிழ்—எதிலும் தமிழ்' என்ற நிலை வர வேண்டும் என்று மாண்புமிகு தமிழக முதல்வர் திரு எம். ஜி. ஆர். அவர்கள் 15.1.1978 அன்று வள்ளுவர் கோட்டத்தில் நடைபெற்ற திருவள்ளுவர் திருநாளில் முழக்கமிட்டார்கள். ''நீதிமன்றங்களில் தமிழில் தீர்ப்பு வழங்கப்பட வேண்டும் என்று நாம் கூறியதை மறந்து விடவில்லை; நீதிபதிகள் நன்றாகத் தமிழ் தெரிந்தவர்களாக இருக்க வேண்டும்'' என்றும் எடுத்துரைத்தார்.

'நீதிமன்றங்களில் தமிழ்' என்ற சீரிய இலட்சியம் முழுமையாக நிறைவேற—சட்டங்கள், மக்களுக்குப் புரியும் வகையில் — தமிழில் சட்டங்கள் மொழிபெயர்க்கப்பட்டு வெளிவர வேண்டும். தமிழ் மாநிலச் சட்டத்துறை ஆட்சி—மொழி ஆணையம் [State Official Language (Legislative) Commission] சட்டங்களை தமிழில் மொழிபெயர்க்கும் பொறுப்பான பணியை ஆற்றி வருகிறது. அவ்வாணையத்தின் தலைவர், ஓய்வுபெற்ற உயர்நீதி மன்ற நீதிபதி திரு எஸ். மகராஜன் அவர்களை, 'தமிழரசு' இதழின் சார்பில் பேட்டி கண்டபொழுது, அவர் தெரிவித்த சிறந்த, பயனுள்ள கருத்துக்கள் இங்கே தொகுத்துத் தரப் பெற்றுள்ளன.

கேள்வி : ''நீதி மன்றங்களிலே தமிழ்'' என்ற கொள்கை நடைமுறையில் செயல்படுவது இடர்ப்பாடுகள் நிறைந்தது என்று சிலர் கூறுகிறார்களே? அக்கூற்றுப் பற்றித் தங்களது கருத்து என்ன?

பதில் : தமிழ் மொழியில் நீள அகல ஆழங்களைத் தெரியாதவர்களும், ஆங்கிலத்திற்குப் பதில் தமிழே தீர்ப்பு மொழியாகிவிட்டால் தமிழில் தம்மால் வாதாடவோ தீர்ப்பு எழுதவோ முடியாது என்று அஞ்சுகிறவர்களும், இப்படியெல்லாம் ஐயப்படுவது இயல்புதானே! நான் எட்டாண்டுகளாக வழக்கறிஞனாகவும் முப்பத்திரண்டு ஆண்டுகளாக நீதிபதியாகவும் இருந்தவன். என் இனத்தைச் சேர்ந்தவர்கள் பெரும்பாலோர் எப்போதும் மாறுதல்களை ஏற்பதற்குத் தயங்கத்தான் செய்வார்கள். ஆனால், மாறுதலின் இன்றியமையாமையைச் சமுதாயமும் அரசும் உணர்ந்து, மாறுதலைச் செயற்பாட்டுக்குக் கொண்டு வந்த பிறகு, என் இனத்தவர்கள் ஆர்வத்தோடு மாறுதலை ஏற்றுக் கொள்ளவே செய்வார்கள்.



மாநில (சட்டத்துறை) ஆட்சிமொழி ஆணையத் தலைவர்

**ஜஸ்டிஸ் எஸ். மகராஜன்**

சிலர், இருப்பதாகச் சொல்லுகிற இடர்ப்பாடுகள் ஒவ்வொன்றுமே ஆதாரமற்றது என்று நான் கருதுகிறேன். முதன் முதலாவதாக அவர்கள் சொல்லுகிற காரணம் என்ன வென்றால் சட்டம், நீதி ஆகியவற்றைப் பற்றிய கருத்துக்கள் எல்லாமே தமிழர்களுக்குப் புதியன என்பதே.

''நீதியால் வந்த நெடுந்தரும நெறியல்லால்
சாதியால் வந்த சிறு நெறியறியான் என் தம்பி''

என்று கும்பகருணன் வாயிலாகத் தமிழ் நீதியின் சீலத்தையும் தொன்மையையும் சொல்லுகிறார் கம்பர். வள்ளுவருடைய குறளிலும் அடிப்படையான நீதிக் கருத்துக்களும் சட்டக் கருத்துக்களும் நிறைந்திருப்பதைப் பார்க்கலாம். நீதியை நிலைநிறுத்துவதற்காக உயிரையே தியாகம் செய்த தமிழ் முன்னோர்களுடைய வரலாறுகள் பல இருக்கின்றன. அதோடு, ஆங்கிலம் நுழைவதற்கு முன்னால் தமிழ்நாட்டில் பல நீதிப்பேராயங்கள் இருந்தன என்பதையும், அப்பேராயங்கள் நாட்டு வளமையை யொட்டித் தீர்ப்புகளை வழங்கியிருக்கின்றன என்பதையும் வரலாற்று வாயிலாக அறிகிறோம். ஆகவே, முதல் ஆட்சேபணை ஆதாரமற்றது.

இரண்டாவதாக, அவர்கள் சொல்வது என்ன வென்றால், ''மேல் நாட்டிலிருந்து இரவல் வாங்கிய சட்டத்தை—சென்ற இருநூறு ஆண்டுகளாக ஆங்கில மொழியிலேயே இயற்றப்பட்ட சட்டத்தை—நாம் பயன்படுத்தி வந்திருக்கிறோம். ஆகவே, மேல் நாட்டுக்கே உரிய அந்தச் சட்டக் கருத்துக்களைத் தமிழ் மொழியினால் சொல்ல இயலாது'' என்பதாகும். இந்த வாதமும் ஏற்றுக் கொள்ளத் தக்கது அல்ல. பல நூற்றாண்டுகளாகத் தமிழகத்தில் தமிழல்லாத பிற மொழிகளை நிர்வாக மொழிகளாகவும், தீர்ப்பு மொழிகளாகவும் வழங்கி வந்து

இருக்கின்றன. பாலி மொழி, உருது மொழி, டச்சு மொழி, பிரெஞ்சு மொழி, மராட்டிய மொழி, தெலுங்கு மொழி, கடைசியாக, ஆங்கில மொழி ஆகியவை சட்ட மொழிகளாக இருந்து வந்திருக்கின்றன. ஆகவேதான் சட்டக் கருத்துக்களைத் தமிழ் மொழியில் எடுத்துச் சொல்வதற்கும் வாதாடுவதற்கும் தீர்ப்புகள் வழங்குவதற்கும் நமக்கு வாய்ப்பு இல்லாமல் போய்விட்டது.

கி. பி. 1731க்கு முன்னால் இங்கிலாந்து நாட்டிலே லத்தீனும் பிரெஞ்சுமே நீதிமன்ற மொழிகளாக இருந்தன. அது வரையிலும் ஆங்கிலம் பக்குவம் இல்லாத ஒரு மொழி என்றும், எதோ வேலைக்காரர்களோடு பேசுவதற்கு மட்டுமேயுரிய ஈனத்தனமான மொழி என்றும் ஆங்கிலேயர்களே ஆங்கிலத்தைக் கருதி வந்தார்கள். ஆனால் 1731ல் ஆங்கிலேயர்கள் விழித்துக் கொண்டார்கள், நாம் எல்லாம் இப்போது விழித்துக் கொண்டாற் போல! 1731க்கு முன், பலர் ஆங்கிலத்தைச் சட்ட மொழியாக்க முயன்றும் தோல்வியடைந்தனர். கடைசியாக ஆங்கில நாட்டின் நாடாளு மன்றம் 1731ல் ஒரு சட்டத்தை இயற்றியது. அந்தச் சட்டத்தில் சில அதிசயமான தண்டனை வகை முறைகளை (Penal Provisions) நாம் காண்கிறோம். அந்தச் சட்டம் அமுலுக்கு வந்த தேதியிலிருந்து ஆங்கில நீதிமன்றங்கள் எல்லாவற்றிலும் ஆங்கில மொழியே ஆட்சிமொழியாக இருக்க வேண்டும் என்றும், வாதுரைகளிலோ (Pleadings) வாதப் பிரதிவாதங்களிலோ (Arguements) தப்பித் தவறி லத்தீன் அல்லது பிரெஞ்சுச் சொல்லை யாராவது பயன்படுத்தினால், அவ்வாறு பயன்படுத்தப் பட்ட ஒவ்வொரு சொல்லுக்கும் 50 பவுன் அபராதம் கொடுக்கப் பட வேண்டும் என்றும் அந்தச் சட்டத்தில் விதித்திருந்தது.

இந்தச் சட்டம் மசோதாவாக இருக்கும்போது ஆங்கில நீதிபதிகளும் வழக்கறிஞர்களும் இதைத் தீவிரமாக எதிர்த்தார்கள். ஆனால், மசோதா சட்டமாகி அமுலுக்கு வந்த பிறகு, ஆங்கில வழக்கறிஞர்களும் நீதிபதிகளும் மிகுந்த கட்டுப்பாட்டு உணர்ச்சியுடையவர்களாகையால், அந்தச் சட்டத்திற்குக் கீழ்ப்படிந்து அதை முழு மனத்தோடு செயல்படுத்துவதில் பங்கு கொண்டார்கள். அந்தச் சட்டம் இயற்றப்பட்டு, இருநூறு ஆண்டுகளுக்குள் ஆங்கிலம் எந்த விதமான நுண்ணிய சட்டக் கருத்தையும் சொல்லவல்லது என்ற அளவுக்குப் பெயர் வாங்கிவிட்டது. அதோடு, அனைத்துலக அந்தஸ்துள்ள பிரெஞ்சுமொழிக்கு இருந்த இடத்தை ஆங்கிலம்




அலுவலக முகப்பு

இப்போது கைப்பற்றிக் கொண்டு விட்டது. 1731ல் இங்கிலாந்தும் ஆங்கிலமும் இருந்த நிலையில் 1978ல் தமிழ்நாடும் தமிழும் இருக்கின்றன. ஆனால், ஒன்றை மட்டும் நாம் மறந்துவிடக் கூடாது. 1731ல் ஆங்கில மொழிக்கு இல்லாத ஒரு வளமும் வனப்பும் நுணுக்கமும் தெளிவும் 1978ல் தமிழுக்கு இருக்கின்றன.

மூவாயிரம் ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக நுண்ணிய, ஆழ்ந்த, நொய்தின் நொய்ய உணர்ச்சிகளையெல்லாம் தமிழ் ஞானிகளும் அறிஞர்களும் கவிஞர்களும் தமிழ் மொழியின் வாயிலாகச் சொல்லிச் சொல்லித் தமிழுக்கு ஓர் அரிய வளத்தை நல்கியிருக்கிறார்கள். அதோடு, வின்ஸ்லோ போன்ற ஆங்கிலப் பேரறிஞர்கள் தமிழ் மொழியை ஆராய்ச்சி செய்துவிட்டு, ஐரோப்பிய மொழிகளிலெல்லாம் சிறந்த கிரேக்க மொழியைவிடத் தமிழுக்குத் அதிகத் துல்லியமும் மெருகும் உள்ளன என்று தீர்ப்புச் சொல்லியிருக்கிறார்கள்.

ஆகவே, 1731ல் ஆங்கிலத்துக்கும் ஆங்கிலேயருக்கும் இருந்த தன்னம்பிக்கையையும் தகுதியையும் காட்டியும் ''எங்கும் தமிழ், எதிலும் தமிழ்'' என்று நமது முதலமைச்சர் முழங்கும் 1978ல் தமிழுக்கும் தமிழருக்கும் அதிகமான தன்னம்பிக்கையும் தகுதியும் இருக்கின்றன என்பதில் யாதொரு ஐயப்பாட்டுக்கும் இடமில்லை.

கேள்வி : சட்ட மொழிபெயர்ப்புகளினால் தமிழ் இலக்கிய வளர்ச்சிக்குப் பயன் ஏதேனும் உண்டா?

பதில் : சட்டக் கருத்துக்களைத் தமிழ் மொழி சொல்லிச் சொல்லிப் பழகிவிட்டது என்றால் தமிழருடைய சிந்தனையிலேயே ஒரு புது நுணுக்கம் ஏற்படும்; தமிழ் இலக்கியத்திற்கு ஒரு புதிய ஆற்றல் ஏற்படும். உதாரணமாக, இங்கிலாந்திலே சட்டத்தைப் பற்றிய ஆங்கில இலக்கியத்தை மிக நன்றாக வளர்த்து விட்டார்கள். ஆகவே, இலக்கிய ஆசிரியர்களும் கவிஞர்களும் தங்கள் கற்பனைக்கு ஊட்டம் கொடுப்பதற்காகச் சட்டத் துறையிலிருந்து உவமானங்களை—சிமிலிஸ்—கடன் வாங்குகிறார்கள். உதாரணமாக, 'செஷன்ஸ்' என்ற சொல் அச்சத்தையும் மதிப்பையும் உண்டாக்குகிற சொல்; அதைப் போலவே சம்மன்ஸ், என்பது தவிர்க்க முடியாத பயங்கர கோர்ட்டுக் கட்டளையைக் குறிக்கிற சொல். இவ்விரண்டு சொற்களை வைத்துக் கொண்டு ஷேக்ஸ்பியர் ஓர் அரிய பாவத்தை உண்டாக்குகிறார்.

"When to the sessions of Sweet silent thought
I summon up remembrance of things past"

என்று ஷேக்ஸ்பியர் சொல்லுகிறார். ''இனிய மௌனமாக கருத்துக்கள் மனமாகிய செஷன்ஸ் மன்றத்திலே அமர்ந்திருக்கையில், பழைய நிகழ்ச்சிக்கு அழைப்பாணை

(Summons) அனுப்பி, அவற்றை இழுத்துக் கொண்டு வந்து, என் மன்மன்றத்திலே நான் நிறுத்தும் போது, என்று ஷேக்ஸ்பியர் பாடல் ஒன்று தொடங்குகிறது. இவ்வாறாக ஆங்கிலக் கவிக்கும் இலக்கியத்துக்கும் ஆங்கிலச் சட்டச் சொற்கள் ஊட்டம் கொடுத்துக் கொண்டு வந்திருக்கின்றன. ஆனால், சென்ற பல நூற்றாண்டுகளாகத் தமிழ் மொழி இருக்க வேண்டிய அரியாசனத்திலே பல வேற்று மொழிகள் இருந்து வந்த காரணத்தால் சட்டத் தமிழ் வளராமல் இருந்து விட்டது. அதன் விளைவாக, சட்டத் தமிழின் வளமும் நுணுக்கமும் தமிழ் இலக்கிய ஊட்டத்துக்குக் கிடைக்காமல் போய்விட்டன. சட்டத் தமிழ் வளர்ந்தால் இலக்கியத் தமிழும் கட்டாயம் வளரும்.



ஆணையத்தின் தலைவரும் உறுப்பினர்களும் இந்திய அரசமைப்பின் (Constitution of India) தமிழ் மொழிபெயர்ப்பை ஆராய்ந்து விவாதிக்கிறார்கள்.

கேள்வி : ''தமிழில் ஒரு சொல்லுக்குப் பல பொருள்கள் இருக்கின்றன. சிலேடைகளும் அதிகமாக இருக்கின்றன. உதாரணமாக, ''நானூறு ரூபாய் கொடுத்தேன்'' என்று சொன்னால், ''நான் 100 ரூபாய் கொடுத்தேன்'' என்றும், ''400 ரூபாய் கொடுத்தேன்' என்றும் நேரடியான அர்த்தம் ஏற்படுகிறது. ஆகவே, சட்டத்துக்குத் தேவையான குழப்பமின்மையும் தெளிவும் தமிழ் மொழிக்கு இல்லை,'' என்று ஒரு சில தமிழறிஞர்கள் சொல்லுகிறார்களே, அதைப் பற்றித் தங்கள் கருத்து என்ன?

பதில் : தமிழில் இருப்பதைப் போலவே ஒரு பொருள் உள்ள பல சொற்களும், பல பொருள்கள் உள்ள ஒற்றைச் சொற்களும் ஆங்கிலம், பிரெஞ்சு முதலிய மொழிகளிலும் இருக்கின்றன என்பதை மறந்துவிடக் கூடாது. உதாரணமாக, 'Dispose' என்ற சொல்லை எடுத்துக் கொண்டால், இதன் பொருள் இடத்துக்குத் தக்கவாறு மாறுபடுகிறது. ''Proper disposal of Cases'' என்ற சொற்றொடரை "உரிய முறையில் வழக்குகளைத் தீர்மானித்தல்'' என்றும், ' Being at the disposal of the Government ' என்ற சொற்றொடரை ''அரசின் ஏவலில் இருத்தல்'' என்றும் மொழிபெயர்க்க வேண்டியிருக்கிறது. உண்மையில், இந்தச் சொல்லுக்கு எட்டு இடங்களில் எட்டு விதமாகப் பொருள் கொள்ள வேண்டியிருக்கிறது. தமிழில் உள்ள ''சும்மா'' என்ற சொல்லைப் போலவே, சந்தர்ப்பத்திற்குத் தக்கவாறெல்லாம் பல்வேறு பொருள்கள் கொடுக்கக் கூடிய சொற்கள் ஆங்கிலத்திலும் பிரெஞ்சிலும் மலிந்து கிடக்கின்றன. வெப்ஸ்டரின் மூன்றாவது புதிய அனைத்துலக அகராதி (Webster's Third New-International Dictionary)யில் 'HOUSE' என்ற சொல்லுக்கு 43 வெவ்வேறு அர்த்தங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன ஆங்கிலத்திலும் பிரெஞ்சிலும் தமிழில் உள்ளதைப் போலவே பல சிலேடைகள் இருக்கின்றன. உதாரணமாக, "I saw a man-go in the street" என்றால் ''தெருவில் ஒரு மாங்காயைப் பார்த்தேன்' என்றும் ''தெருவில் ஒரு மனிதன் போவதைப் பார்த்தேன்'' என்றும் இரண்டு விதமாகப் பொருள் கொள்ளலாம். ஷேக்ஸ்பியர் நாடகங்களில் சிலேடை விளையாட்டுக்கள் பலவற்றைப் பார்த்து அனுபவிக்கலாம். 'lie' என்ற ஆங்கிலச் சொல்லுக்குப் "பொய்ச் சொல்'' என்றும், ''படுத்துக் கொள்'' என்றும் இரண்டு அர்த்தங்கள் உண்டு. அதனால், சட்ட நுணுக்கத்தைச் சொல்வதற்கு ஆங்கிலம் அருகதையற்ற மொழி என்று கூற முடியுமா? உண்மையில் நல்ல பக்குவமடைந்த மொழிகளில்தான் யமகம், திரிபு, சிலேடை முதலிய சிலம்பு விளையாட்டுகள் விளையாடலாம். சொல்லுக்குப் பஞ்சமாக இருக்கிற போதுதான் இந்த விளையாட்டுகளுக்கு மொழி இடம் கொடுக்காது. நான் முன்னமே சொன்னபடி **வின்ஸ்லோ** போன்ற மேல் நாட்டு அறிஞர்களே ஐரோப்பிய மொழிகளிலெல்லாம் உயர்ந்த மொழியாகிய கிரேக்க



**ஆணையத்து மொழிபெயர்ப்பாளர்கள் ஒரு குழுவாக அமர்ந்து கலந்து விவாதித்துத் தமிழாக்கம் செய்கிறார்கள்.**

மொழியைக் காட்டிலும் தமிழுக்குத் துல்லியமும் வளமும் அதிகம் இருக்கின்றன என்று சொன்ன பிறகு சட்டமும் ஆங்கிலமும் தெரியாத ஒரு சில தமிழறிஞர்களுக்குத் தமிழின் வல்லபங்களைப் பற்றி ஏன் ஐயப்பாடு ஏற்படுகிறதோ?

கேள்வி : தமிழகத்திலுள்ள எல்லா நீதிமன்றங்களிலும் எல்லா நீதி நடவடிக்கைகளிலும் தமிழை உடனடியாகப் பயன்படுத்தக் கூடிய சாத்தியக் கூறுகள் இருக்கின்றனவா?

பதில் : தமிழக அரசு உயர் நீதிமன்றங்களுக்குக் கீழமைந்து உள்ள எல்லாக் குற்ற வழக்கு நீதிமன்றங்களிலும் தமிழே தீர்ப்பு மொழியாக இருக்க வேண்டும் என்று ஆணை பிறப்பித்து, அந்த ஆணையின்படி கொலை வழக்குகளிலும் கூட செஷன்ஸ் நீதிபதிகள் தமிழிலேயே தீர்ப்புகளை எழுதி வருகிறார்கள் என்பது உங்களுக்குத் தெரிந்திருக்கும். அந்தத் தமிழ்த் தீர்ப்புகளைப் பார்க்கும்போது அவை அந்நிய மொழியாகிய ஆங்கிலத்தில் எழுதும் தீர்ப்புகளைக் காட்டிலும் தரத்தால் மிகவும் உயர்ந்து இருப்பதை நம்மால் கண்கூடாகப் பார்க்க முடிகிறது. சட்டக் கல்லூரிகளிலும் சட்டத்தைத் தமிழிலேயே கற்பிக்கத் தொடங்கி விட்டார்கள். 17-1-'78ல் ராஜ்கோட்டில் நடந்த பல்கலைக் கழகத் துணைவேந்தர்கள் மாநாட்டில் இந்தியப் பிரதமர் திரு மொரார்ஜி தேசாய் அவர்களுடைய கோரிக்கையின் பேரில் இந்தியாவிலுள்ள துணை வேந்தர்கள் எல்லோரும் இன்னும் ஐந்து ஆண்டுகளில் ஒவ்வொரு பல்கலைக் கழகத்திலும் அந்தந்த வட்டார மொழியிலேயே, சட்டம் மாத்திரமல்ல, விஞ்ஞானம் உள்பட எல்லாப் பாடங்களையும் கற்பிப்பதற்குச் சம்மதித்து இருப்பதோடு, இந்தியப் பிரதமரின் அறைகூவலை ஏற்று, ஐந்து ஆண்டுகளில் இந்த மொழிக் கொள்கையைச் செயல் முறையில் செய்து முடித்துவிடுவதாக உறுதி கூறியிருக்கிறார்கள்.

ஆகவே 1983க்கு மேல், தமிழ் நாட்டிலுள்ள வாதுரைகளையும் வாதப் பிரதிவாதங்களையும் தமிழிலேயே எடுத்துச் சொல்லும் திறமை படைத்தவர்களாக இருப்பார்கள். ஆனால், ஆங்கிலத்தில் உள்ள சட்டங்களையும் தீர்ப்புகளையும் புரிந்து கொள்ளும் சக்தி அவர்களுக்குக் குறைந்துவிடும் என்பது இயல்பே. ஆதலால், இன்னும் ஐந்தாண்டுகளுக்குள்ளாக எல்லாச் சட்டங்களையும், முக்கியமான தீர்ப்புகளையும் மொழி பெயர்க்க வேண்டிய ஒரு நெருக்கடி நிலை ஏற்பட்டிருக்கிறது. அந்த நெருக்கடியைச் சமாளிக்க வேண்டிய பொறுப்பு தமிழகத்திலுள்ள நீதிபதிகளையும் வழக்குரைஞர்களையும் நூல்வெளியீட்டாளர்களையும், கணிசமான அளவு எங்கள் ஆட்சி மொழி ஆணையத்தையும் சார்ந்தது.

கேள்வி : உங்கள் ஆணையத்தில் பல சட்டங்களை மொழிபெயர்த்திருக்கிறீர்களே, உங்கள் மொழிபெயர்ப்புக் கொள்கைகள் என்ன என்பதைக் கொஞ்சம் விளக்கலாமா?

பதில் : எங்களுடைய முதல் கொள்கை என்னவென்றால், மொழி பெயர்ப்பவர்கள், அதிலும் சட்டத்தை மொழி பெயர்ப்பவர்கள் மிகுந்த பயபக்தியோடு மொழிபெயர்க்க வேண்டும். ''கரணம் தப்பினால் மரணம்'' என்ற உண்மையை எப்போதும் உள்ளத்தில் வைத்துக் கொண்டு மொழி பெயர்க்க வேண்டியிருக்கிறது. ஹிரோஷிமாவின் துர்ப்பாக்கியம் ஒரு மொழிபெயர்ப்புப் பிழையால் ஏற்பட்டது என்று வரலாற்று ஆசிரியர்கள் சொல்லுகிறார்கள். 'போட்ஸ்டாம்' மாநாட்டிற்குப் பின், அமெரிக்க அரசு ஜப்பான் அரசைச் சரணடையுமாறு கேட்டு, ஓர் இறுதி எச்சரிக்கையை அனுப்பியது. அதற்கு ஜப்பானிய அரசு எழுதிய பதிலில், ஒரு முக்கியமான ஜப்பானியச் சொல் பயன்படுத்தப்பட்டிருந்தது. ''மோகு சட்சு'' என்ற சொல் அது. ''உங்கள் இறுதி எச்சரிக்கையைப் பரிசீலனை செய்து வருகிறோம். பதில் சொல்வதற்குத் தாமதமாகும்'' என்ற பொருளிலே ''மோகு சட்சு'' என்ற சொல் பயன்படுத்தப் பட்டிருந்தது. ஆனால், வாஷிங்டனில் கிடைத்த தகவலில், ''உங்கள் இறுதி எச்சரிக்கையை நிராகரிக்கிறோம்'' என்று அந்தச் சொல் மொழி பெயர்க்கப்பட்டிருந்தது. மொழி பெயர்ப்பாளர் செய்த இந்தப் பிழையானது, அமெரிக்க அரசு அணுகுண்டைப் போடும் தீர்மானத்திற்குத் தூண்டுகோலாக அமைந்து விட்டது. இலக்கியத்தை மொழி பெயர்க்கும் போது தவறு இழைத்தாலும் கூட அவ்வளவு நஷ்டம் ஏற்படாது. சட்டத்தை மொழி பெயர்க்கும் போது தவறு இழைத்தால், அதனால் ஈடு செய்ய முடியாத நஷ்டங்கள் ஏற்பட்டுவிடும் என்பதை உணர்ந்த எங்கள் ஆணையத்தில் இருக்கும் மொழி பெயர்ப்பாளர்களும், ஆணையத்தின் உறுப்பினர்களும் எங்களால் இயன்ற விழிப்பு உணர்ச்சியோடும் எச்சரிக்கையோடும் சட்டங்களை மொழி பெயர்த்து வருகிறோம்.

பிரெஞ்சு மொழிபெயர்ப்பாளரும் புலவருமான ஏதியேன் தோலே (Etienne Dolet 1509-1546) என்பவர் பிளேட்டோவின் (Plato) நூல்களை மொழி பெயர்த்தார். அவருடைய மொழி பெயர்ப்பு சரியாக இல்லை என்றும், பிளேட்டோவின் கருத்துக்களுக்கு அவர் துரோகம் இழைத்து விட்டார் என்றும் பிரெஞ்சு மக்கள் அவர் மீது குற்றஞ் சாட்டி, அவருடைய குரல்வளையைத் திருகி, அவரைக் கொன்றதோடு, அவருடைய எழுத்துக்களையெல்லாம் தீக்கிரையாக்கினார்கள். இந்த நிகழ்ச்சி மொழிபெயர்ப்பாளர் எல்லோருக்கும் ஓர் எச்சரிக்கையாய் அமைகிறது. ஒரு மொழியில் உள்ள கவிதையைக் கவனமின்றி

இன்னொரு மொழியில் பெய்யும் போது, மூலமொழியின் ஆன்மா ஆவியாகப் பறந்து போய்விடுகிறது; மிஞ்சுவது எல்லாம் மூலமொழியின் உயிரற்ற சடலம் தான். ஆனால், சட்டத்தைப் போன்ற அறிவியல் சம்பந்தமான உரைகளைப் பெரு முயற்சி செய்தால் பிழையில்லாமல் மொழி பெயர்க்க முடியும். இரு மொழிகளின் பண்பு எல்லாம் தெரிந்த புலவர்கள், சட்டத்தின் நுணுக்கம் எல்லாம் தெரிந்த நிபுணர்களோடு கூடிக் கலந்தாலோசித்துக் கூட்டுத்தவம் செய்தால் அது கைகூடும் என்று அனுபவத்தில் நாங்கள் கண்டு கொண்டோம்.

சொல்லை மாத்திரம் எடுத்துக் கொண்டால், அதற்கு நான்கு குணங்கள் இருப்பதைக் பார்க்கலாம். அவையாவன: சொல்லின் பொருள், கண்ணுக்குத் தெரியும் அதன் வரி வடிவம், செவிக்குக் கேட்கும் அதன் ஒலி வடிவம், உணர்ச்சியைத் தூண்டும் அதன் ஆற்றல். ஒரு சொல்லை மூல மொழி (Source Language) யாகிய ஆங்கிலத்திலிருந்து இலக்கு மொழி (Target Language) யாகிய தமிழில் மொழி பெயர்க்கும் போது தமிழ் மொழிக்கு உரிய தனித் தன்மை குலையாமல் மொழி பெயர்க்க வேண்டும். பொருளுக்கு மாத்திரம், அதற்குக் கிட்டத் தட்ட நிகரான பதத்தை இலக்கு மொழியிலிருந்து பொறுக்கி எடுக்கலாம். ஆனால், அந்தப் பதத்தின் ஒலி, மூலப் பதத்தின் ஒலியினின்றும் முற்றிலும் வேறுபட்டதாக இருக்கக்கூடும். அந்த ஒலி தூண்டிவிடும் உணர்ச்சிகளும் வேறு விதமாகவே இருக்கக் கூடும்.

ஆகவே மூலவாசகத்திலுள்ள வைப்பு முறைகளையும், வாக்கிய சொல் அமைப்பு முறைகளையும் முற்றிலும் மாற்றி, உரிய ஒலி வடிவத்தையும், வரி வடிவத்தையும், பொருளையும் பயன்படுத்தினால் அன்றி, மொழி பெயர்ப்பு மூலக் கருத்தை உண்மையோடு பிரதிபலிக்காது. எந்த அளவுக்குச் சொற்களுக்கு முறுக்கேற்ற வேண்டும். அல்லது முறுக்கை எந்த அளவுக்குத் தளர்த்தி விட வேண்டும். கருத்துப் பாசனத்தை எங்கெங்கே தேக்கி வைக்கவேண்டும், எங்கே மடை திறந்து பாயச் செய்ய வேண்டும். ஒரு நெடிலை, அல்லது ஒரு குறிலை எங்கு செருகினால், வாக்கியத்தின் பொருள் மாறும் என்பதெல்லாம் தெரியும் கலை, கற்றுத் தெரியக் கூடிய கலையன்று; கல்லாத கலையாகும். மொழி பெயர்ப்பாளருக்கு உள்ளுணர்வு இருக்குமானால், இந்தக் கல்லாத கலை கைவரும்; வெறும் புலமையினால் கிட்டுவதன்று இது.

எந்த நல்ல மொழி பெயர்ப்பும் அது எழுதப்படுகிற காலத்திலும் நாட்டிலும், பேசப்படுகிற மொழியில் இருக்க வேண்டும் என்பது மொழிபெயர்ப்பு நிபுணர்கள் எல்லோராலும் ஒப்புகொள்ளப்பட்ட உண்மை. பெரும்பாலும் இந்தக் கொள்கையை அடிப்படையாகக் கொண்டே இந்த ஆணையம் சட்டங்களைத் தமிழாக்கம் செய்து வருகிறது.

கேள்வி: ஆங்கிலச் சட்டத்தில் பல கலைச் சொற்கள் (Technical Terms) இருக்குமே, அவற்றை மொழி பெயர்க்கும்போது நீங்கள் புதுத் தமிழ்ச் சொற்களை உருவாக்கியிருக்கிறீர்களா?

> **தமிழ்நாடு இசையில் சிறந்த நாடு; இங்கே உள்ள இசையைக் கர்நாடக இசை என்று சொல்கிறார்களே அது தவறு; கரை நாட்டு இசை என்று தான் அதற்குப் பெயர். மூன்று புறமும் கடற் கரைகள் நிறைந்தது தமிழ்நாடு; எனவே தமிழ்நாடு கரை நாடு என்று வழங்கப்பட்டது. ஆதலால் தான் தமிழ்நாட்டு இசை, கரை நாட்டு இசை என்று வழங்கப்பட்டது. நாளடைவில் அது கர்நாடக இசை என்று ஆகிவிட்டது.**
>
> முத்தமிழ்க் காவலர்
> **கி. ஆ. பெ. விசுவநாதம்.**

பதில்: ஆங்கிலச்சொற்களுக்கு நேரான புதிய தமிழ்ச் சொற்களை உண்டு பண்ணுவதற்கு முன் இரண்டு விஷயங்களை நாங்கள் கவனிக்கிறோம். முதலாவதாக, பழைய தமிழ்ச் சொற்கள் பல ஆள்வாரற்றுத் தூர்ந்து போய் விட்டன. அவ்வாறு தூர்ந்து போன சொற்களுக்குப் புத்துயிர் கொடுத்து, நமக்கு இருக்கும் சொற் பஞ்சத்தைத் தீர்த்துக் கொள்வது அவசியமாகத் தோன்றுகிறது. உதாரணமாக, பிங்கல நிகண்டில், ''சொல்லுதல்'' என்ற குறுந் தலைப்பில், 22 சொற்கள் கொண்ட ஒரு பட்டியல் கொடுக்கப்பட்டிருக்கின்றது. இந்தப் பட்டியலை ஆராய்ந்து பார்க்கும் போது, சொல்லும் முறையை 22 வகைகளாகப் பிரித்து, ஒவ்வொரு வகைக்கும் ஒரு தனிச் சொல்லை உண்டு பண்ணி, ஒரு வகைக்கும் இன்னொரு வகைக்கும் இடையேயுள்ள மயிரிழை போன்ற வேறுபாட்டையும் சொல் வேறுபாட்டிலே காட்டிக் கருத்து நொய்ம்மையையும் சொல் நொய்ம்மையையும் தமிழர்கள் வளர்த்திருக்கிறார்கள் என்று தெரிகிறது. இதோ ஒரு சூத்திரம்:

''இயம்பல், விரித்தல், மொழிதல், விளம்பல்,
பகர்தல், பன்னல், நவிறல், கத்துதல்
உரைத்தல், கூறல், வழங்கல், குயிலல்,
புகலல், பேசல், நொடிதல், பிறழ்தல்,
பறைதல், செப்பல், அதிர்த்தல், பணித்தல்,
சொற்றல், ஆடல், சொல்லுதல் என்ப''

(பிங்கல நிகண்டு 2009ஆம் சூத்திரம்)

மேற்சொன்ன சூத்திரத்தில் கண்டவை போன்ற ஆயிரக்கணக்கான தமிழ்ச் சொற்கள் துருப் பிடித்துப் போய், பொருள் கெட்டும், இழிந்தும், பயனற்றுப் போய்விட்டன. நாங்கள் புதுச் சொற்களை உண்டாக்குவதற்கு முன் நமது கஜானாவில் பயன்படுத்தப்படாமல் வறிதே கிடக்கும் பொருள் பொதிந்த சொற்களைப் பயன்படுத்த முயன்றிருக்கிறோம். உதாரணமாக, 'assertion' என்பதை ''அறைதல்'' என்றும் (Declaration) என்பதை ''விளம்பல்'' என்றும், ''Pronouncement of Judgement என்பதை ''தீர்ப்புப் பகருதல்'' என்றும் மொழி பெயர்த்து, தூர்ந்து போன தமிழ்ச் சொற்களைத் துலக்கி, விளக்கமுறச் செய்திருக்கிறோம். மேற்சொன்ன பொருள்களிலே, நீதிபதிகளும் வழக்குரைஞர்களும் மேற்சொன்ன சொற்களைப் பயன்படுத்துவார்களேயானால், இடைக் காலத்திலே திமிரி அலைந்த சொற்களை அடக்கி, மூக்கணாங்கயிறு போட்டு நடை பழக்கி, சொகுசாகக் கருத்துச் சவாரி செய்ய, அவற்றைப் பயன்படுத்திய பெருமை அவர்களுக்குக் கிடைக்கும்.

இரண்டாவதாக, பழைய சொற்களும் கிடைக்கவில்லையென்றால், சாமானிய மக்களிடையே உரிய சொற்கள் ஆட்சியில் இருக்கின்றனவா என்பதைத் தீர விசாரிக்கிறோம். உதாரணமாக, 'Cable of wooden anchor' என்ற சொற்றொடரை எங்கள் ஆணையம் மொழி பெயர்க்க வேண்டியிருந்தது. ஆங்கில-தமிழ் அகராதிகள், அந்தச் சொற்றொடருக்கு ''மர நங்கூரக் கயிறு''

என்று பொருள் கொடுத்திருந்தன. இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாகக் கடலில் கப்பற் பயணம் செய்தும், முத்துக் குளித்தும், கடலோடு ஊடாடிக் கொண்டும் இருக்கும் தமிழன், இதற்குத் தனிப் பெயர் இடாமலா இருந்திருப்பான் என்ற ஐயம் ஏற்பட்டதன் பேரில், ஆணையத்திலுள்ள மொழி பெயர்ப்பாளர் ஒருவரைச் சென்னைக் கடற்கரையில் இருக்கும் மீனவர் குப்பத்திற்கு அனுப்பி, ஆராய்ச்சி செய்தோம். நங்கூரத்தைப் பிணைக்கும் கயிற்றைச் ''சீனிக் கயிறு'' என்று அவர்கள் செல்லப் பெயரிட்டு அழைக்கிறார்கள் என்று தெரிந்து, அந்தப் பெயரையே இவ்வாணையம் மொழி பெயர்ப்பில் பயன்படுத்தியுள்ளது.

இதைப்போலவே மதுவிலக்குச் சட்டத்தை மொழி பெயர்க்கும் போது, மதுவிலக்குத் துறை அதிகாரிகளின் உதவியாலும் வனச் சட்டத்தை மொழி பெயர்க்கும்போது வனத் துறை அலுவலர்களின் உதவியாலும் அந்தந்தத் துறையில் தமிழ் மக்களால் பயன்படுத்தப் படுகின்ற பரிபாஷையையும் பச்சைத் தமிழ்ச் சொற்களையும் தேடிக் கண்டுபிடித்து, அவற்றையே எங்கள் ஆணையம் மொழி பெயர்ப்பில் பயன்படுத்தியிருக்கிறது. 'Fermented wash' என்பதைச் சாமானியத் தமிழர்கள் ''ஊறல்'' என்றும் ''கலக்கல்'' என்றும் கூறுகிறார்கள். தமிழ் மக்களுடைய நாவில் நடமாடிக் கொண்டிருக்கும் சொற்களுக்கு உள்ள ஆற்றல், புதிதாக உண்டாக்கப்படும் சொற்களுக்குக் கிடையாது என்ற உண்மையை உணர்ந்தே இவ்வாணையம் ஆட்சியில் இருக்கும் சொற்களைத் தேடிக் கண்டுபிடிப்பதில் மிகுந்த நேரத்தையும் கவனத்தையும் செலவழித்திருக்கிறது.

வேறு போக்கு இல்லை என்ற நிலையில்தான் இந்த ஆணையம் புதிய சொற்களை ஆக்கத் துணிந்திருக்கிறது. அவ்வாறு சொல்லாக்கம் செய்யும்போதும், தமிழர்களின் காதுக்கும் உள்ளத்துக்கும் இணங்கும் வகையிலும், தமிழ் மரபை ஒட்டியுமே புதுச் சொற்களை உண்டாக்கியிருக்கிறோம்.

''சொல்லுக சொல்லைப்
பிறிதோர் சொல் அச்சொல்லை
வெல்லுஞ்சொல் இன்மையறிந்து

என்று இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே இன்றியமையாத சொல்லையே பயன்படுத்த வேண்டும் என்று திருவள்ளுவர் நமக்கு எச்சரிக்கை செய்துவிட்டார். அந்த எச்சரிக்கையின்படி, சொல்லாக்கம் செய்ய முயன்று வருகிறோம். அவ்வாறு புதிதாகச் சொல்லாக்கம் செய்ததற்கு உதாரணங்கள் சில. 'Precedent' என்று ஆங்கிலச் சொல்லுக்குச் சரியான தமிழ்ச் சொல் கிடைக்கவில்லை. 'Quotation' என்பதை ''மேற்கோள்'' என்றும், 'Interpretation' என்பதை ''பொருள்கோள்'' என்றும், ''குறிக்கோள்'' என்றும் சொல்லும் மரபையொட்டி, முன்கொள்ளப்பட்டது என்ற கருத்தை ''முற்கோள்'' என்ற புதிய சொல்லை உண்டாக்கித் தமிழ்ப்படுத்தி யிருக்கிறோம். இது புதிய சொல்லாக இருந்தாலும் இதன் ஒலியும் உருவமும் வெகு காலம் புழங்கி வந்த தமிழ்ச் சொல்லின் ஒலியையும் உருவத்தையும் போன்று இருப்பதால் பல தமிழறிஞர்களும் சட்ட வல்லுநர்களும் மகிழ்ச்சியோடு இந்தச் சொல்லை ஏற்றுக்கொண்டு இருக்கிறார்கள்.

''Having retrospective effect'' என்ற சொற்றொடரை ''முன்னுற இயங்கும் தன்மையதான'' என்றும், ''Probabilities and improbabilities of the case'' என்ற சொற்றொடரை ''இந்த வழக்கின் நிகழுறு கூறுகளும் நிகழுறாக் கூறுகளும்'' என்றும் பழைய சொற்களைப் புதிய கலவை செய்து, மொழி பெயர்த்திருக்கிறோம்.

'Admirality Jurisdiction' 'Maritime Jurisdiction' என்ற சொற்றொடர்களை முறையே 'கடலியல் அதிகார வரம்பு', 'நெய்தலியல் அதிகார வரம்பு' என்று மொழி பெயர்த்திருக்கிறோம். இதிலிருந்து தமிழின் தொன்மையான இலக்கிய மரபை மதித்தே மொழி பெயர்ப்பு செய்யப்பட்டிருக்கிறது என்பதும் புலப்படும்.

ஒரு நூற்றாண்டுக்கு மேற்பட்ட காலமாகச் சில ஆங்கிலச் சொற்களும் உருதுச் சொற்களும் நீதி மன்றங்களில் பயன்படுத்தப்பட்டு வந்த காரணத்தால், தமிழர்களுக்கு அச்சொற்கள் தனிப்பட்ட கருத்துக்களைக் குறிக்கும் அடையாளங்களாக அமைந்துவிட்டன. உதாரணமாக, ''செஷன்ஸ், உயில், ஆஜர், ஜாமீன், ஜப்தி'' முதலிய சொற்கள் தமிழோடு தமிழாகச் சமபந்தி போஜனம் செய்ய ஆரம்பித்து விட்டன. இப்பேர்ப்பட்ட சொற்களை ஒதுக்கிவிட்டு, அவற்றிற்குத் தூய தமிழ்ச் சொற்களை உண்டாக்குவது எளிது. ஆனால், அவ்வாறு செய்திருந்தால் சட்டத்தோடு பழகி வருகிற தமிழர்கள் உள்ளத்தில் குழப்பம் ஏற்படும் என்று கருதி, அத்திசைச் சொற்களையே இம்மொழி பெயர்ப்புகளில் பயன்படுத்தி இருக்கிறோம்.

கேள்வி : உங்கள் ஆணையம் 1-5-'76ல் இருந்து கிட்டத்தட்ட ஒன்றே முக்கால் ஆண்டுகளாக இயங்கி வருகிறதே இது வரையில் நீங்கள் எத்தனை சட்டங்களை மொழிபெயர்த்திருக்கிறீர்கள்?

பதில் : இந்த ஆணையம் நிறுவப்பட்டு மூன்றே மாதங்களுக்குள் குற்றவழக்கு நீதி மன்றங்கள் தமிழில் தீர்ப்புகளை எழுதுவதற்கு ஆதாரமாக உள்ள மூன்று அடிப்படைச் சட்டங்களை—குற்ற விசாரணை முறைச் சட்டம் (Criminal Procedure Code), இந்தியச் சாட்சியச் சட்டம் (Indian Evidence Act), இந்தியத் தண்டனைச் சட்டம் (Indian Penal Code)—நாங்கள் மொழி பெயர்த்ததோடு அல்லாமல் அரசு அச்சகத்தின் மூலம் அவற்றை அச்சடித்து, வெளியிடவும் நமது அரசுக்கு உதவியிருக்கிறோம். இது வரையில் 54 மத்திய, மாநிலச் சட்டங்களையும் மொழி பெயர்த்திருக்கிறோம்; நமது ஜனநாயகத்தின் ஆதார சுருதி

## பட்டு உற்பத்தி

வரும் ஆண்டுகளில் தமிழகத்தின் பட்டு நெசவுக்குத் தேவையான பட்டு நூல் உற்பத்தியில் தன்னிறைவு பெறும் தீவிர திட்டத்தின்கீழ் தர்மபுரி மாவட்டத்தில் வரும் ஐந்தாண்டுக் காலத்திற்குள் 8 ஆயிரம் ஏக்கரில் பட்டுப்புழு வளர்ப்புக்கான முசுக் கொட்டை மரங்கள் பயிரிடப்படும். இத்திட்டத்தின்கீழ் பட்டு உற்பத்திக்காக தர்மபுரி, சேலம், உட்பட 8 மாவட்டங்களில் இந்த ஆண்டு இறுதிக்குள் 1 கோடியே 26 இலட்சம் ரூபாய் செலவழிக்கப்படும்.

இதில் தர்மபுரி மாவட்டத்தில் 63 இலட்சம் ரூபாய் செலவிடப்படும். முசுக்கொட்டை பயிரிடவும், பட்டுப்புழு வளர்க்கக் கொட்டைகள் அரைக்கவும், புதிய கிணறு வெட்டுதல், பழைய கிணறுகளைப் புதுப்பிக்கவும், விவசாயிகளுக்கு 25 சதவிகிதம் மானியமாகவும் மற்றும் தேவையான பணம் கடனாகவும் வழங்கப் படும்.

யாக இருக்கும் இந்திய அரசமைப்பையும் ( Constitution of India ) மொழி பெயர்த்து முடித்திருக்கிறோம். மொத்தத்தில், சுமார் 2,500 அச்சுப் பக்கங்கள் கொண்ட ஆங்கிலச் சட்டங்களை மொழி பெயர்த்து முடித்திருக்கிறோம். அதோடு, 4,620 சொற்களும் சொற்றொடர்களும் கொண்ட சட்டச் சொல் அகராதி (Legal Glossary) ஒன்றையும் தயாரித்து முடித்திருக்கிறோம். வெகு விரைவில் அது வெளியிடப்படும்.

கேள்வி : ஆணையத்தால் தமிழாக்கப்பட்டு வெளியிடப்பட்ட சட்டங்கள் சாமானியத் தமிழர்களுக்கு விளங்கக் கூடியனவாய் இருக்கின்றனவா?

பதில் : இயன்ற வரையில் எளிமையான பழகு தமிழில், சாமானியர்களுக்கு விளங்கக் கூடியவையாக இருக்கின்றன. நமது சட்ட மன்ற மேலவைத் தலைவர் (பொறுப்பு) மாண்புமிகு திரு ம. பொ. சிவஞானம் அவர்களும், உச்ச நீதிமன்ற முன்னாள் நீதிபதி ஏ. அழகிரிசாமி அவர்களும், சென்னை உயர் நீதி மன்ற நீதிபதிகளும் மொழிபெயர்ப்புகளின் தரத்தை, சிறப்பாக ஆங்கிலச் சட்ட வரைவு, வல்லுநர்களின் கைவண்ணத்திற்கு எல்லாம் எடுத்துக் காட்டாகத் தலைசிறந்து மிளிர்கிற இந்தியச் சாட்சிச் சட்டத்தின் மொழி பெயர்ப்பைப் பாராட்டியுள்ளார்கள்.

கேள்வி : இந்தப் பணி எந்த முறையில் நடைபெறுகிறது?

பதில் : மொழிபெயர்ப்புகள் தனித் தனி நபர்களால் செய்யப்படுவதில்லை. சட்ட வல்லுநர்களும் தமிழ் வல்லுநர்களும் இரு மொழி வல்லுநர்களும் உள்ள, தனித் தனிக் குழுக்களாக, ஏழு குழுக்கள் (Cells) அமைக்கப்பட்டிருக்கின்றன. ஒவ்வொரு குழுவும் ஒரு சட்டத்தைக் கூட்டு முயற்சியாக மொழி பெயர்க்கிறது. அவ்வாறு மொழிபெயர்க்கப்பட்டவற்றை ஆதாரமாகக் கொண்டு ஆணையத்தின் தலைவரும் உறுப்பினர்களும் கொண்ட ஓர் உயர் மட்டக் குழு, சொல்லுக்குச் சொல், நுணுகி ஆராய்ந்து, இறுதியான தமிழாக்கத்தைச் செய்து முடிக்கிறது.

கேள்வி : இந்த மொழிபெயர்ப்புப் பணி எப்பொழுது முடிவுறும்?

பதில்: 1-5-'76ல் மொழி பெயர்க்கப்படவேண்டிய சட்டங்களின் அச்சுப் பக்கங்கள் 25,000 ஆக இருந்தன. ஓராண்டுக்கு 2,000 அச்சுப் பக்கங்களை மொழி பெயர்த்தாலும் கூட இந்த 25,000 பக்கங்களை மொழி பெயர்ப்பதற்கு 12 ஆண்டுகள் ஆகும். இந்த 12 ஆண்டுகளில் நாடாளுமன்றமும் மாநிலச் சட்ட சபைகளும் எத்தனை எத்தனையோ சட்டங்களை இயற்றக் கூடும். சென்ற கால அனுபவத்தை அடிப்படையாகக் கொண்டு பார்க்கும் போது நாடாளுமன்றமே ஓர் ஆண்டுக்கு 800 அச்சுப் பக்கங்கள் கொண்ட சட்டங்களை இயற்றி வருகிறது. அப்படியானால், அடுத்த 12 ஆண்டுகளில், மேலும் 9,600 அச்சுப் பக்கங்களையும் மொழி பெயர்க்க வேண்டியிருக்கும். ஆகவே, சட்டங்களை மொழி பெயர்த்து முடிவுறும் காலத்தை வரையறுத்துச் சொல்ல இயலாது. நமது தமிழகச் சட்ட சபை தமிழிலேயே சட்டங்களை இயற்றும் காலத்தை விரைவில் எதிர்பார்க்கலாம் என்று நமது தமிழக முதல்வர் அவர்கள் கூறியிருக்கிறார்கள். அந்த நிலை ஏற்பட்ட பிறகு மாநிலச் சட்டங்களைப் பொறுத்த மட்டில் மொழி பெயர்க்க வேண்டிய வேலையே இருக்காது.

கேள்வி : சட்ட மொழி பெயர்ப்பு இயக்கம் எப்போது தொடங்கப் பெற்றது?

பதில் : 1957 நவம்பர் 19ல் டாக்டர் ரா. பி. சேதுப்பிள்ளை, திரு பெ. நா. அப்புஸ்வாமி, திரு வல்லை பாலசுப்பிரமணியம் முதலியோரைக் கொண்ட ஒரு குழு, சட்டக் கல்லூரிப் பேராசிரியராக இருந்த ஏ. பழனிச்சாமி அவர்களைச் செயலாளராகக் கொண்டு திரு ஜஸ்டிஸ் எம். அனந்தநாராயணன் அவர்கள் தலைமையில் தமிழக அரசால் அமைக்கப்பட்டது. இந்தக் குழு 'ஏ' முதல் 'என்' வரையில் ஒரு சட்டச் சொல் அகராதியைத் தயாரித்தது. பின்னர் 16-12-'65ல் திரு ஜஸ்டிஸ் எம். அனந்தநாராயணன் அவர்களுடைய தலைமையில் தற்போது மாவட்ட நீதிபதியாக உள்ள திரு பக்கிரிசங்கரைச் செயலாளராகக் கொண்ட சட்டத்துறை ஆட்சிமொழி ஆணையம் நிறுவப்பட்டது. அதில், திரு வி. கார்த்திகேயன், டாக்டர் மு. வரதராசனார், திரு கா. அப்பாத்துரை, முதலியோர் உறுப்பினர்களாக இருந்தார்கள். அந்த ஆணையம் சில மாறுதல்களோடு 27-4-'76 வரை இயங்கியது. 7-12-'68ல் அந்த ஆணையம் திரு எம். சண்முக சுப்பிரமணியம் அவர்களைச் செயலுறுப்பினராகக் கொண்டிருந்த போது 'ஏ' முதல் 'இஸட்' வரையில் உள்ள ஒரு சட்டச் சொல் அகராதியைத் தயார் செய்து வெளியிட்டது. 1-5-'76ல் தற்போதுள்ள ஆணையம் உயர்நீதி மன்ற முன்னாள் நீதிபதி திரு ஜஸ்டிஸ் எஸ். மகராஜனைத் தலைவராகக் கொண்டு இயங்கிவருகிறது.

ஒரு புனிதப் பணியைச் செய்கிறோம் என்ற உணர்வோடு — இந்த ஆணையத்திலுள்ள உறுப்பினர்களும், நிர்வாகிகளும், மொழி பெயர்ப்பாளர்களும் ஒருங்கிணைந்து மிகுந்த ஆர்வத்தோடு பணியாற்றுகிறார்கள். தமிழன்னைக்கு நாம் செலுத்தும் சிறு காணிக்கை என்ற எண்ணம் தான் இப்பணியில் ஈடுபடும் பொழுது மேலோங்கி நிற்கிறது.

## காந்தியடிகள் நூல்திரட்டு!

தகவல் ஒலிபரப்புத் துறையின் புத்தக வெளியீட்டுப் பிரிவினர் காந்தியடிகளின் நூல் திரட்டை வெளியிட்டுள்ளனர். ஆங்கிலத்தில் 70 தொகுப்புக்களும், இந்தியில் 67 தொகுப்புக்களும் இதுவரை வெளியிடப்பட்டுள்ளன. மொத்தம் 91 தொகுப்புக்கள் வெளிவரும் என்று தெரிகிறது.

இந்தத் திட்டம் 1956 பிப்ரவரியில் ஆரம்பிக்கப்பட்ட காலத்திலிருந்து பிரதமர் திரு மொரார்ஜி தேசாய் அவர்கள் அதன் ஆலோசனைக் குழுவின் தலைவராக இருந்து வந்திருக்கிறார்.

காந்தியடிகளின் கட்டுரைகள், பேச்சுக்கள், கடிதங்கள் வரிசைக்கிரமமாகச் சேர்க்கப்பட்டுள்ளன. இந்தியாவின் நல் வாழ்வுக்காகத் தன்னை அர்ப்பணித்துக் கொண்ட ஒரு மகத்தான வாழ்க்கையை விவரிக்கும் இத்தொகுப்புக்கள் காந்தியடிகளைப் பல்வேறு கோணங்களில் படம் பிடித்துக் காட்டுகின்றன.

இந்தத் தொகுப்புக்கள் முழுவதும் வெளிவரும் நேரத்தில், இந்திய விடுதலைப் போராட்ட வரலாற்றை அறியத் துடிப்பவர்களின் அறிவு வேட்கையைத் தணிக்கும் வகையில் அவை இலங்கும். அதற்கு மேல் காந்தியடிகள் இந்திய மக்களின் வறுமை, இந்து-முஸ்லீம் மனக்கசப்பு, தீண்டாமை ஆகியவை கண்டு எவ்வளவு வேதனைப்பட்டார் என்பதையும் இந்தத் தொகுப்புக்கள் விளக்கும்.



# எங்கும் எல்லார்க்கும் குடிநீர் கிடைக்க....

குடிநீர் எல்லா மக்களுக்கும் கிடைக்க வேண்டும். குடிநீர் மனிதனின் இன்றியமையாத் தேவை. ஆனால், துரதிருஷ்டவசமாக, எல்லா மக்களுக்கும், இதை நாம் கொடுக்க முடியவில்லை. குறிப்பாக, கிராமப் பகுதிகளில் நிலைமை திருப்தியளிப்பதாக இல்லை. நமது நாட்டில் நகர்ப் புறங்களில் 3119 நகரங்கள் உள்ளன. அவற்றில், 1890 நகரங்களுக்குப் பாதுகாக்கப்பட்ட குடிநீர் கிடைக்கிறது. கிராமப் பகுதிகளில் இன்னமும் கிராமப் பெண்கள் மைல் கணக்கில் நடந்து சென்று தலைச்சுமையாக எடுத்துக் கொண்டு வரும் அவலநிலை உள்ளது.

கிராமங்களுக்கு விரைவாகக் குடிநீர் வழங்கும் திட்டத்தை மத்திய அரசு வகுத்தளித்துள்ளது. இதற்காக, மத்திய அரசு நிதி நிலை அறிக்கையில் ரூ. 400 மில்லியன் ஒதுக்கீடு செய்துள்ளது. மாநில அரசுகள் தனியாக நிதி ஒதுக்கியுள்ளன.

**மத்திய அரசும், மாநில அரசுகளும் இணைந்து செயல்படுத்தும் இத்திட்டத்தின் மூலம் இன்னமும் தண்ணீர் வசதி இல்லாத 15,000 கிராமங்களுக்கு 1977—78-ல் தண்ணீர் வசதி செய்து கொடுத்துவிட முடியும்.**

இதற்குப் பின்னரும் நீர் வசதி சரியாக இல்லாத 98,000 கிராமங்கள் இருக்கும். நீர் எடுப்பதற்கு 1.6 கிலோ மீட்டர் தூரத்திற்கும் அதிகமாக நடந்து செல்ல வேண்டிய அல்லது நீரில் பரவும் தொத்து நோய்கள் உள்ள அல்லது உடல் நலத்திற்குத் தீங்கு விளைவிக்கும் இரசாயனப் பொருட்கள் கலந்த நீர் கிடைக்கும். கிராமங்களை முறையான ''நீர் வசதி இல்லா''க் கிராமங்கள் என்று அரசு வகுத்துள்ளது.

1972-73-ஆம் ஆண்டு மத்திய பொதுப்பணி, வீட்டு வசதித் துறை ஓர் ஆய்வு நடத்தியது. அதில் முறையான நீர் வசதி இல்லாத கிராமங்கள் 1.53 இலட்சம் உள்ளன என்று கணக்கிடப்பட்டது.

4-வது திட்ட முடிவில் 1,000 கிராமங்களுக்கு நீர் வசதி செய்து கொடுக்கப்பட்டது. குடிநீர் வசதித் திட்டங்கள் விரைவுபடுத்தப்பட வேண்டும் என்பதற்காக, 5-வது திட்டத்தில் 'குறைந்த பட்ச'த் தேவைகள் திட்டத்தின்கீழ், நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. 1974 முதல் 1977 வரை, சுமார் 39,000 கிராமங்களுக்கு ரூபாய் 1,719 மில்லியன் செலவில் குடி நீர் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டன.

சில பகுதிகளில் தொடர்ந்து வறட்சி நிலவியதால், நீர்த் தேக்கங்கள் காய்ந்து விட்டன. அல்லது நீர்ப் படிவங்கள் கீழே சென்றுவிட்டன. எனவே மீண்டும் ஆய்வு செய்து நீர் வசதி இல்லாத கிராமங்களைக் கணக்கெடுக்க வேண்டியிருக்கிறது. துரதிருஷ்டவசமாக, மேலும் பல்லாயிரக் கணக்கான கிராமங்கள் முறையான நீர் வசதியின்றித் தவிக்கின்றன.

நகர்ப்புறங்களைப் பொறுத்த வரை குடிநீர் வழங்குதல் அவ்வளவு மோசம் இல்லை. சிறிய நகரங்களுக்குப் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கும் ஏற்பாடுகள் இன்னமும் விவரிக்கப்பட வேண்டியுள்ளது. சுமார் 1229 நகரங்களுக்கு இன்னும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் கிடைக்கவில்லை. 1974 முதல் 1978 வரை நான்காண்டுகளில் நகர்ப்புற நீர்த் திட்டங்களுக்காக ரூபாய் 3,940 மில்லியன் செலவிடப்பட்டிருக்கிறது.

நகர்ப்புறக் குடிநீர் வசதிகளுக்கான தேவைகளை மதிப்பிடுவதற்காக ஏற்கெனவே ஓர் ஆய்வுக்குழு நியமிக்கப்பட்டிருக்கிறது.

பாதுகாக்கப்பட்ட குடிநீர் மக்களது அடிப்படைத் தேவையை மட்டும் நிறைவேற்றவில்லை. நீரால் பரவும் தொத்து நோய்களையும் ஒழிக்கிறது. நீரால் வரும் தொத்துநோய்களால் ஏராளமான மக்கள் உயிர் இழக்கிறார்கள். எனவே, எல்லா மக்களுக்கும் குடிநீர் வழங்கும் பிரச்சினை மிகப் பெரியது. மேலும் இதை நிறைவேற்ற, நிதி வசதி, பெரும் தடைக்கல்லாகக் குறுக்கே நிற்கிறது. எத்தனை இடையூறுகள் இருந்தாலும் அடுத்த ஏழு ஆண்டுகளில் ஒவ்வொரு வீட்டிற்கும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் கிடைக்க வேண்டும் என்பதில் அரசு உறுதி பூண்டு செயல்பட்டு வருகிறது.

அறக் கட்டளைகள், சமூக சேவை நிலையங்கள் குடிநீர்ப் பிரச்சினையை தீர்த்து வைப்பதை மனிதாபிமானப் பிரச்சினையாகக் கொண்டு முழு ஒத்துழைப்பினையும் அரசுக்கு அளித்திடவேண்டும்.

# சிந்தனையின் மலைமுகடே....!

தென்பொதியைச் சந்தனமே! தென்றல் காற்றே!
தெவிட்டாத தேன்மழையே! அறிவின் ஊற்றே!
புன்னகையின் பேருருவே! புலவோர் பாட்டின்
பொருளாகும் தத்துவமே! புகழின் குன்றே!
முன்னவரும் பின்னவரும் 'அண்ணா' வென்றே
முழங்குகிற பேறுபெற்ற காஞ்சிச் செல்வ!
தன்னலமே எண்ணாமல் தமிழி னத்தின்
தன்மானம் காத்திட்ட தலைமைப் பேறே!

குறளுருவம் கொண்டிந்தக் குவல யத்தில்
குறளுக்கே விளக்கஉரை யாகி நின்றாய்!
பிறகொள்கை யுடையோரும் போற்று கின்ற
பெருமைபெற்ற பெருந்தகையே! கொள்கைக் கோவே!
நெறிகாத்தாய்! அரசியலில் நேர்மை காத்தாய்!
நெஞ்சத்தைத் தொண்டர்க்கே இடமாய் ஈந்தாய்!
கறையற்ற பெருவாழ்வு வாழ்ந்தாய்! எங்கள்
காவியத்தின் நாயகனாய் நிலைத்து விட்டாய்!

தலைப்பில்லா நாட்டிற்குத் தமிழ்நா டென்னும்
தக்கதொரு தலைப்பீந்தே இந்த நாட்டின்
நிலையுயராத் துறைதோறும் திட்ட மிட்டாய்!
நீ எங்கள் நெஞ்சத்தே நிலைத்து விட்டாய்!
குலவிளக்கே! ஏழைகளின் வாழ்வில் இன்பம்
கொழித்திடவே நல்லாட்சி புரிந்த மேலோய்!
நிலவானாய் தமிழகத்து வானில்! எங்கள்
நெஞ்சத்தே நின்றுறையும் தெய்வ மானாய்!

சிந்தனையின் மலைமுகடே! கீழை நாட்டுச்
சிறப்பான பண்புகளை மேல்நாட் டாரின்
சிந்தனைக்கு விருந்தாக்கிச் சிறப்புப் பெற்ற
சீராள! அடக்கத்தால் உலகை வென்றாய்!
சந்ததமுன் சிந்தனைகள் எம்மை இங்கே,
தகுமுறையில் வழிகாட்டிச் செல்லும் என்றோ
சந்தனம்போல் உனையழித்து மணம ளித்துத்
சந்தனச்சீர்ப் பேழையிலே அடங்கி விட்டாய்?

**கவிஞர் சாமிபழனியப்பன்**



# ஒளிமயமான எதிர்காலம்...



மின் சக்தி, நாட்டின் வளர்ச்சித் திட்டத்துக்கு ஒரு முக்கியமான தேவைப் பொருளாகத் திகழ்கிறது. நாடு தொழில் மயமாக்கப்படுவதற்கு அது இன்றியமையாதது. அதோடு, மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்கும் அவசியமானது. எந்தத் தொழிலை எடுத்துக்கொண்டாலும், உருக்கு, ரயில் என்ஜின்கள், இரசாயனப் பொருள்கள் தொழிற்சாலைகளில் அதிக அளவு உற்பத்திக்கும் அவற்றின் துரித முன்னேற்றத்துக்கும் அடித்தளமாக இருப்பது மின்சக்தியேயாகும். வேளாண்மைத் துறையிலும் மின்சாரம் ஒரு முக்கிய அங்கம் வகிக்கிறது.

அன்றாட வாழ்வில் பொது மக்களுக்கு மின் சக்தி மிகவும் அவசியம். மின்விசிறி, குளிர்பதன வசதி, அறை சூடாக்கும் இயந்திரங்கள், மின் சமையல் கருவிகள், இப்படி வரிசையாக மனித வாழ்க்கைக்கு மின்சாரத்தின் அவசியத்துக்குரியவற்றை விவரித்துக் கொண்டே போகலாம். ஏன், மனிதனுக்கு எளிதாகக் கிடைக்கும் பொழுதுபோக்குத் துறையான திரைப்படத்துக்குக் கூட மின்சாரம் இல்லையெனில் ஒன்றுமே இயலாது அல்லவா? ஆக, இன்றைய நவீன உலகில் மின்சாரம் மனிதனின் இன்றியமையாத் தேவைகளில் ஒன்றாகிவிட்டது.

**மின் சக்தி உற்பத்தியில் முன்னேற்றம் :**

நாட்டில் மின் சக்தி உற்பத்தித் திட்டம், நாடு சுதந்தரம் பெற்ற பிறகு மிகவும் வளர்ச்சி அடைந்திருக்கிறது. 1947-ஆம் ஆண்டில் நாட்டில் மொத்த மின் உற்பத்தி 1900 மெகாவாட்டாக இருந்தது. தற்சமயம் இது 21,000 மெகாவாட்டாகப் பெருகி உள்ளது.

நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் நிறுவப்பட்ட மின்சக்தி நிலையத்திலிருந்து 4160 மெகாவாட் கூடுதலான மின் சக்தி கொள்ளளவு கிட்டியது. ஐந்தாண்டில் முதல் மூன்று ஆண்டுகளில் கூடுதலான மின் சக்தியின் கொள்ளளவும் 5241 மெகாவாட் ஆக உயர்ந்தது. புதிய மின் நிலையங்கள் அமைப்பினால் ஆண்டுதோறும் அதிகரித்துள்ள மின் சக்திக் கொள்ளளவு :—

1974-75-ல் 1725 மெகாவாட், 1975-76-ல் 1804 மெகாவாட், 1976-77-ல் 1712 மெகாவாட், ஆக மொத்தம், 5241 மெகாவாட்டுகள் ஆகும்.

நடப்பாண்டில் (1977-78-ல் மின்சக்திக் கொள்ளளவு 2400 மெகாவாட் கிடைப்பதற்கான சாத்தியக் கூறு ஏற்பட்டுள்ளது. இதில் 445 மெகாவாட் மின் சக்தி ஏற்கெனவே கிடைக்கத் தொடங்கிவிட்டது.

**மின்சக்திக் கருவிகள் கொள்ளளவு :**

நாட்டின் கனமின் ஆலைகளில் மின் கருவிகள் தயாரிப்பு அதிகரித்து, அனல் மின் ஆலைகள், நீர்மின் சக்தி ஆலைகள் நிறுவுவதற்கான முக்கியமான மின் ஆலைக் கருவிகள் தன்னிறைவு பெற்றுள்ளன. மின் கருவி தயாரிப்புகளில் உள்ள ஒரு சிறப்பான அம்சமென்னவெனில், அவை பிரும்மாண்ட 165 மெகாவாட் அனல் மின் ஆலைக்காகவும் 200 மெகாவாட் நீர்மின் நிலையங்களுக்காகவும் தயாரிக்கப்படுகின்றன.

**மின் சக்தி அனுப்புதலும் வழங்குதலும :**

மின்சக்தி வழங்கப்படும் நீளம் அதிகரித்ததோடு, 500 வோல்ட் மின்சாரம் அனுப்பப்படுவதற்கும் வசதி ஏற்பட்டுள்ளது. 1947-ஆம் ஆண்டின் மின்சக்தி 22,600 கிலோ மீட்டர் தூரத்திலிருந்து 6,90,500 கிலோ மீட்டர் தூரத்துக்கு நான்காவது திட்டத்தின் முடிவில் நீட்டிக்கப்பட்டுள்ளது. 1977-78-ஆம் ஆண்டில் மின் சக்தி விநியோகம் 10,219 கிலோ மீட்டர் தூரத்துக்குக் கிடைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

தேசிய மின்சக்தி அமைப்பு (*National Grid*) அமைக்கும் திட்டக் குறிக்கோள் பற்றிய சிந்தனை இன்னும் நம்மில் எழவில்லை. இருந்தாலும், இந்தக் குறிக்கோளை ஒரு வட்டாரத்தில் இணைந்து கூட்டுச் செயல்முறைகளுக்கும், மின் சக்தியினைப் பரிமாறிக் கொள்ளவும் வட்டாரங்களுக்குள் ஏற்படவும் வழிவகைகள் செய்து, நிறைவேற்றத் தக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. நம் தேசத்திலுள்ள ஐந்து வட்டாரங்களிலும் அத்தியாவசிய மின் சக்தி அளவு விநியோகங்களுக்

கான ஏற்பாடும் அநேகமாக எல்லா மாநிலங்களிலும் தக்க வட்டார மின்சக்தி விநியோக நிலையங்கள் மூலமாகக் கிடைக்க வழிவகைகள் செய்யப்பட்டுள்ளன. நம் நாட்டின் ஐந்து வட்டாரங்களும் வடக்கு, மேற்கு, தெற்கு, கிழக்கு, வடகிழக்கு வட்டாரங்களாகப் பிரிக்கப்பட்டு இயங்கி வருகின்றன. அதிக அளவு மின்சக்தி விநியோகிக்கக் கூடிய மின்சக்தி விநியோக நிலையங்கள் அமைப்பதற்கான பிரும்மாண்டமான திட்டம் உருவாகிக் கொண்டிருக்கிறது. அது 1980-81-ல் நிறைவேற்றப்படலாம்.

## நெய்வேலியில் 2-வது சுரங்கம்

நெய்வேலியில் இரண்டாவது சுரங்கம் வெட்ட அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. இதிலிருந்து கிடைக்கும் பழுப்பு நிலக்கரி 630 மெகாவாட் திறன் கொண்ட மின் நிலையத்தை இயக்கப் பயன்படும். இந்த நிலையம் ஒவ்வொன்றும் 210 மெகாவாட் திறன் கொண்ட மூன்று யூனிட்டுகளைக் கொண்டது. முதல் யூனிட்டு 1981-ல் செயல்படத் தொடங்கும். ரூ. 213.98 கோடி செலவில் இத்திட்டம் அமைக்கப்படும்.

### ஆராய்ச்சியும் பயிற்சியும் :

தேசிய மின்சக்தி வளர்ச்சிக்கான திட்டத்தில் மின்சக்தி ஆராய்ச்சிகள், பயிற்சிகளுக்கான வழிமுறைகளுக்கும் வசதிகள் செய்யப்பட்டுள்ளன. மத்திய மின்சக்தி ஆராய்ச்சிக் கழகத்தைப் பலப்படுத்துவதற்கும், மின்சக்திப் பயிற்சி முறைகளான மின் விநியோகப் பயிற்சி, அனல் மின் நிலைய நிர்வாகப் பயிற்சி ஆகியவற்றில் ஈடுபட்டுள்ள பயிற்சிக் கழகங்களின் நிர்வாகத் திறனை வளரச் செய்வதற்கும் ஐந்தாவது திட்டத்தின் முன்னேற்றம் காணப்பட்டுள்ளன.

### மத்திய மின்சார நிறுவனம்:

மின்சக்தி வளர்ச்சித் திட்டத்தின் முக்கிய அங்கம் மத்திய மின்சார நிறுவனத்தைப் பலப்படுத்துவதாகும். இப்பொழுது மின்சக்திக்கு ஏற்பட்டு வரும் வரவேற்பைச் சமாளிப்பதற்கு மின்சாரத் தொழில் முழுவதும் மாற்றம் காணவேண்டியது அவசியம். அதோடு மாநில மின்சார வாரியங்களின் பகுதிகளைச் செம்மைப்படுத்த வேண்டும்.

ஒரு கோடிக்கு மேல் முதலீடு செய்யப்படும் எல்லா மின்சாரத் திட்டங்களுக்கான தொழில் நுணுக்க, பொருளாதாரப் பரிசீலனை அவை முதலீடு செய்யப்படுவதற்கு முன் நடைபெற்று, மத்திய மின்சாரச் சட்டம் ஒரு தேசிய மின்சக்தித் திட்டத்துக்குத் தயாராக வேண்டும். அதோடு இந்தத் திட்டங்களுக்கும் மின்சக்தித்துறை வளர்ச்சிக்கும் தொழில்நுட்ப வழிமுறைகளுக்கும் இந்த மின்சக்தித் தேசியத் திட்டம் வழிகாட்ட வேண்டும். அந்த மத்திய மின்சாரச் சட்டத்தில் வேண்டிய வழிமுறை கண்டு, மாநிலங்களில் மின்சக்தி விநியோகத் தொழிலகங்கள் ஏற்படச் செய்ய வேண்டும். இந்த மின்சக்தி விநியோகத் தொழிலகங்கள் நிர்மாணமும் மின்சக்தி உற்பத்தியும் மத்திய அரசின் மேற்பார்வையில் இயங்கினால் திறம்பட இயங்குவதற்குச் சாத்தியக் கூறுகள் உள்ளன. இதனால் அதிக அளவு நிபுணத்துவமும், ஆற்றலும் பெருக ஏதுவாகும்.

மின்சக்தி உற்பத்தித் துறையில் மின்சக்தி வளர்ச்சிக்குத் சிறப்புத் திட்டங்கள், மின்சக்தி அனுப்புதல், விநியோகம், ஆராய்ச்சிகளும் பயிற்சிகளும் தொடர்ந்து காணல், தற்போதுள்ள மின் நிலையங்களின் செயலாற்றலில் வளர்ச்சி காணல், அனல் மின்சக்தி நிலையங்களின் செயல்திறனை அதிகரித்தல், இயக்கும் நேரத்தைக் குறைத்துத் தடைகளை நீக்குதல், ஏற்கெனவே முதலீடு கண்ட மின் நிலையங்களின் ஆற்றலைப் பெருக்கி அதிக அளவு மின் சக்தி காண வழி வகுத்தல் ஆகியவை மின்சக்தி வளர்ச்சித் திட்டங்களில் இடம் பெற்றுள்ளன.

மின்சக்தி, அதிக அளவு முதலீடு தேவைப்படும் தொழில். மின்சக்தி தொடர்ந்து உற்பத்தியாகிக் கொண்டும், இயக்கிக் கொண்டும் இருக்க வேண்டிய தொழிலாதலால், இடையறுது மின்சக்தி கிடைப்பதற்குப் புதிய மின் நிலையங்கள் நிறுவனமும் குறைந்த செலவில் ஆகி, மின்சக்தியும் பாய்ந்து கொண்டேயிருக்க வேண்டியது அவசியம். இந்த இடையறுத சேவைக்கு மத்திய மின்சக்தி நிறுவனத்தில் செயலாக்கக் கழகம் நிறுவப்படும். இடையறுத மின்சக்தி பாய்வதற்கான வழிகாணும் மின் நிலையத் திட்டங்கள் அமைப்புக்கும், விநியோகச் செயலாற்றலுக்கும் வழிவகைகளை மாநிலங்கள் காண வேண்டும்.

### எதிர்காலத்துக்கான மின் சக்தித் திட்டம் :

1978-79லிருந்து 1982-83-ஆம் ஆண்டு வரை ஒரு மின்





சக்தித் திட்டம் தீட்டுவதற்கு மத்திய அரசு தற்சமயம் ஈடு பட்டுள்ளது. பத்தாவது ஆண்டு மின்சக்தி நிர்ணயக்குழு 1982-83 ஆம் ஆண்டு வரை தேவைப் படும் மின்சக்தி பற்றி நிர்ணயித் துள்ளது. இந்த மதிப்பீடு அடிப் படையின் மீது மத்திய மின்சார நிறுவனம் தேவைப்படும் மின் கொள்ளளவின் ஆரம்ப நிலைகளை ஆராய்ந்துள்ளது. அதோடு 1978-79லிருந்து 1982-83 வரை திட்டத்தில் சேர்க்க வேண்டிய மின் திட்டங்கள் பற்றி அறிவித் துள்ளது. இந்த ஆராய்ச்சியில், மின்சக்தி அனுப்புதல், விநி யோகம், கிராமப்புற மின் இணைப்பு ஆகியவை அடங்கும். ஆராய்ச்சி விவரப்படி 2 கோடி 23 இலட்சம் கிலோவாட் மின் சக்திக்கு இன்னும் ஐந்து ஆண்டு களில் வழி கண்டால், தேவைப் படும் மின் சக்திக் கோரிக்கையை ஈடு கட்ட முடியும்.

### வற்றுத களஞ்சியம் :

நம் தேசத்தில் பெருமளவு நீர் வசதி இருக்கிறது. திட்டத்தினை யதார்த்த நோக்கில் காணப் புதிய நீர் மின் நிலைய இடங்களை ஆராய்ந்து கண்டறிதல் அவசியம். புதிய மதிப்பீட்டு முறையை அம லாக்கி நீர்மின்நிலைய வளத்தை அறிதல் வேண்டும். இதன் பொருட்டு, மத்திய மின்சக்தி நிறுவனத்தில் ஒரு சிறப்புப் பகுதியை நிறுவி, நாட்டின் நீர் மின்நிலைய வளத்தைத் தேசீய மதிப்பீட்டுப்படி காண வசதி செய்யப்பட்டிருக்கிறது.

நீர்மின் நிலையம் மின் சக்தித் துறையில் வற்றுத களஞ்சியம். அதோடு சிக்கனமாகவும், எளி தாகவும் மின் சக்தியைப் பெறும் வசதிமிக்கது. மேலும் மின் சக்தியைச் சேமிப்புச் செய்யும் வசதி படைத்த நீர் மின் நிலையம் அதிக அளவில் மின் சக்தி வரும் குறைந்த அளவு விலையுள்ள சாத னம். ஆகவே மின்சக்திக்குத் திட்டமிடும்போது, அங்கெல் லாம் அவற்றை நிறுவுவதற்கு மிகுந்த முக்கியத்துவம் அளிக்கப் படும்.

### அனல் மின் நிலையம் :

தொழிற்சாலைகளுக்குத்தேவைப் படும் மின் சக்தி பெருமளவில் அனல் மின் நிலையத்திலிருந்து கிடைக்க வேண்டும். இந்த அனல் மின்நிலையங்கள்அமைப்பதற்கான நுணுக்கத்தை ஆராய்ந்தால் ஒவ்வொரு மாநிலத்தின் தேவைக் கேற்ப அமைத்தல் சாலப் பொருத்தம். மத்திய அரசின் ஒவ்வொரு மாநிலத்திலும் மிகப் பெரிய அளவில் அனல் மின் நிலையங்கள் அமைப்பது ஒவ் வொரு மாநிலத்தின் மின்சக்தித் தேவையைப் பூர்த்தி செய்வதா கும். இப்போது நடைமுறை யிலுள்ள அனல் மின் நிலையங்களை விரிவாக்குதல், முன்புள்ள அடித் தளத்தைப் பயன்படுத்துதல், அதிலேயே அதிக அளவு உற்பத் திக்கு உறுதுணை செய்தல் ஆகி யவை திட்டத்தின் கூடுதல் கொள்ளளவு ஆகும்.

### எதிர்கால வாய்ப்பு :

மின்சக்தியின் எதிர்காலத் திட் டத்தில் முக்கிய குறிக்கோள், மின்சக்தி வளர்ச்சியை அதிகரித் தலும், தேவைகளைப் பூர்த்தி செய்தலும் ஆகும். இதற்காக மத்திய அரசு மின் சக்தி வளர்ச் சிக்காகக் கையாளும் அணுகு முறையின் சிறப்பியல்புகளைப் பின் வருமாறு குறிக்கலாம்.

• மத்தியப் பகுதியில் மின் சக்தி இயங்கும் முறைகளில் வளர்ச்சி காணல், மாநில மின் ஆலைகள் குறித்த காலத்தில் நிறைவேற வழி வகுத்தல்:

* மின் நிலையச் சாதனங்கள், கருவிகள் கிடைப்பதற்கான கால விரயத்தைத் தடுத்தல், தொடர்ந்து கிடைப்பதற்கான வழிமுறைகள் காணல்;

* மனித சக்திகளின் தேவை களைத் திட்டமிடுதல்

* பெருமளவு மின் சக்தி நிலை யத் திட்டத்தைச் செயலாக்க முயற்சி மேற்கொள்ளுதல்.

* மின் நிலைய மாதிரிகள், வரை படங்கள் தரமாக அமைய ஏற்பாடு.

* காலத்தில் வற்றுமல் நிதி வசதி கிட்ட நம்பிக்கை யூட்டல்.

* மாநிலங்களின் நிர்வாகத்தி லுள்ளவற்றில் மத்திய அரசு பங்கு கொண்டு, வட்டார மின் சக்தி நிலையங்களுக்கும், மின் அனுப்புதல் வசதிகளை அதிகரித்த லுக்கும் வழி காணல்.

1983-84லிருந்து 1987-88 வரை மின்சக்தித் திட்டங்கள் வளர்ச்சிக்கானவற்றை நிர்ண யித்து, அடுத்த ஐந்து ஆண்டுக் காலத்தில் மின் சக்தித் திட்டம் செயலாற்ற வேண்டிய வழிமுறை களையும் கண்டறிதல் அவசியம். அப்படி எதிர்காலக் கண்ணேட் டத்துடன் செய்தால் அந்த மின் சக்தித் திட்டங்களினுல் இயங்கும் தொழிற்சாலைகளினுல் கிடைக்கும் பலன்களை முழுமையாக அந்தந் தக் காலத்திலேயே அனுபவிப் பது என்பது நடைமுறை உண் மையான ஒன்ருகிவிடும்.

## நீலகிரியில் தேயிலை தயாரிக்கும் தொழிற்சாலை !

நீலகிரி மாவட்டத்தில் கூடலூருக்கு அருகே உள்ள சோங் கோடு என்னுமிடத்தில் தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகத் தினுல் நிறுவப்பட்டு சுமார் 1 கோடி ரூபாய் செலவில் கட்டப் பட்ட தேயிலை தயாரிக்கும் தொழிற்சாலை அண்மையில் துவக்கி வைக்கப்பட்டது. இந்தத் தேயிலைத் தோட்டம், ஸ்ரீலங்காவிலிருந்து குடிபெயர்ந்து வந்துள்ள மக்களுக்கு மறுவாழ்வு அளிக்கும் நோக்கத்தோடு சுமார் 1500 ஹெக்டேர் நிலப்பரப்பில் உருவாக் கப்பட்டிருக்கிறது. இதற்கு சுமார் 6 கோடி ரூபாய் செலவு ஆகும். இதன் மூலம் 3750 பேருக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும். இதுவரை 1288 ஹெக்டேரில் தோட்டம் அமைக்கப்பட்டுள்ளது. 1114 குடும்பங்களுக்கு மறுவாழ்வு அளிக்கப்பட்டுள்ளது.



# முன்னேற்றத்தின் நுழைவாயில்

திரு. சுர்ஜித்சிங் பர்னுலா
மத்திய வேளாண்மை
நீர்ப் பாசனத்துறை அமைச்சர்

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் 6-வது பட்டமளிப்பு விழாவில் கலந்து கொள்வதில் மகிழ்ச்சியடைகிறேன். கோவை வேளாண்மைக் கல்லூரிகளும், சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரியும் வேளாண்மைக் கல்வியிலும், ஆராய்ச்சியிலும் முக்கிய பங்கு வகித்து வருகின்றன. தேசீய சர்வதேச அரங்குகளில் புகழ்பெற்ற பல திறமையான வல்லுநர்களைக் கடந்த எழுபது ஆண்டுகளாக இந்தக் கல்லூரிகள் வழங்கி வந்திருக்கின்றன. தலைசிறந்த இக் கல்லூரிகள் இப்போது தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் அங்கங்களாக ஆகிவிட்டிருப்பது கண்டு மகிழ்ச்சியடைகிறேன். வழிவழியாக வரும் ஆராய்ச்சி, கல்வியின் உயர்ந்த தரம் பேணிப் பாதுகாக்கப்படும் என்பதில் எனக்கு எந்த விதமான சந்தேகமும் இல்லை. **உங்கள் பல்கலைக்கழகம் இப்போது இந்தியாவில் முன்னணியில் வந்து கொண்டிருக்கிறது. இந்தியாவில் தலைசிறந்த கல்வி நிலையங்களில் ஒன்றாக அது விளங்கும் என்பதில் சந்தேகமில்லை.** இப்போது தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் இணைந்துள்ள கல்லூரிகளின் சிறப்பிற்குக் காரணமானவர்கள் அனைவரையும் நான் பாராட்டுகிறேன்.

இந்தியாவில் வேளாண்மைப் பல்கலைக் கழகங்கள் தொடங்கப்பட்டு 10 ஆண்டுகளுக்குப் பின்னர்தான் உங்களது பல்கலைக் கழகம் ஆரம்பிக்கப்பட்டது. சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரி சமீப காலம் வரை வேளாண்மைப் பல்கலைக் கழகத்தோடு இணைக்கப்படவில்லை. மாநிலம் முழுவதிலும் நடந்து வரும் வேளாண்மை ஆராய்ச்சி நிலையங்கள் இந்தப் பல்கலைக் கழகத்தோடு இணைக்கப்படும் நடவடிக்கைகள் இன்னும் முற்றுப் பெறவில்லை.

கடந்த ஆறுண்டுகளில் இப் பல்கலைக் கழகம் தன்னுடைய படிப்பு, ஆராய்ச்சி வசதிகளை விரிவுபடுத்துவதில் நல்ல முன்னேற்றம் கண்டிருக்கிறது. ஏற்கெனவே செயல்படும் துறைகள் தவிர, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம் புதிய யூனிட்டுகளையும் கல்லூரிகளையும் தொடங்க நடவடிக்கை எடுத்திருக்கிறது. நம்முடைய வேளாண்மை வளர்ச்சிக்குத் தேவையான பல்வேறு வசதிகள் இதன் மூலம் கிடைக்கும். அண்மையில் வேளாண்மைப் பொறியியல், மீன் வளம், காட்டு வளம் ஆகியவற்றுக்கான கல்லூரிகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன. விலங்கினங்கள் பற்றிய அறிவியலில் விலங்கினங்களின் உற்பத்திக்கு முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது. இந்தக் கல்லூரிகள் அனைத்தும் வேளாண்மைப் பல்கலைக் கழகம் கொண்டு வரும் எல்லாச் சீர்திருத்தங்களையும் ஏற்றுச் செயல்படுத்தி வருகின்றன. எந்தக் கல்வி நிலையமும் அதன் ஆசிரியர் திறமையைப் பொறுத்தே வெற்றி பெறும். மற்றப் பல்கலைக்கழகங்களைவிட தாமதமாகத் தொடங்கிய உங்கள் பல்கலைக்கழகத்தில் விரைவில் ஆசிரியர் பயிற்சி வளர்ச்சித் திட்டங்களை மேற்கொள்ள வேண்டும் என்று நான் வற்புறுத்த விரும்புகிறேன். மற்ற வேளாண்மைப் பல்கலைக்கழகங்கள் 15 ஆண்டுகளுக்கு மேலாக அனுபவம் பெற்றிருக்கின்றன. உங்களது அனுபவம் உங்களது பல்கலைக்கழக வட்டாரத்துக்குள்ளேயே அடங்கிவிட்டது. இந்த தனித்த போக்கைக் கைவிட்டு வேளாண்மை—கால்நடை மருத்துவக் கல்லூரிகளுக்கிடையே ஓர் ஒருங்கிணைப்பை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். இரண்டும் ஒன்றின் முக்கியத்துவத்தை மற்றொன்று அதிகப்படுத்துகிற அளவிற்கு ஒருங்கிணைப்பு அமைய வேண்டும்.

நம்முடைய கல்வித் திட்டங்கள் நமது வேளாண்மை வளர்ச்சித் தேவைகளுக்கு ஏற்றதாக இருக்க வேண்டும். நாட்



டின் பொருளாதார வளர்ச்சிக் கான முறை வைப்புக்களில் வேறு எந்தத் துறை வேண்டு மென்றாலும் காத்துக் கொண் டிருக்கலாம். ஆனால் நமது வேளாண்மை காத்திருக்க முடி யாது.

வேளாண்மைக் கல்வி அனைத்தி லும் நாம் கிராமப் பின்னணிக்கு முக்கியத்துவம் அளிக்கவேண்டும். மனையியல் விஞ்ஞானம் உட்பட அனைத்து வேளாண்மைக் கல்வி யும், கிராமப்புறத்து இளைஞர் களைக் கவர்ந்து இழுப்பதாக அமைய வேண்டும். செயல்முறைப் பயிற்சியை வலியுறுத்த வேண் டும். வயல்களில் பணியாற்றிய தங்கள் அனுபவத்தை வேளாண் மைப் பட்டதாரிகள் தங்களது நெஞ் சத்தில் தேக்கிவைத்து கிராமங் களுக்கு அவற்றைக் கொண்டு சென்று தாங்களே சுயமாகத் தொழில் செய்து கொள்ள நம்முடைய கல்விமுறை பயன்பட வேண்டும். நமது ஆசிரி யர்கள் முதல்தரமான செயல் திட்ட அனுபவம் பெற்றிருந் தால்தான் இது சாத்தியமாகும், வெறும் ஏட்டுக்கல்வி மட்டும் நமது கிராம வளர்ச்சிக்குப் போது மானதல்ல. முதியவர்களுக்கும் சம்பிரதாயமில்லாத வகையில் கல்வியளிக்க வேண்டும். பல்கலைக் கழகங்களில் சேருவதற்கு வரும் மாணவர் கூட்டத்தை, – நெருக் கடியைக் குறைப்பதற்காக தொடர் கல்விக்கும் வகை செய்ய வேண்டும். இதற்காக அஞ்சல் கல்வியைத் தொடங்க வேண்டும். அஞ்சல்வழிக் கல்வி யில் வேளாண்மைப் பல்கலைக் கழகங்கள் மகத்தான பணியாற்ற முடியும்.

நவதானிய உற்பத்தியில் நாம் நல்ல முன்னேற்றம் கண்டிருக் கிறோம். கால்நடைகள் உற்பத்தி யிலும் நல்ல முன்னேற்றம் கண்டி ருக்கிறோம். பருப்புகள், எண் ணெய் வித்துக்கள் ஆராய்ச்சி யில் நாம் இன்னும் பெருமளவில் வெற்றிபெறவில்லை.

தோட்டப் பயிர்கள், வர்த் தகப் பயிர்கள், உள்நாட்டு மீன் பிடிப்பு, வேளாண்மையை அடிப் படையாகக் கொண்ட வனவளம் ஆகியவற்றை நாம் வலுப்படுத்தி யாக வேண்டும். வேளாண்மை முறைகளையே நாம் மாற்றியமைத் தாக வேண்டும். வேளாண்மை யோடு கிராம வளர்ச்சி, கிராம வேலைவாய்ப்பு ஆகியவற்றை இணைக்கும் வகையில் அதிக ஆட்கள் தேவைப்படும் சிறு அளவிலான கிராமத்தை அடிப் படையாகக் கொண்ட தொழிற் சாலைகள் தொடங்கப்பட வேண் டும். கிராம மக்களுக்குப் பயன் படும் வகையில் மண்வளம், தண் ணீர், சூரியசக்தி ஆகியவற்றை அதிக அளவிற்குப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். தென் மாநிலங்களில் மிக நேர்த்தியான இயற்கை சீதோஷ்ணநிலை இருப்பதால் ஆண்டிற்கு மூன்று போகம் நிச்சயமாக விளைவிக்க முடியும்.

தண்ணீர் கிடைப்பது ஒரு பெரும் பிரச்சினையாக இருந்தாலும் தமிழ்நாடு வேளாண்மைப் பல் கலைக்கழகமும் அதன் பட்டதாரி களும் புஞ்சைப் பயிர்கள் மற்றும் நன்செய்ப் பயிர்களுக்குத் தண் ணீரைச்சிக்கனமாகப் பயன்படுத் தும் முறைகளைக் கண்டாக வேண்டும். மண்வளம், நீர்வளச் சேமிப்பு நடவடிக்கைகள் தீவிரப் படுத்தப்பட வேண்டும். இந்த வகையில் இந்தப் பல்கலைக் கழகத் தில் புதிதாகத் தொடங்கப்பட் டுள்ள விவசாயப் பொறியியல் கல்லூரி தொடக்கப் பணிகளை மேற்கொண்டிருப்பது கண்டு மகிழ்ச்சியடைகிறேன். ஒருங் கிணைந்த ஆராய்ச்சிக்கு எல்லாத் துறைகளும் கல்லூரிகளும் ஒன்று பட்டுப் பணியாற்ற வேண்டும். உயர்விளைச்சல் பெறும் வித்துக் களை உருவாக்குவதுடன் அறு வடைக்குப்பின் கிராமப் பகுதிக் குப் பயன்படும் விவசாய அடிப் படையிலான தொழில் முறை களையும் உருவாக்க வேண்டும். நமது நாட்டின் கிராம வளர்ச் சித் திட்டங்களில் பெரும்பாலா னவை வெற்றிகரமாக அமல் நடத்தப்படுவதற்கு வேளாண் மைப் பல்கலைக் கழகங்களின் பட்டதாரிகளைத்தான் பெரும் பகுதி நாம் நம்பியிருக்கிறோம்.

வேளாண்மை வளர்ச்சித் திட்டங்களை முடுக்கிவிடுவதற்கு மிகவும் இடையூறாக இருப்பது நமது வேளாண்மை விளை பொருள்களுக்கு மார்க்கெட் கிடைக்காமல் இருப்பதுதான். முறையான மார்க்கெட்டும் சரியான விலைகளும் இருந்தால் தான் உற்பத்தித் திறன் அதி கரிக்கும். இலாபமும் பெருகும். உத்தரவாத மார்க்கெட்டோ அல்லது நியாயமான விலைகளோ கிடைக்காவிட்டால் உழவர்கள் தீவிர வேளாண்மைத் திட்டத்தை யோ அல்லது விலையுயர்ந்த சாத னங்களையோ பயன்படுத்த மாட் டார்கள். சில வகைத் தானியங் களுக்கு அரசாங்க ஆதரவு விலை, உச்ச விலை போன்ற நடவடிக் கைகளால் உற்பத்தியில் நிலை யான தன்மை கண்டிருக்கிறோம். ஆனால், பருப்பு வகைகள், எண் ணெய் வித்துக்கள், காய்கறிகள், பழங்கள் போன்ற அழுகும் பொருட்கள் இன்னும் நிலையான தன்மைக்கு வரவில்லை. இந்தப் பொருள்கள் விற்பனையில் நடுத் தரகர்கள் பெரும் பங்கு கொண்டு விவசாயிகளுக்கு சாதாரணமாகக் கிடைக்க வேண்டிய இலாபத்தின் பெரும்பகுதியைக் கொண்டு சென்று விடுகிறார்கள். சில்லறை மார்க்கெட்டில் வாங்கிப் புசிப் போர் கொடுக்கும் விலையில் பெரும் பகுதி நடுத்தரகர்களுக்கே போய்விடுகிறது. இந்தப் பிரச்சினை குறித்து நாம் ஆராய்ந்து வரு கிறோம். இந்த வகையில் வேளாண்மைப் பல்கலைக்கழகத் திலுள்ள வேளாண்மைப் பொரு ளாதார வேளாண்மை வளர்ச்சிப் பிரிவுகள் புள்ளி விவரங்களை

சேகரித்து இடைத் தரகர்கள் நுகர்வோரையும் வேளாண்மை உற்பத்தியாளர்களையும் சுரண்டாது தடுக்க வழிவகைகள் கூற வேண்டும்.

இன்னும் பல்லாண்டுகளுக்கு இந்தியா வேளாண்மை நாடாகவே நீடித்திருக்கும். வளர்ந்து வரும் நமது மக்களுக்கு சமச்சீர்ச் சத்துணவை அளிக்கவும் வேளாண்மைப் பொருளாதாரத்தை மேம்பாடடையச் செய்யவும் வேளாண்மைத் துறையின் விஞ்ஞான தொழில்நுட்பம் பயன்படுத்தப்பட வேண்டும். வேளாண்மை, கிராமச் சிறுதொழிலாக மலரவேண்டும். அப்போது தான் இலட்சக்கணக்கான நமது மக்களுக்கு உணவளிக்க முடியும்.

கிராமத்து ஏழைமக்களுக்கு வாழ்வளிக்க முடியும். கிராம மக்கள் நகர்ப்புறங்களுக்கு இடம்பெயர்வதைத் தடுக்க வேண்டுமென்றால் வேளாண்மை கவர்ச்சிகரமான தொழிலாக மாறவேண்டும். கிராம வாழ்க்கை மகிழ்ச்சியும் நிம்மதியும் நிறைந்ததாக இருக்க வேண்டும். இந்த வகையில் வேளாண்மைப் பல்கலைக் கழகங்களின் பங்கு, பணி மகத்தானது. நமது கிராம வளர்ச்சிக்கு தடைக்கற்களாக உள்ள பிரச்சினைகளைத் தீர்ப்பதில் பல்கலைக்கழகங்கள் அரசுக்கு உதவ வேண்டும். அரசாங்கத் துறைகளுடனும் அரசுச் சார்பற்ற அமைப்புகளுடனும் ஒருங்கிணைந்து பணியாற்றி கிராம வளர்ச்சித் திட்டங்களையும் உத்திகளையும் பல்கலைக் கழகங்கள் உருவாக்க வேண்டும். இந்த தேசிய முயற்சிக்கு இந்தப் பல்கலைக் கழகத்தின் விஞ்ஞானிகளும், பட்டதாரிகளும், மாணவர்களும் கணிசமான அளவிற்குப் பணியாற்றுவார்கள் என்று நம்புகிறேன்.

பல்கலைக்கழகப் பட்டம், அரசு வேலைக்கு உத்தரவாதம் அளிப்பது என்றுதான் வாலாயமாகக் கருதப்பட்டு வருகிறது. இந்தச் சம்பிரதாயத்தை வேளாண்மைப் பல்கலைக்கழகத்தைப் பொறுத்த வரையில் கைவிட்டு விடவேண்டும். அரசாங்கம் தவிர சுயச்சார்புத் தொழில் உட்பட பல்வேறு வழிகளில் வேளாண்மைப் பட்டதாரிகளைப் பயன்படுத்துவதற்குரிய வழிவகைகளை வேளாண்மைப் பல்கலைக்கழகங்கள் ஆராய வேண்டும். இதை வேளாண்மைப் பல்கலைக்கழக ஆசிரியர்களும் மாணவர்களும் தங்களுக்கு விடுவிக்கப்பட்ட ஒரு சவாலாக ஏற்றுக் கொள்ள வேண்டும். மாணவர்களிடையே தன்னம்பிக்கையையும், தானே தொழில் செய்து பிழைக்க முடியும் என்ற நம்பிக்கையையும் உருவாக்குவது அனைவரது பொறுப்புமாகும். இந்தப் பல்கலைக்கழகம் செயல்முறைப் பயிற்சி அளிப்பதுடன் இளைஞர்களுக்குத் தன்னம்பிக்கையையும் ஊட்டி வருகிறது என்று நம்புகிறேன். வேளாண்மையில் பயனுள்ள புரட்சி ஏற்படவேண்டுமென்றால் நமது வேளாண்மைப் பல்கலைக்கழகப் பட்டதாரிகளில் பெரும்பாலானவர்கள் கிராமத்துக்குத் திரும்பிச் சென்று உழவர்களாகவே ஆகவேண்டும். தாங்கள் படித்த புதிய முறைகளைத் தாங்களே கையாள்வதுடன் செயல்பட வேண்டும். இப்போது பட்டம் பெறுகிற நீங்கள் இந்தத் தேசியப் பணியை ஒரு சவாலாக எடுத்துக் கொள்ள வேண்டும். கிராமத்தில் புத்தொளி, புத்தறிவு பரவுவதற்கு நீங்கள் கலங்கரை விளக்கங்களாகத் திகழ வேண்டும். நமது கிராமங்களில் வாழும் இலட்சோபலட்சம் மக்களுக்கு சமுதாய விழிப்பு உணர்ச்சியையும் முன்னேற்றத்திற்கான நுழைவு வாயிலையும் அமைத்துக் கொடுக்கும் பெரும்பொறுப்பு உங்களைச் சேர்ந்ததே!

—மத்திய வேளாண்மை, நீர்ப்பாசனத்துறை அமைச்சர் அவர்கள் கோவை, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தில் 2-2-78ல் ஆற்றிய பட்டமளிப்புவிழா உரை...

## சமூக நல வாரியத்துக்குப் புதிய உறுப்பினர்கள் நியமனம்!

தமிழ்நாடு சமூக நல வாரியம் திருத்தி அமைக்கப்பட்டுள்ளது. திருமதி சிந்து நந்தகோபால் அதன் புதிய தலைவராக நியமிக்கப்பட்டிருக்கிறார். இவர் செஞ்சிலுவைச் சங்கத் தமிழ்நாடு கிளையின் ஆயுள் உறுப்பினர்.

தமிழ்நாடு சமூக நல வாரியத்தின் புதிய உறுப்பினர்கள் வருமாறு :

செல்வி மாத்தியூ, திருவாட்டியர் ராஜம்மாள் தேவதாஸ், யசோதா, டி. சுலோசனா, நிர்மலாகோகர்ன், ரசிகா கோத்தாரி, மனோபக்தவத்சலம், நூர்ஜஹான் ரெஜாக், எம்.பி., ஈ.வி.கே. சுலோசனா சம்பத், திலகவதி மோகன், ஆண்டாள் ராவூத், மீனா முத்தையா, நூர்ஜஹான் பேகம் (அனைவரும் சென்னை), நயீமா ஷெரீப் (வட ஆர்க்காடு), இலட்சுமி முத்து (செங்கல்பட்டு), காளியம்மாள் (தருமபுரி), தமயந்தி பாலகிருஷ்ணன் (புதுக்கோட்டை), நவ்ரோஜி (திருநெல்வேலி), டாக்டர் மேரி காதரைன் (நீலகிரி), லீலாவதி தர்மர் (இராமநாதபுரம்), ஆண்டாள் தாமோதரன் (தென்னார்க்காடு), இலட்சுமி ஆல்பர்ட் (தஞ்சாவூர்), சாந்தகுமாரி (கன்னியாகுமரி) நாமகிரி தாமோதரன் (சேலம்), பங்கஜாட்சி சுப்பையன் (கோவை), மேரி தங்கராஜ் (மதுரை), ஷிரீன் ஹஸ்ரத் (திருச்சி).

சமூக நல இயக்குநர் இந்த வாரியத்தின் உறுப்பினர்-செயலாளர் சமூக நலத்துறை ஆணையர் மற்றும் செயலாளர், நிதித்துறை ஆணையர் மற்றும் செயலாளர் ஆகியோரும் உறுப்பினர்களாவார்கள்.



அயர்லாந்து நாட்டு அதிபர் டாக்டர் பெட்ரிக் ஜே. ஹில்லேரியும் அவரது துணைவியாரும் 31-1-'78 அன்று சென்னைக்கு வந்தபோது முதல்வரும் ஆளுநரும் வரவேற்றனர்.



மதுரை மீனாட்சி அரசினர் கலைக்கல்லூரிப் பட்டமளிப்பு விழாவின்போது (6-2-'78) உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு காளிமுத்து அவர்களிடம் முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கு 5000 ரூபாய்க்கான காசோலையைக் கல்லூரி மாணவியர் செயலாளர் அளித்தார்.

சுற்றுலா-வர்த்தகப் பொருட்காட்சியில் அமைந்த தோட்டக் கலைக் கண்காட்சியில் பங்கேற்றவர்களுக்கு வேளாண்மை அமைச்சர் திரு குழந்தைவேலு அவர்கள் 5-2-'78 அன்று பரிசுகள் வழங்கினார்.










TANAPEX–'78 என்னும் அஞ்சல்தலைப் பொருட் காட்சியைச் சென்னையில் 4-2-'78 அன்று ஆளுநர் அவர்கள் தலைமையில் முதல்வர் அவர்கள் தொடங்கி வைத்தார்கள்.

# படமும் செய்தியும்

இலங்கையிலிருந்து பெங்களூர் செல்லும் வழியில் 6-2-'78 அன்று சென்னை வந்த மத்திய உள்துறை அமைச்சர் சரண்சிங் அவர்களை முதல்வர் அவர்கள் வரவேற்றார்.







சிட்னிக்குச் செல்லும் வழியில் சென்னை வந்த தலைமையமைச்சர் திரு மொரார்ஜி தேசாய் அவர்களை 11-2-'78 அன்று ஆளுநர் அவர்களும், நிதியமைச்சர் திரு கி. மனோகரன் அவர்களும் விமான நிலையத்தில் வரவேற்றனர்.

புயலாலும் வெள்ளத்தாலும் பாதிக்கப்பட்ட மக்கள், கால் நடைகளை வாங்க உதவும் வகையில் 'கேர்' நிறுவனம் சார்பில் இரண்டாவது தவணையாக ஐந்து இலட்சம் ரூபாய் சமூக நலததுறை அமைச்சர் செல்வி பி. டி. சரஸ்வதி அவர்களிடம் வழங்கப்பட்டது. (10-2-'78)



சென்னையில் 9-2-'78 அன்று கல்கத்தா இந்தியன் நிருவாக நிறுவனத்தில் பயின்ற பழைய மாணவர்கள் சங்கத்தின் சென்னைப் பிரிவை, செய்தி-சுற்றுலாத்துறை அமைச்சர் திரு ஆர். எம். வீரப்பன் அவர்கள் தொடங்கி வைத்தார்.





# நலம் பெற வாழ்க!

ஜெய்...

அந்தக் குடிசையின் முன்னால் சில குழந்தைகள் விளையாடிக் கொண்டிருக்கின்றன.

பரட்டைத்தலை, குழி விழுந்த கண்கள், தூசு படிந்த மேனி, பார்க்கவே பரிதாபமாக இருக்கிறது.

குழந்தைகள் 'கொழு கொழு' என்று இல்லாவிட்டாலும், ஓரளவுக்குத் திடமாகவாவது இருக்கலாம் அல்லவா?

நாளையத் தலைமுறைகள் இப்படி நலிந்து நசித்துப் போகலாமா? இந்த அவல நிலை நீங்குவதற்கு வழியே இல்லையா?

இருக்கிறது! அதுவும் நம் கையில்தான் இருக்கிறது!

ஆம். நாம் முயன்றால் நம் குழந்தைகளுக்கு முழு வளர்ச்சியைத் தர முடியும்.

''குழந்தை நோஞ்சானாக இருக்கிறது. நல்ல சத்தான உணவுக்கு நாங்கள் எங்கே போவோம்? ஆப்பிள், ஆர்லிக்ஸ் போன்ற விலையுயர்ந்த பொருள்களை எங்களால் வாங்கித்தர முடியுமா' என்று குடிசை வாழ் மக்களும் ஏன், நடுத்தரக் குடும்பத்தினரும் கூடக் கேட்கக்கூடும்.

சத்தான உணவைத் தேடி நாம் எங்கேயும் போக வேண்டியதில்லை. அதற்காக அதிகச் செலவும் செய்ய வேண்டியதில்லை. அன்றாடம் நாம் சேர்த்துக் கொள்ளும் எளிய உணவிலேயே அந்தச் சத்துக்கள் எல்லாம் நிறைய இருக்கின்றன.

அவை என்னென்ன? பருப்பு, தானியங்கள், பச்சைக் காய்கறிகள், கீரை வகைகள், முட்டை, மீன், வாழைப்பழம், நிலக்கடலை இவையெல்லாம் சத்து நிறைந்த உணவுப் பொருட்கள்.

கீரை வகைகள், காய்கறிகள், பழங்கள் இவற்றில் வைட்டமின்களும் தாதுப் பொருட்களும் நிறைந்துள்ளன.

பால், முட்டை, நிலக்கடலை, மீன், பயறு வகைகள் இவற்றில் புரதச் சத்து உள்ளது.

கிழங்கு வகைகளிலும், தானிய வகைகளிலும் மாவுச் சத்து உள்ளது.

இந்த உணவு வகைகள் எல்லாம் ஒன்று சேர்ந்து தருவது தான், நல்வாழ்வு!

இந்த நல்வாழ்வுக்கு வழிகோலும் வகையில் சமூக நலத்துறை, நாளும் நற்பணியாற்றி வருகின்றது. இத்துறையின் பல்வேறு பிரிவுகள் சமுதாய நலங் காணப் பலப்பல திட்டங்களைத் தீட்டிச் சிறப்பாகச் செயலாற்றி வருகின்றது. இத்திட்டங்களால் பயன்பெறும் ஏழை எளிய குழந்தைகள், தாய்மார்கள் ஏராளம்! ஏராளம்!

மாநில சமூக நலத்துறையின் ஓர் அங்கமாக இருந்து செயலாற்றி வருவது சிறப்புச் சத்துணவுத் திட்டமாகும் (Special Nutrition Programme).

இதன் பணிகள் என்னென்ன என்பதைச் சற்றுத் தெரிந்து கொள்வோமா?

பொருளாதாரத்திலே நலிவுற்ற அதாவது மாத வருமானம் ரூ. 200-ம் அதற்குக் குறைவாகவும் உள்ள குடும்பங்களில் வாழும் ஆறு வயதுக்குட்பட்ட குழந்தைகளும், தாய்மார்களும் நல்வாழ்வு வாழ்ந்திட உதவிடும் திட்டமே, 'சிறப்புச் சத்துணவுத் திட்டம்''.

சமூக நலத்துறையினரால் 1971-72-ல் தொடங்கப்பட்ட இத்திட்டம், உள்ளாட்சி மன்றங்களின் வாயிலாக ஏழைக் குழந்தைகளுக்கும், தாய்மார்களுக்கும் சத்துணவு வழங்கி வருகிறது. இதற்குக்'கேர்'(CARE) நிறுவனமும் கை கொடுத்து உதவுகிறது.

'கேர்' நிறுவனம் இலவசமாக வழங்கும் 'பாலாஹார்' சாலட் எண்ணெய் முதலியவைகளை இத்துறை குடிசை வாழ் மக்களுக்கு வழங்கி வருகிறது. அதன்படி



ஒரு வீட்டில் சத்துணவுத் திட்டம் பற்றி விளக்குகிறார் ஒரு பணியாளர்



சத்துணவைத் தயாரித்துக் காட்டுகிறார் ஒரு பணியாளர்

ஒருவருக்கு 80 கிராம் பாலாஹாரும், 7 கிராம் சாலட் எண்ணெய்யும் என்ற கணக்கில் உள்ளாட்சி மன்றங்களின் வாயிலாக உப்புமா, கிச்சடி, பொங்கல் முதலிய வடிவில் சமைத்துக் கொடுக்கப்படுகிறது.

ஒவ்வோர் உள்ளாட்சி மன்றங்களுக்கும் பயனடைவோர் ஒவ்வொருவருக்கும் நாள் ஒன்றுக்கு 6 காசு வீதம் மானியம் வழங்கப்படுகிறது. மளிகைச் சாமான்கள், காய்கறிகள், அகப் போக்குவரத்துச் செலவுகள், அமைப்பாளர், உதவியாளர், சமையல்காரர்கள் முதலானோருக்குச் சிறப்பு ஊதியமும் இந்தத் தொகையிலிருந்து செலவிடப்படுகிறது.

இவையன்றி, ஒரு பயனடைவோருக்கு ரூ. 5 வீதம் மீளாத் தொகையாகச் செலவு செய்ய அதாவது சமையல்கூடம் அமைத்தல், எளிய போக்குவரத்து வாகனம் வாங்குதல் முதலியவை, திட்டத்தைச் செயல்படுத்தும்போது வழங்கப்படுகின்றன.

இது குறித்து மேற்கொண்டு தகவல்களைக் கூறுகிறார், சிறப்புச் சத்துணவுத் திட்டத்தனி அலுவலர் திரு பி. எம். லட்சுமி நரசிம்மன் அவர்கள்:

"சிறப்புச் சத்துணவுத் திட்டத்திற்காகத் தமிழக அரசு நடைமுறையாண்டிற்கு (1977-78) ரூ. 55 இலட்சம் நிதியாக ஒதுக்கியுள்ளது.

"மருத்துவ வசதிகள் இணைந்த திருத்திய சத்துணவுத் திட்டம் சென்னை மாநகர், மதுரை, கோயம்புத்தூர், புதுக்கோட்டை ஆகிய இடங்களில் சம்பந்தப்பட்ட மாநகராட்சி, நகராட்சிகள் வாயிலாகச் செயல்படுத்தப்படுகிறது.

"இந்தத் திட்டத்தின் மூலம் ஒரு பயனடைவோருக்கு வாரம் ஒரு முறை 700 கிராம் சமைக்காத 'பாலாஹார்' வழங்கப்படுகிறது. இத்திட்டத்திற்காகத் தனியாக மருத்துவர்கள் நியமிக்கப்பட்டு, ஒவ்வொரு பயனடைவோருக்கும் தடுப்பு ஊசிகள் போடப்படுகின்றன. இவர்களுக்கு உடல் நலப் பரிசோதனை, கால முறைப்படி செய்யப்பட்டுச் சிகிச்சை அளிக்கப்பட்டு வருகின்றது.



குழந்தைக்குத் தடுப்பு ஊசி போடப்படுகிறது.

"இந்தத் திட்டத்தினால், தமிழ் நாட்டில் குழந்தைகள், தாய்மார்கள், கர்ப்பிணிகள் உட்பட மொத்தம் 2,76,530 பேர்கள் பயனடைகிறார்கள். சென்னை மாநகரில் மட்டும் ஒரு இலட்சம் பேர் பயன் பெறுகிறார்கள்."

சென்னை மாநகரில் உள்ள குடிசை மாற்று வாரியக் குடியிருப்புப் பகுதிகளிலும் நகராட்சிப் பகுதிகளில் குடிசை வாழ் மக்களுக்கும் இத்திட்டம் பெருமளவில் பயன் தந்து, அவர்கள் நோயற்ற வாழ்வு வாழ்ந்திட உறுதுணையாய் இருந்து வருகிறது.

சமூக நல வாரியத்தோடு இணைந்த இன்னொரு பிரிவும் உள்ளது. அதுதான், சத்துணவுக் கல்வித் திட்டம் (Nutrition Education Scheme).

இது சென்னை மாநகரில் வாழும் குடிசை மாற்று வாரியக் குடியிருப்புகளிலும், குடிசை வாழ் பகுதிகளிலும் அன்றாடம் அரிய பணியாற்றி வருகின்றது. இப்பணி சிறப்புற, 'கேர்' நிறுவனமும் தன்னாலான உதவிகளைச் செய்து வருவதை நாம் இங்கே குறிப்பிட வேண்டும்.

இது குறித்துத் திட்ட உருவாக்க அலுவலர் ( Project Officer ) செல்வி ஆர். எஸ். விஜயா அவர்கள் கூறுவதாவது:—

"சத்துணவு, சுகாதாரம், குழந்தைகள் நலம் இவை பற்றித் தாய்மார்களுக்கு எடுத்துச் சொல்வது இத்திட்டத்தின் முக்கியப் பணிகளில் ஒன்று. 6,323 குடும்பங்கள் கொண்ட 12 குடியிருப்புப் பகுதிகளில் இத்திட்டம் அமலாக்கப்பட்டது. இன்று 44 குடியிருப்புப் பகுதிகளில் 22,000 பேர் இத்திட்டத்தினால் பயன் அடைகிறார்கள்."

சமூக நலத்துறையும், 'கேர்' நிறுவனமும் இணைந்து செயல்படும் இந்த மக்கள் பணி, சென்னை மாநகரில் கீழ்க்காணும் 20 குடிசைப் பகுதிகளில் செவ்வனே நடைபெற்று வருகின்றது.

1. புஷ்பா நகர்.
2. சந்தோஷ் நகர்.
3. அப்பாவு நகர்.
4. சுப்புப் பிள்ளைத் தோட்டம்.
5. சிவசண்முகபுரம்,.
6. புல்லாரெட்டிபுரம்
7. கே. கே. நகர்.
8. லாக் நகர்.
9. நாவலர் நகர்.
10. கொய்யாத் தோப்பு
11. காசிமேடுக் குப்பம்.
12. வ. உ. சி. நகர்.
13. வரதராசபுரம்.
14. பூவிருந்தவல்லி நெடுஞ்சாலை
15. துறைமுகக காலனி.
16. பி. எஸ். மூர்த்தி நகர்.
17. ராமகாமத்புரம்.
18. இந்திரா நகர்.
19. சாஸ்திரி நகர்.
20. குயில்தோப்பு.

இந்த இடங்களிலெல்லாம் நடைபெறும் சத்துணவுக் கல்வித் திட்டத்திற்காக 1977-78-ஆம்

ஆண்டிற்கு 50,440 ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. இத்திட்டம் பற்றிய விளம்பரங்களுக்காக 'கேர்' நிறுவனம் 85,275 ரூபாய் ஒதுக்கியுள்ளது.

சத்துணவு, தாய் சேய் நலம் பற்றிப் பாமர மக்கள் நன்கு உணர்ந்திடும் வகையில் வீடு தோறும் சென்று அவர்களுக்கு நல்ல பல ஆலோசனைகள் வழங்கப்படுகின்றன. இந்தப் பணிகளுக்குக் குடிசைப் பகுதிகளிலேயே வசிக்கும் பள்ளி இறுதி வகுப்பு வரை படித்த பெண்களையே தேர்ந்தெடுக்கிறார்கள். இவர்களுக்கு 5 வார காலப் பயிற்சி அளிக்கப்படுகிறது. பிறகு இத்தொண்டர்கள் இல்லந்தோறும் அனுப்பப்படுகின்றனர்.

தற்போது 22 தொண்டர்கள் பணிபுரிகின்றனர். அவர்கள் ஒவ்வொரு பகுதியிலுமுள்ள இல்லங்களுக்குச் சென்று, அங்குத் தாய்மார்களைச் சந்திக்கின்றனர். அப்போது அவர்கள் குழந்தைகளுக்கும், கர்ப்பிணித் தாய்மார்களுக்கும், தக்க ஆலோசனைகள் வழங்குகின்றனர். அத்துடன் நோய்த் தடுப்பு முறைகள், சுற்றுப் புறச் சுகாதாரம் முதலானவை குறித்தும் அறிவுரை வழங்குகின்றனர்.

உதாரணமாக, ஒரு பெண் தொண்டர் ஓர் இல்லத்துக்குச் செல்கிறார் என்று வைத்துக் கொள்வோம். அங்கே அவர் கூறும் நல்வாழ்வுக்கான நல்ல யோசனைகள் என்னென்ன தெரியுமா?

**சிருணவின் சிறப்புக் குறித்துக் கல்வி கற்பித்தல்**



**குழந்தைகளுக்கு:**

குழந்தைகளுக்குத் தாய்ப் பாலே சிறந்த உணவு.

பச்சிளங் குழந்தைகளுக்கும் கொதிக்க வைத்து ஆறிய நீரைக் குடிக்கத் தர வேண்டும்.

ஆறு மாதத்திற்கு மேல் தாய்ப் பாலுடன் திட உணவையும் கொடுக்க வேண்டும்.

இளம் குழந்தைகளுக்கும், பக்குவம் செய்த காய்கறி, கீரை வகைகள் உட்கொள்ளக் கொடுக்க வேண்டும்.

வளரும் பருவத்தில் குழந்தைகளுக்கு அடிக்கொருதரம் ஆகாரம் தர வேண்டும்.

**கர்ப்பிணித் தாய்மார்களுக்கு:**

கர்ப்பிணித் தாய், குழந்தைக்கும் சேர்த்து உணவு உண்ண வேண்டும்.

கர்ப்பிணித்தாயின் அன்றாட உணவில் கீரை இருக்க வேண்டும்.

கர்ப்பிணித் தாய் உணவைக் குறைக்கலாகாது.

**நோய்த் தடுப்பு முறைகள்:**

குழந்தைகளுக்குத் தடுப்பு ஊசிகளைப் போடச் செய்ய வேண்டும்.

பேதி, ஜுரம் கண்டால் பட்டினி போடக்கூடாது. கஞ்சி, நீராகாரம் நிறையத் தர வேண்டும்.

வயிற்றுப் பூச்சிக்கு மருத்துவரிடம் மருந்து வாங்கித் தர வேண்டும்.

**குடிசைப் பகுதியில் மழலைச் செல்வங்கள்.**



# அடுத்த குழந்தை எப்போது?

*இலட்சியக் குழந்தை வேண்டும் என்று கருதுகிறீர்களா? அல்லது அடுத்த குழந்தை எப்போது வேண்டும்?' என்று சிந்தித்துக் கொண்டிருக்கிறீர்களா?*

*இந்தக் 'குழந்தைப் பிரச்சினை'க்குத் தீர்வு காண சில வழிகள் உள்ளன.*

இதோ

**அதற்கான பத்து வழிகள் :**

| | |
|---|---|
| நிரோத் | ஜெல்லி |
| பெசாரி | டையாப்ஃரம் |
| லூப் | ரித்தம் முறை |
| காப்பர் 'டி' | வெஸக்டமி |
| நுரை மாத்திரைகள் | ட்யூபக்டமி |

**அடுத்த குழந்தை இப்போது வேண்டாம்!**
**மூன்றுக்குப் பின் எப்போதும் வேண்டாம்!!**

உங்களுக்கு ஏற்கெனவே இது தெரிந்திருக்கும். தெரிந்துகொள்ள வேண்டியவர்கள் தெரியாதிருப்பின் இதை அவர்களுக்கும் எடுத்துச் சொல்லவும்.

நன்றி!

**இன்ப வாழ்வுக்கு இன்றே திட்டமிடுங்கள்!**

DAVP-77/406

கர்ப்பிணி அல்லது பாலூட்டும் தாய்மார்கள் முறையாக மருத்துவப் பரிசோதனை செய்து கொள்ள வேண்டும்.

**சுற்றுப்புறச் சுகாதாரம் :**

உணவு உண்பதற்கு முன்பு கை, கால், தட்டு முதலியவைகளைத் துப்புரவாகக் கழுவ வேண்டும்.

வீடும், சுற்றுப்புறமும் துப்புரவாக இருக்க வேண்டும்.

குழந்தைகளைக் கண்ட கண்ட இடங்களில் மல ஜலம் கழிக்க விடக்கூடாது.



ஈ மொய்த்த பண்டங்களைச் சாப்பிடுவது, வயிற்றில் பூச்சி விழுவதற்குக் காரணமாகும்.

இவ்வாறு நல்ல பல ஆலோசனைகளை வழங்கி வருவதுடன், சத்துணவு செய்முறையும் கூடத் தாய்மார்களுக்கு ஆங்கே செய்து காட்டப்படுகின்றது.

இவையன்றி, பாமர மக்களின் உள்ளத்தைக் கவர்ந்திடும் வகையில் மந்திர தந்திரக் காட்சிகள், பொம்மலாட்டங்கள், கதம்ப நிகழ்ச்சிகள் முதலானவையும் நடக்கின்றன. அவை மட்டுமா? நகைச்சுவையோடு வண்ணப் படங்களுடன், எளிய தமிழில் சத்துணவு முதலானவை பற்றிய சிறு வெளியீடுகளும் அவ்வப்போது வெளியிடப்படுகின்றன. 'முத்துவின் கதை', 'கணபதியின் விருந்தாளிகள்,' 'கமலாவைக் காப்பாற்றுங்கள்,' 'சீதாவும் கீதாவும்,' 'முருகன் கதை,' 'ராதாவின் நண்பர்கள்' ஆகியவை இவ் வெளியீடுகளில் சிலவாகும்.

இத்திட்டத்தை விளக்கிடும் வகையில், மாதந்தோறும் படக் காட்சிகளும், ஒவ்வொரு குடியிருப்புப் பகுதிகளில் காண்பிக்கப்படுகின்றன. இப்படங்களில் 5 நிமிடம் ஓடும் ஒரு படத்தின் பெயர். ''நலம் பெற வாழ்க''!. நாமும் அவ்வாறே எல்லோரையும் வாழ்த்துவோம், ''நலம் பெற வாழ்க'' என்று!

# எஸ்.எஸ்.எல்.சி. தேர்வு எழுதுவோர்க்குப் புதிய சலுகை!

**1978-ஆம் ஆண்டு மார்ச் மாதம் எஸ்.எஸ்.எல்.சி. தேர்வு முதல், ஆங்கிலம், தமிழ் உள்பட எல்லாப் பாடங்களிலும் தேறுவதற்கு மாணவ-மாணவிகள் நூற்றுக்கு 35 மதிப்பெண் வாங்கினால் போதும்.** தமிழ்நாடு அரசும், பல்கலைக் கழகங்களும் இந்த முறையை ஏற்றுக் கொண்டுள்ளன.

1978-ஆம் ஆண்டு அக்டோபர் மாத எஸ். எஸ். எல். சி. தேர்விலிருந்து, தனிப்பாடத்துக்குத் தேர்வு எழுதி 35 சதவிகிதம் பெற்றுத் தேறுவதற்கான வசதி செய்யப்படுகிறது. எஸ். எஸ். எல். சி. தேர்வில் ஏதாவது ஒரு பாடத்தில் தவறினாலும், எல்லாப் பாடங்களுக்கும் தேர்வு எழுத வேண்டுமென்று இதுவரையில் இருந்து வந்த நடைமுறை இதன் மூலம் மாற்றப்படுகிறது. ஒரு மாணவன் அல்லது மாணவி, தான் தேர்ச்சி பெறத் தவறிய பாடத்தில் மட்டும் தேர்வு எழுதி, தேறி, கல்லூரிக்குப் போகமுடியும். அதாவது, தேர்வில் தேறாத மாணவர்கள், தேறாத பாடத்தை மட்டும் மீண்டும் எழுதித் தேர்வு பெறலாம். அப்படித் தேர்வு பெற்று கல்லூரிகளில் சேர்ந்து படிக்கவும் முடியும்.

அரசினர் தேர்வுகள் இயக்குநர், தமிழ்நாடு செகண்டரி கல்வி வாரியம் ஆகியோரின் பரிந்துரைகளை ஏற்றுக்கொண்டு தமிழ்நாடு அரசு இவ்வாணைகளைப் பிறப்பித்துள்ளது. உயர் செகண்டரி கல்வி வாரியம், மாநிலத்திலுள்ள பல்கலைக் கழகங்கள் இதற்குச் சம்மதம் தெரிவித்துள்ளன. தனிப் பாடங்கள் தேர்வுத் திட்டம் (எந்தப் பாடத்தில் தேர்வு பெறவில்லையோ, அந்தப் பாடத்தில் மட்டும் தேர்வு எழுதித் தேறும் திட்டம்) இவ்வாண்டு அக்டோபரிலிருந்தும், மதிப்பெண் மாறுதல் திட்டம் (ஆங்கிலம், தமிழ் உள்பட எல்லாப் பாடங்களிலும் தேறுவதற்கு 100-க்கு 35 மதிப்பெண் வாங்கினால் போதும் என்ற திட்டம்) 1978-ஆம் ஆண்டு மார்ச் மாதத் தேர்வு முதற்கொண்டு அமலுக்கு வரும்.

பத்து ஆண்டுப் படிப்புத் திட்டத்தின் கீழும், 11 ஆண்டுப் படிப்புத் திட்டத்தின் கீழும், 1978-ஆம் ஆண்டு மார்ச், ஏப்ரல், மாதங்களில் எல்லாப் பாடங்களிலும் தேர்வுக்கு எழுதும் மாணவ, மாணவியர், தாங்கள் தேர்வு பெறத் தவறும் பாடத்தில் மட்டும் தேர்வு எழுதலாம். மாணவ மாணவிகள் எல்லாப் பாடங்களிலும் **ஒரே தடவையில் தேற வேண்டுமென்பது இதுவரை இருந்த நிலை.** இதன் விளைவாக, மாணவ மாணவிகள் தாங்கள் முன்னமே தேறிய பாடங்களில் கூடத் தவற நேர்ந்ததாகக் கொள்ளப்பட்டது. இம்முறை 1978-ஆம் ஆண்டு அக்டோபர் தேர்வு முதல் மாறுகிறது. தனிப் பாடங்களில் 35 சதவிகிதம் பெற்றுத் தேறினாலும், மொத்தத் தேர்விலும் தேறியதாக மதிக்கப்படும்.

ஒரே தடவையிலோ அல்லது தனித்தனிப் பாடமாகவோ இதற்கென நிர்ணயித்த குறைந்தபட்ச மதிப்பு எண் பெற்றால், பல்கலைக் கழகத்துக்கும், உயர் செகண்டரி பள்ளிகளுக்கும் போய்ச் சேர இயலும்.

இதுவரையில் ஆங்கிலத்திலும், தமிழிலும் குறைந்தபட்சம் 40 சதவிகிதமும், மற்ற மூன்று பாடங்களில் 35 சதவிகிதமும், நான்காவது பாடத்தில் 30 சதவிகிதமும் மதிப்பு எண் பெறவேண்டுமென்று பல்கலைக் கழகங்கள் வற்புறுத்தி வந்தன. இப்புது உத்தரவு மூலம் இதுவும் மாற்றப்படுகிறது. 1978-ஆம் ஆண்டு மார்ச் மாத எஸ். எஸ். எல். சி. தேர்விலிருந்து, எல்லாப் பாடங்களுக்குமே தேர்வுக்கான குறைந்தபட்ச மதிப்பெண் 35 சதவிகிதம்.

இப்புதுத் திட்டங்கள் தமிழ்நாட்டுக் கல்வித்துறை வரலாற்றிலேயே முக்கியமான முன்னேற்றமாகும். 1911-ல் எஸ். எஸ். எல். சி. தேர்வு முறை ஆரம்பித்ததிலிருந்து, 1978-ஆம் ஆண்டு அக்டோபர் வரையில் தனிப்பாடத் தேர்வுகள் அனுமதிக்கப்படுவதில்லை.



# சித்திரைத் திங்களில் புத்தொளி!

## தமிழ் புத்தாண்டு சிறப்புக் குலுக்கல்!

## தமிழ்நாடு பரிசுச் சீட்டு வாங்கிடுவீர்

சிறப்பு முதல் பரிசுகள் இரண்டு

ஒவ்வொன்றும் ரூ. **5** லட்சம் வீதம்

சிறப்பு இரண்டாவது பரிசுகள் மூன்று
ஒவ்வொன்றும் ரூ. **1,00,000** வீதம்

முதல் பரிசுகள் வரிசைக்கு இரண்டு
ஒவ்வொன்றும் ரூ. **50,000** வீதம்.
மற்றும் ஏராளமான பரிசுகள்.

குலுக்கல் நாள்: **20-4-1978**
சீட்டின் விலை ரூ. 1/- மட்டுமே.

மோத்தப் பரிசுத் தொகை ரூ. 41 லட்சம்
10 வரிசைகள்—மோத்தப் பரிசுகள் 13,075




வெளியீடு:
இயக்குநர், தமிழ்நாடு பரிசுச் சீட்டுத் திட்டம்
சென்னை-600 002



# அலை கடலோரம் அழகிய கல்லூரி

சிங்காரச் சென்னைக்கு எழில் சேர்க்கும் மெரினக் கடற்கரை!

கடற்கரைக்கு அருகே

''கடல் சூழ்ந்த இத்தமிழ்நாடு—பெண்
கல்வி பெண்கல்வி என்கின்றதன் போடு''

என்று முழங்கிய பாவேந்தர் புரட்சிக் கவிஞர் பாரதிதாசனுரின் திருஉருவச் சிலை!

சிலைக்கு எதிரே— கண்ணைக் கவரும் கட்டட அமைப்புடன் காட்சி தருகிறது ஒரு கல்லூரி. அதுதான் வெலிங்டன் சீமாட்டிப் பயிற்சிக் கல்லூரி (Lady Willington Training College).

பெண்கள் நாட்டின் கண்கள் என்றும், அவர்களுக்குக் கல்வி மிகமிக இன்றியமையாதது என்றும் பேசியும் எழுதியும் வந்த அறிஞர் பெருமக்கள் பலர். அவர்களுள் மாயூரம் வேதநாயகம் பிள்ளை, திரு. வி. க., பாரதியார், பாரதிதாசன் முதலானேரை இங்கே குறிப்பிடலாம். அவர்களெல்லாம் அன்றைய தினம் பெண்கல்வியில் அக்கறையும் ஆர்வமும் காட்டி வந்தார்கள்.

அதன் பயனுய் இன்று பெண் கல்வி ஒளிவிளக்காய் இருந்து பட்டிதொட்டிகளெங்கும் அறியாமை இருளைப் போக்கி வருகின்றது.

ஒரு பெண்ணுக்குக் கல்வி அளிப்பது, ஒரு குடும்பத்திற்கே கல்வி அளிப்பதற்குச் சமம் என்று முழங்கப்பட்ட அந்நாளிலேயே ஆசிரியைத் தொழிலை மேற்கொள்ளும் பெண்களுக்குப் பயிற்சி அளிக்க வேண்டிய அவசியம் உணரப்பட்டது. அதனல், பெண்களுக்கெனத் தனியாக ஒரு ஆசிரியப் பயிற்சிக் கல்லூரி தோற்றுவிக்க வேண்டும் என்னும் முயற்சி முளைவிட்டது.

அந்த முயற்சி வீண்போகவில்லை; நாளடைவில் வெற்றி பெற்றது. 1922-ல் சென்னைத் திருவல்லிக்கேணியில் பெண்களுக்கான ஆசிரியப் பயிற்சிக் 'கல்லூரி ஒன்று தொடங்கப் பெற்றது.

இது 'லேடி வெலிங்டன் சீமாட்டிப் பயிற்சிக் கல்லூரி' என வழங்கப்பட்டது.

இப்பெயர் எப்படி வந்தது?

சென்னையில் அப்போது திரு வெலிங்டன் பிரபு அவர்கள் ஆளுநராக இருந்தார். அவரது துணைவியார் லேடி வெலிங்டன் அவர்கள் பெயரால் 'வெலிங்டன் சீமாட்டிப் பயிற்சிக் கல்லூரி' என

இது அழைக்கப் பெற்றது. இக் கல்லூரி தொடக்கக் காலத்தில், வெலிங்டன் சீமாட்டி பெண்கள் உயர்நிலைப் பள்ளிக் கட்டடத்தில் இயங்கி வந்தது. இட நெருக்கடி காரணமாகத் தனிக் கட்டடம் தேவையென உணரப்பட்டது. அதன் விளைவாய் எழுந்ததே

ஆசிரியைப் பயிற்சி வகுப்பு





தையலரின் தையல் வேலை



எம்பராய்டரி' பயிற்சி வகுப்பில்



நூலகத்தில் ஒரு காட்சி

இன்று நாம் காணும் அழகிய வடிவில் அமைந்த கட்டடம்.

1940-ல் கட்டப்பட்ட இந்தக் கட்டடம் 'டபிள்யூ' (W) வடிவத்தில் தன் பெயரினை நினைப்பூட்டும் வகையில் அமைந்துள்ளதைக் காணலாம். இதைக் கட்டுவதற்குத் தக்க யோசனை கூறியவர், 25 ஆண்டுகளாக இதன் உயர்வையே தனது மூச்சாகக் கொண்டு அரும்பணியாற்றிய செல்வி ஜெராட் அம்மையார் அவர்கள்.

தொடக்கக் காலத்தில் எல்.டி., இளநிலை ஆசிரியைப் பயிற்சி, தொடக்கநிலை ஆசிரியைப் பயிற்சி என மூவகை ஆசிரியப் பயிற்சிகளுடன் இக்கல்லூரி செயற்பட்டது.

1948-க்குப் பிறகு எல்.டி., என்பது பட்டதாரி ஆசிரியைப் பயிற்சியாக (பி. டி;) மாறியது. இவற்றோடு குழந்தைகளுக்கான ஆசிரியப் பயிற்சியும் (Nursery Training) மேற்கொள்ளப்பட்டது.

1950-க்குப் பின் பட்டதாரி ஆசிரியப் பயிற்சி, இளநிலை ஆசிரியப் பயிற்சி (இரண்டாண்டுகளுக்கு ஒரு முறை) ஆகியவற்றுடன் தமிழாசிரியப் பயிற்சி, மாலை நேரங்களில் முதுகலைக் கல்வி (M.Ed.,) வகுப்புக்களையும் நடத்துவதில் முனைந்துள்ளது.

உயர்நிலைக் கல்விக்கான டிப்ளமோ வகுப்பினைத்தொடங்குவதற்கும் இது திட்டமிட்டுள்ளது. உடற்கல்வி ஆசிரியப் பயிற்சியும் இக்கல்லூரியில் முதலில் தொடங்கப்பட்டு, உடற்பயிற்சிக்கெனத் தனிக்கல்லூரி தொடங்கியதும் கைவிடப்பட்டுவிட்டது. இளம் பருவ ஆசிரியப் பயிற்சியும் பெண்களுக்காக இங்குச் சிலகாலம் நடந்தபின், அவ்வாசிரியப் பயிற்சித் திட்டம் கைவிடப்பட்டபோது நின்றுவிட்டது.

கல்லூரியைச் சுற்றிப் பார்த்துக் கொண்டே வருகிறோம். பச்சைப் பசேலென்ற மரஞ்செடி கொடிகள், வண்ணமலர்க் கூட்டங்கள் நம் மனத்தைக் கவர்கின்றன. வகுப்பறை, சுற்றுப்புறங்கள் எல்லாம் தூய்மையாக இருக்கின்றன. மாணவிகள் சீருடை அணிந்து கல்வியில் கண்ணும் கருத்துமாய் இருப்பதைக் காண்கிறபோது நமக்கு மகிழ்ச்சி ஏற்படுகிறது.

அமைதி தவழும் இக்கல்லூரியில் அறிவை வளர்க்கும் பல் துறை நூல்கள் மிகுந்த நூல் நிலையம் ஒன்று காட்சி தருகிறது. இங்கே 35,400 நூல்கள் உள்ளன. இந்நூலகத்தை விரிவுபடுத்தும் திட்டமும் உள்ளதாம்.

'கைத்தொழில் ஒன்றைக் கற்றுக் கொள். கவலை உனக்கில்லை ஒத்துக்கொள்' என்ற நாமக்கல் கவிஞரின் வாக்கிற் கிணங்க இங்குள்ள உயர்நிலைப் பள்ளி மாணவியர் ஓவியம், வண்ணந் தீட்டுதல், தையல், பூவேலை ஆகிய கைவேலைகளிலும், வண்ண வண்ணச் சித்திர ஆடைகள் நெய்யும் நெசவுத் தொழிலிலும் பயிற்சி பெறுவது குறிப்பிடத் தக்கது.

பாடத்தில் மட்டுமா இம் மாணவியர் திறமை காட்டுகின்றனர்? ஆடல் பாடல்களிலும், இன்னிசையிலும் அவர்களின் திறமை வெளிப்படுவதை நாம்

பாராட்ட வேண்டும். 'பாரத தேசம் என்று பெயர் சொல்லுவார்' என்ற பாரதியாரின் பாடலுக்கு ஏற்ப இசையுடன், சீருடை அணிந்து ஆடிப்பாடுகின்ற அந்தக் காட்சி இன்னும் நம் கண்களில் நிற்கின்றதே!



மழலையர் வகுப்பில்...

இங்கு மனை இயலும் (Home Science) கற்பிக்கப்படுகிறது. இவ்வகுப்பில், சத்துணவுகள் முதலானவை அழகிய படங்களுடன் காட்சியளிக்கின்றன. இம் மாணவிகளால் தயாரிக்கப்பட்ட காப்பியும் சுவையாக இருந்தது!

கல்லூரியின் வளாகத்தினுள்ளே மாணவிகளால் நடத்தப்படும் ஒரு கூட்டுறவு விற்பனைக் கூடம் ஒன்றும் (Students Co-operative Stores) உள்ளது. இதில் மாணவியர்க்குத் தேவையான நோட்டுப் புத்தகங்கள், பென்சில், இங்க் முதலானஎழுது பொருள்கள் நியாய விலையில் கிடைக்கின்றன.

## கோவில்களில் உழவாரப் பணி



நல்ல பரிசோதனைக் கூடமும், கலை அரங்கமும் இங்கே உள்ளன. இங்கே பயிலும் மாணவிகள் சமூக சேவை செய்வதிலும் சிறந்து விளங்குகிறார்கள். குப்பங்களுக்குச் சென்று அங்குள்ள மக்களுக்கு நல்ல பல அறிவுரைகளை வழங்குகிறார்கள். எழுத்தறிவும் போதிக்கிறார்கள். கோயில்களில் 'உழ்வாரப் பணி'யிலும் இவர்கள் ஈடுபட்டு வருகின்றார்கள்.

மழலை பேசும் சின்னஞ்சிறு குழந்தைகளுக்கான பள்ளிக்கூடமும் இங்கே உண்டு. அக்குழந்தைகள், கல்வியோடு கண்களைக் கவரும் பொம்மைகளையும் வைத்து விளையாடலாம். குதிரைச் சவாரி, சறுக்குமரம் முதலானவை அவர்களைக் கவர்கின்றன. குப்பத்து மக்களுக்காகத் தொடங்கப்பெற்ற ஒரு தொடக்கப் பள்ளியை நாற்பதாண்டுகளாக இக்கல்வி நிலையத்தின் சமூக சேவைச் சங்கம் நடத்தி வருகின்றது. அப்பள்ளி மாணவர்களின் மதிய உணவிற்கு உதவி செய்வதற்காக நிதியையும் திரட்டித் தருகின்றது. கல்லூரியில் பயிலும் பொருளாதார நிலையில் பின் தங்கியுள்ள மாணவிகளுக்குத் தேவையான உதவிகளையும் இது செய்து வருகின்றது. மேலும் புத்தக வங்கித் திட்டமும் அவர்களுக்காகவே நடத்தப்படுகிறது.

உயர்நிலைப் பள்ளி மாணவியரில் கல்வியில் மிகவும் பிற்பட்ட நிலையில் உள்ளவர்களுக்கு அவ்வப்போது தனி வகுப்புகளும் நடத்தப்படுகின்றன.

இக்கல்லூரியில் தமிழ்நாடு மட்டுமன்றி, பிற மாநிலத்திலிருந்தும் வந்து பயில்கின்றனர்.

சென்னை நகரப் பெண்களின் கல்வித் தேவையை நிறைவு செய்யப் பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பாதியில் தொடங்கப்பெற்ற வெலிங்டன் சீமாட்டிப் பெண்கள் உயர்நிலைப் பள்ளி, செவ்வனே தன் பணியில் வீறுநடைபோடுகின்றது. இது கல்லூரியோடு இணைந்திருக்கிறது. பள்ளியின் வேலை நேரம் காலை-8-30 முதல் மாலை 3-மணி வரை. கல்லூரி நேரம் காலை 9 மணி முதல் மாலை 4-மணி வரை.

இக்கல்லூரியில் அரும்பொருட் காட்சியகம் ஒன்றை அமைக்கும் திட்டமுள்ளது. இது தாவரவியல், உயிரியல் மாணவியர்க்குப் பெரிதும் பயன்படும்.

இவ்வாறு ஆசிரியப் பயிற்சியோடு பல்வேறு துறைகளிலும் பாவையர் சிறந்து விளங்கிடப் பயிற்சி அளிக்கும் இக்கல்லூரி, பொன்விழாக் கண்ட பெருமிதத்துடன் வெற்றி நடைபோட்டு வருகின்றது.

வங்கக்கடலோரத்தில் மகளிர்க்கென அமைந்த இக்கல்லூரியில் பயின்ற பல்வேறு மாநில மாணவியர், இதன் பெருமைக்கு எடுத்துக் காட்டாய் விளங்கி வருவதை நாம் மகிழ்ச்சியோடு குறிப்பிட வேண்டும்.

—பி. வி. கிரி.

# சுத்தம் செய்யப்பட்ட

# ரேப் சீட் எண்ணெய்

[அரசு கணக்கில் இறக்குமதியானது]

நியாயவிலைக் கடைகளிலும்

கூட்டுறவு ஸ்டோர்களிலும்

கிலோ ரூ. **7-50**க்குக் கிடைக்கிறது.

DAVP. 77/477



# வேளாண்மைத் துறையில் அண்மைக் கால முன்னேற்றம்


— டாக்டர் எம். எஸ். சுவாமிநாதன்

டைரக்டர் ஜெனரல்

இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக் கழகம்.


மனிதனின் தேவைகளில் முதன்மையானது உணவு. நாட்டின் எதிர்காலம் வேளாண்மைத் துறையில் ஏற்படும் வெற்றி அல்லது தோல்வியைப் பொறுத்துத்தான் நிர்ணயிக்கப்படும். சில கோடி டன்கள் உணவுத் தானியங்களை உற்பத்தி செய்வதனால் மட்டும் வேளாண்மை வளர்ச்சி ஏற்பட்டு விடாது. கிராமப் பகுதிகளில் வேலை வாய்ப்புக்களை அதிகரிக்கும் நிலையை உருவாக்குவதும் முக்கியமானது. கிராம ஏழை மக்களின் வாங்கும் சக்தி, குறிப்பாக நிலமில்லா விவசாயிகளின் வாங்கும் சக்தி இதன் மூலம் தான் அதிகரிக்க முடியும். ஆதலின் வேளாண்மை வளர்ச்சி என்பது அதிக உணவு உற்பத்தி, வேலை வாய்ப்பு அதிகரிப்பு, வருமான உயர்வு ஆகிய மூன்று அம்சங்களையும் ஒருங்கே கொண்டதாய் இருக்க வேண்டும்.

மண்வளத்தின் தன்மையைப் பாதிக்காமல் தண்ணீர் வசதி உரச் சத்துக்களின் அடிப்படையில் பயிர் விளைச்சலில் தொடர்ந்து வளர்ச்சி காணுவதே விஞ்ஞான ரீதியான விவசாயத்தின் நோக்கமாகும். மீன், இதர



கடல் பொருட்கள் உற்பத்தியும், நிலப்பரப்பு வளர்ச்சிக்கான சத்துப் பொருட்கள், உபயோகம் ஆகியவற்றைப் பொறுத்தது. சூரிய சக்தியையும் பயன்படுத்திக் கொண்டு வேளாண்மை விளை பொருட்களின் உற்பத்தியைப் பெருக்கிக் கொள்வதும் நவீன விஞ்ஞான வேளாண்மையின் ஓர் அம்சமாகும்.

விஞ்ஞான முறையில் வேளாண்மை உற்பத்திப் பெருக்கத்தை நான்கு வகைகளாகப் பிரிக்கலாம். அவை 1. கலப்பு இன உணவுத் தானியங்கள் உற்பத்தி; 2. இரசாயனப் புரட்சி; 3. பொறியியல், பாசனத் துறைகளில் நூதன வளர்ச்சி முறைகள் 4. வேளாண்மைப் பொருட்கள் போக்குவரத்து நிர்வாக முறைகள்.

### பயிர் வ்ளர்ச்சியில் புரட்சி

இந்த நூற்றாண்டில், உணவு வேளாண்மை உற்பத்திப் பெருக்கில் முக்கிய அம்சம் பயிர்ச் செடிகளில் இன வளர்ச்சி முறையில் புதிய முறைகளைக் காணுவதேயாகும். நம் நாட்டிலுள்ள பல்வேறு வேளாண்மைப் பல்கலைக் கழகங்களும், ஆராய்ச்சி நிறுவனங்களும் இதில் கவனம் செலுத்தி வருகின்றன. பருத்தி உற்பத்தியில் புதிய கலப்பு இனங்களைத் தயாரிக்கும் முயற்சி இந்தியாவில்தான் முதன் முதலாக மேற்கொள்ளப்பட்டது.

கோதுமை, நெல் பயிர்களில் புதிய குட்டை ரகங்களில் அதிகப்படியாக தானிய விளைச்சல் காணப்படுகிறது. கதிர்களில் இலை, வைக்கோல் ஆகியவற்றை

விட தானிய மணிகள் அதிகம் இருப்பதன் மூலம் மகசூல் அதிகம் கிடைக்கிறது. அதே சமயத்தில் உர உபயோகம் அதிகம் தேவைப்படுவதில்லை.

### இரசாயன முன்னேற்றம்

இரசாயன உரங்கள் உற்பத்தியில் நல்ல முன்னேற்றம் ஏற்பட்டிருப்பது மட்டுமின்றி பூச்சி கொல்லி மருந்துகள், நோய்த் தடுப்பு மருந்துகள், களைகளை நசிக்கும் மருந்துகள் போன்ற பயிர் விளைச்சல் பாதுகாப்புக்கான பல இரசாயனப் பொருட்களும் தற்போது தயாரிக்கப்படுகின்றன. ''ஹார்மோன்'' தெளிப்பு மூலம் தோட்டக் கலையில் புதிய கண்டு பிடிப்புகளைக் காணலாம். ஓர் ஆண்டில் இரண்டு தடவை மாங்காய் விளைச்சல் உண்டாக்கப்படுகிறது. பிலிப்பைன்ஸ் நாட்டைப் பின்பற்றி இது செய்யப்படுகிறது.

வேளாண்மையில் இரசாயன உரங்களைப் பயன்படுத்தும்போது அதனால் ஏற்படக்கூடிய நற்பலன்கள், கெடுதல்கள் இரண்டையும் சிந்தித்துப் பார்க்க வேண்டியது அவசியம். உற்பத்தித் திறன் அதிகரிப்பதால் சத்துக்குறைவு ஏற்படாமல் கவனித்துக் கொள்ள வேண்டும்.

### பாசனப் பொறியியல் வளர்ச்சி

பயிர் உற்பத்திக் காலத்திலும் அறுவடையின்போதும் உபயோகிக்கப்படும் வேளாண்மைக் கருவிகள், இயந்திரங்கள் உற்பத்தி முறையில் கணிசமான முன்னேற்றம் அண்மைக் காலத்தில் ஏற்பட்டுள்ளது. உழவுக் கருவிகள் மட்டுமின்றி, வறண்ட பாதி வறண்ட நிலங்களில் பாசன முறை வடிகால் வசதி போன்றவற்றிலும் நல்ல முன்னேற்றங்கள் ஏற்பட்டுள்ளன. உலகில் சம சீதோஷ்ண நிலையில் உள்ள பல நாடுகளில் நல்ல சூரிய வெப்பமுள்ள நாட்களிலும் அவ்வப்போது மழை பெய்வதும் உண்டு. ஆனால், நமது நாட்டில் சூரிய வெப்பம் அதிகமுள்ள கோடைக் காலத்தில் மழை கிடையாது. இருந்தாலும் சொற்பமே. ஆதலின் நம் நாட்டில் பயிர் விளைச்சலைத் தண்ணீர் வசதிக் குறைபாடு பெருமளவு நம் நாட்டில் பாதிக்கிறது. ஆதலினால் சிறு நிலப்பகுதிகளில் தண்ணீர்ப் பாசன முறை திறமையாக நிர்வகிக்கப்பட வேண்டிய தொன்றாகும். புன்செய் பயிர்ப் பகுதிகளில் அப்பகுதியிலுள்ள விவசாயிகளின் ஒத்துழைப்பு மூலம் பாசன வசதிகளைச் சீராக அமைத்துக் கொள்ள முடியும்.

அறுவடைக்குப் பின் கவனிப்புப் போதாது. இதில் போதிய கவனம் செலுத்தாதனால், பயிர் விளைச்சல் அதிகரிப்பின் பலன் உற்பத்தியாளருக்கு முழுமையாகக் கிடைக்காமற் போவது மட்டுமின்றி, உணவு உண்போருக்கும் தரமான தானியம் கிடைப்பதில்லை. தென்கிழக்குப் பருவமழை பெய்யும் பகுதிகளில், அரிசி, சோளம், மற்றத் தானியங்களின் உற்பத்தி கணிசமாகப் பெருகியபோதிலும், தானியங்களை உலர்த்துவது ஒரு கடும் பிரச்சினையாகிவிட்டது.

### போக்குவரத்து நிர்வாகம்

வேளாண்மை விளைச்சலுக்கான மூலப் பொருட்கள் கிடைத்த போதிலும், துரிதமான முன்னேற்றம் காண்பது, சாதனங்களைப் பயன்படுத்தப்படுவதையும் நவீன தொழில்நுட்ப அறிவு, ஆராய்ச்சிகள் தன்மை எவ்வளவு தூரம் விவசாயிகளை எட்டியுள்ளது. எந்த அளவுக்கு அவர்கள் அறிவூட்டப்பட்டிருக்கிறார்கள் என்பதையும் பொறுத்திருக்கிறது. வேளாண்மையை நிர்வகிக்கும் நிபுணர்கள் சிறு, நடுத்தர விவசாயி நூதன வேளாண்மை முறைகளை மேற்கொள்வதற்கு உதவிகரமாய் இருத்தல் வேண்டும். முக்கிய உணவுப் பொருட்களின் விளைச்சலை அதிகப்படுத்துவதற்கான வழிமுறைகள், இதுவரை பயன்படுத்தப்படாத சாதனங்கள், முறைகள் அதற்கு ஏற்படும் இடைஞ்சல்கள் ஆகியவற்றை உணர்ந்து செயல்பட வேண்டியது அவசியம்.

வேளாண்மைத் துறையில் நவீன சாகுபடி முறைகளைப் புகுத்துவதனால் பொருளாதார ரீதியில் ஏற்படக்கூடிய நற்பலன்களை எடுத்துக் காட்ட, செயல் விளக்கத் திட்டமொன்றைதேசிய அடிப்படையில் 1965 ஆம் ஆண்டில் மத்திய அரசு மேற்கொண்டது. 1965-ல் உயர்விளைச்சல் ரக கோதுமை நான்கு ஹெக்டேரில் பயிரிடப்பட்ட நிலை மாறி 1971-77-ல் 40 இலட்சம் ஹெக்டேரில் அது பயிரிடப்பட்ட முன்னேற்றம் இதன் மூலம் தெரிய வந்தது. நேரடியாக விவசாயிகள் இதைத் தெரிந்துகொள்ள இந்தச் செயல் விளக்க முறை வாய்ப்பளித்தது.



### மண்வளப் பாதுகாப்பு

சிறு-நடுத்தர நில உடைமைகள் பராமரிப்பு, திறம்பட, நடைபெற வேண்டுமானால் ஒரு தனிப்பட்ட விவசாயி, அவர் குடும்பம், அண்மையிலுள்ள விவசாயிகள் ஆகியோரின் கூட்டுப் பொறுப்பும் கூட்டு நடவடிக்கையும் அவசியம். இந்தக் கூட்டுச் சமுதாய முயற்சி உருவாகாவிடில், சிறு நில உடைமைகள் சம்பந்தப்பட்டவரை நவீன தொழில் நுட்ப முறைகள் பயனளிக்காமல் போய்விடலாம்.

மக்கள் நெருக்கம் அதிகரிக்க, அதிகரிக்க, தண்ணீர் பிரச்சினை அதிகரித்துவிடும். மண்வளம், கடல், குடியானவர் நலன், மீனவர் நலன், ஆகிய எல்லா அம்சங்களிலும் தீவிரக் கவனம் செலுத்தப்பட வேண்டும். நதிகள், அணைகள், குளங்கள், கடல் போன்றவைகளைப் பராமரித்த போதிலும் மண்வளத்தைப் பாதுகாப்பதில் கவனம் செலுத்த வேண்டும்.

நம் நாட்டில் 10,000 ஆண்டுகளுக்கு முன்பாகவே வேளாண்மை ஒரு முக்கியத் தொழிலாக இருந்து வந்திருக்கிறது. எனினும் கடந்த 25 ஆண்டுக் காலத்தில் அதாவது 1951-லிருந்து 1976 வரை வேளாண்மை விளைச்சலில் எந்த ஓர் ஆண்டிலும் ஏற்பட்ட முழு விளைச்சல் அளவைவிட அதிகமாகும். இந்தச் சாதனை மீண்டும் அவசியம். அப்பொழுதுதான் பசியால் யாரும் வாடக்கூடிய நிலை ஏற்படாது. சிறு விவசாயிகள் நவீன விவசாய முறைகளில் பலனை அனுபவிக்கச் செய்தால் நிலமில்லாத் தொழிலாளர்களும், கிராமங்களில் வசிக்கும் பெண்களும் உப தொழில்கள் மூலம் வேலைவாய்ப்புப் பெற்று, வாங்கும் சக்தியை அதிகரித்துக் கொண்டால் தனியொருவனுக்கு உணவு இல்லை என்ற நிலை ஏற்படாது. இது அசாத்தியமல்ல.

# மழை வருவதை முன்கூட்டி அறிவது எப்படி?

— டாக்டர் என். வி. ஜெயராமன்,
தமிழ்த் துறைத் தலைவர்,
தமிழ்நாடு வேளாண் பல்கலைக் கழகம்,
கோயமுத்தூர்.

வேளாண்மைச் செயல் முறைகளுக்குப் பருவ மழையே அடிப்படை. பருவ மழை உரிய காலத்தில் பொழிவது பயிரின் வளர்ச்சிக்கு இன்றியமையாதது. வானத்திலிருந்து மழை பொழியா விட்டால் மண்ணில் ஒரு பசும் புல் கூட முளைத்தல் அரிது எனத் திருவள்ளுவர் மழையின் தேவையைக் கூறியுள்ளார். வான் மழை இல்லாத பயிர் வாடி வளம் குன்றும். 'வான் மழையின்றி வாடிடும் பயிர் போல்' என்று புரட்சிக் கவிஞர் பாரதிதாசனும், 'வானை மறந்திருக்கும் பயிருமி இந்த வையம் முழுதுமில்லை தோழி' என்று மகாகவி பாரதியாரும் பாடியுள்ளனர்.

விஞ்ஞான அறிவுச் சாதனையால் வானிலை ஆராய்ச்சியின் துணை கொண்டு பருவ மழை பொழியும் காலத்தைப் பற்றி, இன்று நம்மால் முன் கூட்டியே அறிய முடிகின்றது. நான்கு அல்லது ஐந்து நூற்றாண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்த நம் வேளாண் பெருமக்கள் இன்றைய வானிலை அறிவியல் துணையைப் பெறவில்லை. எனினும், தங்கள் இயற்கையறிவின் துணையால், உலகத்து இயற்கை, செயற்கைப் பொருள்களின் இயக்கங்களைக் கொண்டு மழை வருவதை முன் கூட்டியே அறியும் தெளிவான அறிவுத் திறனைப் பெற்றிருந்தனர். வேளாண் பெருமக்கள் பெற்றிருந்த இவ்வகை இயற்கை அறிவுத் திறனை வேளாண் இலக்கியங்களான பள்ளு நூல்கள் பாங்குறத் தெரிவிக்கின்றன. அறிவியலால் கணக்கிட்டுக் கூறும் வானிலை பற்றிய முன்னறிவு சில வேளை பொய்ப்பினும் வேளாண் மக்களின் இயற்கை அறிவுத் திறனால் கூறப்படும் வானிலையின் இயல்பு பொய்ப்பதில்லை. வேளாண் பெருமக்கள் தங்கள் அனுபவத்தால் அறிந்து பின்பற்றிய இவ் வுத்திகள் இன்றைய வேளாண் பெருமக்களுக்குப் பெரிதும் துணை புரிபவை. மழை வருவதை முன் கூட்டியே அறிந்து செயல்பட இவை துணைபுரியும்.

மின்னல், வானத்தில் தோன்றும் இடத்தை அடிப்படையாகக் கொண்டு மழை பொழியப் போவதை முன் கூட்டியே அறியலாம். மேற்குத் திசையிலும், தென் திசையிலும் மின்னல் மின்னினால் மழை பொழியும். 'மலையாள மின்னல் ஈழ மின்னல் சூழ மின்னுதே' எனவரும் பள்ளுத்தொடர் இதனை உணர்த்தும். 'கொங்கு மின்னல் ஈழமின்னல் எங்கும் மின்னுதே' என்றும் பள்ளுத் தொடர் உள்ளது. மலையாள மின்னல், கொங்கு மின்னல் என்பவை மேற்குத் திசையில் தோன்றும் மின்னலையும் ஈழ மின்னல் என்பது தென் திசையில் தோன்றும் மின்னலையும் குறிப்பன.

இயற்கையாகக் காற்று வீசும் இயல்பினாலும் மழை பொழியப் போவதை அறியும் அறிவு வேளாண் பெருமக்களிடம் விளங்குகிறது. 'நேற்றும் இன்றும் கொம்பு சுற்றிக் காற்றடிக்குதே' என வருவது முக்கூடல் பள்ளுத் தொடர். திசையறிய முடியாமல் காற்றுச் சுற்றிச் சுற்றி அடித்தால் மழை பொழியும் என்பது வேளாண் பெருமக்களின் அனுபவம். வாடைக் காற்று வீசுவதும் ஒரு வகை மழைக் குறியே என்பது செண்பகராமன் பள்ளு. சந்திரனைச் சுற்றிப் பரிவேடம் போட்டிருப்பதும் விரைந்து மழை பொழியப் போவதை விளக்கும் அறிகுறியே 'துங்கச் சந்திரன் பரிவேடம் போட்டிருக்குதே' என வரும் வையாபுரிப் பள்ளுத் தொடர் இதனை விளக்கும். சந்திரனைச் சுற்றிப் பரிவேடம் போடுவது பற்றிய செய்தி பிற பள்ளு நூல்களில் குறிப்பிடப் பெறவில்லை. வெய்யில் மஞ்சள் நிறமாகத் தெரிவதும் ஒரு வகை மழைக் குறி. திருமலை முருகன் பள்ளு இக் குறிப்பை விளக்கியுள்ளது. 'மஞ்சள் நிற வெயிவெறிக்குது' என்பது இதனைக் கூறும் தொடராகும்.

இங்ஙனம், மின்னல், காற்று, சந்திரன், வெய்யில் என்ற இயற்கைப் பொருள்களின் இயக்கங்களைத் துணையாகக் கொண்டு தங்கள் அனுபவத்தால் மழை வருவதை முன் கூட்டியே அறியும் அறிவுத் திறன் வேளாண் பெருமக்களிடம் நிரம்பியிருந்தது. பறவை, பூச்சி, நீர்வாழ் உயிரினங்கள் முதலிய உயிர்ப் பொருள்களின் இயக்கமும் மழை பொழிவதை முன்னரே அறிவிக்கும் உத்திகளாக விளங்கின.

வானம்பாடி என்னும் பறவையினம் மழையைத் தேடி மகிழ்ச்சியுடன் பாடிப் பறக்கும் இயல்புடையது. வானம்பாடிகளின் இயக்கம் வானத்தில் நிறைந்திருக்குமானால் மழை பொழியும் என்பது வேளாண் பெருமக்களின் பட்டறிவு. 'ஒரு கோடி வானம் பாடி மழை தேடியாடுதே' என வரும் வையாபுரிப் பள்ளுத் தொடரும், 'மழை தேடியொரு கோடி வானம் பாடியாடுதே'' என வரும் முக்கூடற் பள்ளுப் தொடரும் இதனை உணர்த்தும்.

பருந்துகள் பட்டப் பகலில் சுற்றி வட்டம் போடுதலும் மழை வருவதை அறிவிக்கும் கருவியே. 'கங்கம் திரண்டே ஒலிக்குவது அங்கண் விசும்பில் என்றும், 'கங்குப் பட்டம் பகலிலே சுற்றி வட்டம் போடுதே' என்றும் வரும் தொடர்கள் இதனை உணர்த்தும். 'கோழி கால் நிமிர்த்தி இற கொடுக்கிக் கண் துயில்வதால் தாலமிசை ஆலிமழை பெய்யும்' என வரும் செண்பக ராமன் பள்ளுத்தொடர், கோழி உறங்குவது ஒரு வகை மழைக் குறி' என உணர்த்தும். கோழி காலை நிமிர்த்தி நிற்றலும், இறகை ஒடுக்குதலும், கண் துயில்வதும், மழையை முன்னரே அறிவிக்கும் அறிகுறியாம்.

வானத்தில் வெள்ளைப் பூச்சி, கும்பீடு நாச்சி என்னும் ஈசல் வகைகள் பறப்பதும், மழை பொழிவதை அறிவிக்கும் அறிகுறிகளாகக் கொள்ளப்பட்டன. மொட்டைச் சித்தா என்னும் பூச்சி வகை புல்லை வெட்டுவது, தவளைகள் கத்துதல், நண்டுகள் வளையடைத்தல், எறும்புகள் தங்கள் உணவோடு மேடுகளில் ஏறுதல் முதலியனவும் மழை வருவதை முன்னரே அறிவிக்கும் அறிகுறிகளாக வேளாண் பெருமக்களால் கொள்ளப்பட்டன.

இயற்கையாகவும் செயற்கையாகவும் நிகழும் செயல் முறைகளின் துணை கொண்டு, மழை பொழிவதை முன்னரே அறியும் அறிவுத் திறன் வேளாண் பெருமக்களிடம் அமைந்திருந்தது. மழை பொழியப் போவதை முன்னரே அறியும் இச் சிறப்பால், அதற்கேற்ற வகையில் முன்னேற்பாடுகளையும் அவர்களால் செய்து கொள்ள முடிந்தது.


காற்று நிகர் மென்மை
வண்ணத்துப் பூச்சியின்
எழில் வண்ணம்
கோ-ஆப்டெக்ஸ்
அச்சிட்ட நூல் சேலைகள்
உண்மைதான்! மென்மையான அச்சிட்ட நூல் சேலைகள்—நவீன டிசைன்கள்—யமுனா, அஜந்தா, சாமுண்டி-உள்ளங்கவர் வகைகள்—பரவசமூட்டும் வண்ணங்கள். கோ-ஆப்டெக்ஸ் அச்சிட்ட சேலைகள் இன்றைய நாகரீகமாகத் திகழ்பவை!
கைத்தறியே வண்ணத்துப்பூச்சி

# அண்ணா எனும் இலக்கியவாதி

## பி.சி.கணேசன்




வாழ்க்கையின் எந்த விஷயத்தையும் ஊடுருவிப் பார்த்திடும் ஆற்றல் மிக்கவராக அண்ணா விளங்கினார். அதுவே அவருடைய எழுத்தின் பலமும் ஆயிற்று. ஒரு சிறிய விஷயத்தைக் கூட மற்றவர்கள் அணுகாத புதிய பாணியில் அணுகி விமர்சிக்கும் திறமையை அவர் பெற்றிருந்தார். இதனாலேயே மற்றவர்கள் சாதாரணம் என்று தள்ளி விடக் கூடிய விஷயங்களையும் அவரால் சுவை படச் சொல்ல முடிந்தது.

குறிப்பிட்ட காலத்தின் பின்னணியை அண்ணா வெகு சுலபமாகப் படம் பிடித்துக் காட்டி விடுவார். அந்தக் கலையில் ஒப்பாரும் மிக்காரும் இல்லாத, தனித் தன்மை கொண்டவராக அவர் விளங்கினார். பிரிட்டிஷாரின் ஆட்சி இந்திய மண்ணில் நிலவிய போது எத்தகைய ஏமாளித் தனத்தில் இந்திய மக்கள் இருந்தார்கள் என்கிற விஷயத்தை அண்ணா அழகாகச் சுட்டிக் காட்டுகிறார். பொதுவாக நாட்டில் ஒரு பேடிமைத் தனமும் ஒழுக்க நெருக்கடியும் இருந்ததை எளிய வாக்கிய அமைப்புக்களால் அருமையாகப் படம் பிடித்துக் காட்டுகிறார். அண்ணா எழுதுகிறார் :

''மேதைகளைப் பேதைகள் விலைக்கு வாங்கிய காலம். கொக்கு சுடும் துப்பாக்கிகளைக் காட்டி வெள்ளைக்காரன் கோட்டை கொத்தளங்களைப்பிடித்த காலம். கட்ட பொம்மன்களைக் காட்டிக் கொடுத்த காட்டு ராஜாக்கள் வாழ்ந்த காலம்''.

—இவ்வாறு அண்ணா எழுதிக் கொண்டே போகிறார். முதல் வாக்கியத்தில் மேதைகள் வாய்ப்பின்றிப் பேதைகளிடம் விலை போய்விட்ட அவலத்தை எடுத்துச் சொல்லி, சாதாரணக் கருவிகளைக் கொண்டே வெள்ளைக்காரன் ஒரு பெரிய சாம்ராஜ்யத்தை இங்கே நிறுவிய நிலைமையினை எடுத்து விளக்கி, ஒற்றுமைக் குறைவின் காரணமாக காட்டிக் கொடுக்கும் நாட்டுத் துரோகிகள் மலிந்து போன நிலையை வார்த்தைப் படமாக்கி அன்றையச் சூழ்நிலையை அருமையாக விளக்கிச் சொல்லிவிடுகிறார்.

எதுகை, மோனையோடு அண்ணா எழுதுவதால் அவர் சொல்லவந்த விஷயத்திற்குச் சுவை ஏற்பட்டது என்பது ஒரு போலியான வாதம். எதுகை, மோனை அழகுடன் அண்ணாவுக்கு முன் எத்தனையோ பேர் தமிழில் எழுதி இருக்கிறார்கள். அண்ணாவின் எழுத்துக்கள் தோற்றுவித்த மறுமலர்ச்சியை எவருடைய எழுத்தும் ஏற்படுத்தியது

இல்லை என்பது குறிப்பிடத்தக்கது. எண்ணங்களை வெளியிட்ட பாணியில் அண்ணா ஒரு புதுமையினைக் கையாண்டார். ஓசை நயத்தோடு அவர் வாக்கியங்களை எழுதினார் என்பது உண்மை என்றாலும், அந்த ஓசை நயம் மட்டுமே அவர் எழுத்தின் சிறப்பாக இருந்தது எனச் சொல்வது அவருடைய நடையைச் சரியாக மதிப்பீடு செய்தது ஆகாது.

மேலே எடுத்துக் காட்டியுள்ள வாக்கிய அமைப்புகளில் கூட எதுகையும், மோனையும் எழில்பட அமைந்து இருக்கின்றன. அத்தோடு அவர் சொல்ல வந்த கருத்தினை மேலும் சிறப்பாக்க அவை பயன்பட்டு இருக்கின்றனவே தவிர எதுகை, மோனை அழகால் மட்டும் அவை பலம் பெற்று அமையவில்லை. அன்று நிலவிய மூன்று நிலைகளை, அழகான, அடுக்கடுக்கான, சிறிய வாக்கியங்களாக அண்ணா அமைத்துக் காட்டி இருக்கிறார். அந்த வாக்கியங்களில் அமைந்துள்ள ஓசை அழகும், கருத்தை வெளியிட்டு இருக்கின்ற தன்மையும், அவை பெற்றுள்ள கூர்மையும், உடனடியாக, படிப்போர் மனத்தில் தைத்து அப்படியே நிலைத்து விடுகின்றன.

இதன் காரணமாகவே அண்ணாவின் நடையை எவர் படித்தாலும் அதில் சொக்கிப் போனார்கள் என்பதோடு கூட, திரும்பத் திரும்பச் சொல்லி மகிழ்ந்திடும் மன நிலையினையும் பெற்றார்கள்.

பெரியாரின் கருத்துக்களைத் தான் பெரும்பாலும் அண்ணா சொன்னார். பெரியார் அந்தக் கருத்துக்களை முரட்டுத்தனமாகச் சொன்ன போது பலரின் மனமும் அதனால் புண்படும் நிலையும் சில சமயங்களில் ஏற்பட்டது உண்டு. ஆனால் அண்ணாவின் பாணி முற்றிலும் புதியது. கசப்பான மருந்தினைச் சுவையான தேனில் குழைத்துக் கொடுத்திடும் நல்ல மருத்துவரைப் போல, சமூகத்தைச் சாடுகின்ற கருத்துக்களையும் அலங்காரச் சொற்களால் சொல்லுவது அண்ணாவுக்குப் பழக்கம். கருத்தினை ஏற்க மறுப்போர் கூட, அவரது நடை அழகில் மயக்கமுற்று, கருத்துக்களுக்குத் தாங்கள் தெரிவிக்க விரும்பிய எதிர்ப்பினை மட்டுப்படுத்திக் கொள்வர்.

கால மாற்றத்தோடு பழசாகிப் போன பழக்க வழக்கங்களையும் மாற்றிக் கொள்ள வேண்டும் என்பதற்காகத் தொடர்ந்துபோராட்டம் நடத்தியவர் அண்ணா. பயனற்றுப் போன பழையவற்றை ஒதுக்கித் தள்ளி, புதியவற்றை மனம் உவந்து ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பது அண்ணாவின் கருத்து இதை அவர் எப்படிச் சொல்லி இருக்கிறார் என்று பார்ப்போம்.

''காலையிலே மதுரமாய் இருந்த பால் மாலையிலே திரிந்து கெட்டு விட்டால் சாக்கடைச் சேருகிறது. இரவிலே மனோகரிகளின் கூந்தலில் கொஞ்சியமலர் காலையிலே கசங்கி வாடிய பின் வீசி எறியப்படுகிறது குப்பை மேட்டிலே. அதே போலத்தான் பழைய எண்ணங்களும், ஏற்பாடுகளும்''.

எவ்வளவு கடுமையான விஷயத்தை எத்தனை நளினத்தோடு சொல்லுகிறார் அண்ணா! பாலின் இனிமையையோ, அதன் தேவையினையோ எவரும் மறுத்துவிட முடியாது. அந்தப் பால் கூடத் திரிந்து கெட்டுப் போகுமானால், பத்திரமாகப் பாதுகாத்து வைத்த பாலாயிற்றே என்கிற எண்ணத்தால் திரிந்த பாலை எவரும் போற்றிப் பாதுகாப்பது இல்லை. கெட்ட பாலைக் கொட்டி விடுகிறார்கள் சாக்கடையிலே. கூந்தலில் கொஞ்சிடும் வரையில்தான் மலருக்கு மரியாதை. அதே மலர், கசங்கி வாடிடும் போது, கூந்தலுக்கு உரிமை கொண்டாட முடியாத நிலையை அது பெற்றுவிடுகிறது. எந்த மலரை மகிழ்ச்சியோடு கூந்தலில் அணிந்து அழகு பார்த்தாளோ அதே மங்கை, அந்த மலர் வாடியவுடன் அதை அலட்சியமாகத் ,தலையிலிருந்து அப்புறப்படுத்தி, குப்பை மேட்டிலே வீசி எறிந்து விடுகிறாள்.

எவ்வளவு அழகாக இந்த உதாரணங்களின் மூலம் பயனற்ற எதுவும் போற்றிப் பாதுகாக்கப் படுவது இல்லை என்கிற உண்மையினை, அண்ணா எடுத்துக் காட்டி விடுகிறார். திரிந்த பால் சாக்கடையைச் சென்று அடைவதும், காய்ந்த மலர் குப்பை மேட்டில் வீசி எறியப்படுவதும் எப்படித் தவிர்க்க முடியாதனவோ அதே போலத்தான் சமூகத்திற்குப் பயன்படாத விஷயங்களையும் தயவு தாட்சண்யமின்றி உதறித் தள்ளிவிட வேண்டும் என்பது அண்ணாவின் வாதம்.

இதையே பெரியார் முரட்டுத் தனமாகச் சொன்ன போது கச்சைகட்டி எதிர்த்தவர்கள், அண்ணா நளினமாகச் சொன்ன போது அசட்டுச் சிரிப்புடன் ஏற்றுக் கொண்டார்கள்.

அண்ணா என்ன சொன்னார் என்பதை விட எப்படிச் சொன்னார் என்பதிலேதான் அவருடைய வெற்றியே அடங்கி இருக்கிறது. சாதாரண விஷயத்தையும் நாடகப்படுத்தி எழுதுவது அண்ணா கையாண்ட முறைகளில் ஒன்று. சற்றுக் கடுமையான விஷயங்களை உணர்ச்சி பூர்வமாகச் சொல்ல விரும்புகின்றபோது, யாரைத்தாக்குதலுக்கு இலக்காக்குகிறாரோ அவரை முன்னிலைப் படுத்தி எழுதுவது அண்ணாவின் வழக்கம். அதே போலவே சிறிய எண்ணங்களைக் கூடக் காட்சி வடிவங்களாகக் காட்டுவது அண்ணா கையாண்ட முறைகளில் ஒன்று.



விதி என்கிற தலைப்பில் அண்ணா ஒரு முறை வானொலியில் உரை நிகழ்த்தினார். மனிதன் எதை எண்ணுகிறானோ அதுநடை பெறாமல் போகும் போது, அவன் எதிர்பார்த்ததற்கு மாறாகவே எல்லாம் நடக்கும் போது,அவன் விதியைப் பற்றி எண்ண வேண்டிய நிலைக்கு வருகிறான் என்று உணர்த்த விரும்பும் அண்ணா சொல்லுகிறார் :

''நட்டது முளைக்காத போது, போட்ட கணக்குப் பொய்யாகும் போது, நண்பர்களிடமிருந்து பகை கிளம்பும்போது, ஓவியம் தீட்டுகையிலே வண்ணக் கலயம் உடையும் போது,வீணையில் இசை எழுப்ப, அந்த வீணையின் நரம்பு அறுந்து, அறுந்த அந்த நரம்பு கண்ணிலே பாயும் போது, விதி வெற்றிச் சிரிப்புடன் எதிரே நிற்கும்''.

விதி பற்றி எத்தனையோ பேர் இந்தக் கருத்தினை வெளியிட்டு இருக்கிறார்கள். ஆயினும், அண்ணா அதை ஓர் ஓவியன் தூரிகை கொண்டு திரைச் சீலையில் ஓவியம் தீட்டுவது போல உவமை அழகோடு தீட்டிக் காட்டி இருக்கிறார்.

இவ்வாறு அண்ணா எப்படிச் சாதாரண விஷயத்தையும் சுவைப்படுத்திச் சொல்லிச் சென்றார் என்பதற்கு அவருடைய எழுத்துக்களிலிருந்து ஆயிரம் ஆயிரம் மேற்கோள்களைக் காட்டமுடியும். தெரியாததை, தெரிந்ததைக் கொண்டு விளக்குவது என்பது இலக்கியத்தில் பழைய பாணி தான் என்றாலும், உரை நடையில் அண்ணா அதைப் புதுமை அழகோடு கையாண்டு வெற்றி கண்டார். அவர் எதை எழுதினாலும் சலிப்பின்றிப் படிக்கக் கூடிய ஓர் உணர்ச்சி, வாசகர்களிடையே ஏற்பட்டது. இதனால், அண்ணாவின் எழுத்து, தனியானதொரு கவர்ச்சியுடன் விளங்கி, பெரிய வாசகர் வட்டத்தைத் தனக்கென்று ஏற்படுத்திக் கொள்ளும் நிலையை உருவாக்கியது.



— தொடரும்



# கஸ்தூரி பாவின் வாழ்விலே...

"கண்ட துண்டோ கலியுலகில்
காணப் போறேமோ?
கஸ்தூரிபாய் போலுத்தமியைக்
காணப் போறேமோ?" என்ற பாடல் முப்பதாண்டுகளுக்கு முன்னர், தமிழகத்தின் குக்கிராமங்கள் முதல்,பெரு நகரங்கள் வரை ஒலித்துக் கொண்டிருந்தது. ஆகாகான் மாளிகையில் சிறை வைக்கப்பட்டிருந்த அன்னை கஸ்தூரிபாய் அவர்களின் மறைவுக்குப் பின் (22—2—1944) எழுந்த அந்தப் பாடலைச் சிறுவர் முதல் முதியவர் வரை பாடி வந்தார்கள். அந்த உத்தமியின் வாழ்க்கை ஏட்டின் சில நிகழ்ச்சிகள் இங்கே இடம் பெற்றுள்ளன.

**1913**-ஆம் ஆண்டு! காந்தியடிகள் தென்னுப்பிரிக்காவில் இருந்த சமயம். ஒருநாள் பகல் *11* மணி. காந்தியடிகளும், அவரது குடும்பப் பெரியவர் காளிதாஸ் காந்தியும் சாப்பிட்டுக் கொண்டிருந்தார்கள். அப்போது கஸ்தூரிபா, சமையல் அறையைத் தாமே சுத்தம் செய்து கொண்டிருந்தார். அந்தக் காட்சியைப் பார்த்த காளிதாஸரின் மனம் கலங்கி விட்டது. உடனே காந்தியடிகளைப் பார்த்து,

''சகோதரனே! நீ உன் வாழ்க்கையைப் பெரிதும் மாற்றிக் கொண்டுவிட்டாய், மிகவும் எளிய முறையில் வாழ்கிருய்; பாவம் கஸ்தூரி! இவள் எந்தச் செல்வ வசதியையும் அனுபவிக்கவில்லை''—காளிதாஸ் கேட்டார்.

''செல்வத்தை அனுபவிக்க வேண்டாம் என்று இவளை நான் எப்போது தடுத்தேன்?''—காந்தியடிகள் கேட்டார்.

உடனே கஸ்தூரி பா குறுக்கிட்டார்.

''அப்படியென்றுல் உங்கள் வீட்டில் நான் எந்தச் செல்வ வசதிகளை அனுபவித்திருக்கிறேன்!'' காந்தியடிகளைப் பார்த்துக் குத்தலுடன் கேட்டார் பா.

''நகைகள் அணிய வேண்டாமென்றே, நல்ல பட்டுச் சேலைகள் உடுத்த வேண்டாமென்றே உன்னை எப்பொழுது தடுத்திருக்கிறேன்? உனக்காகத் தங்க வளையல்கள்கூடச் செய்வித்துக் கொண்டு வந்திருந்தேனல்லவா?' —சிரித்துக் கொண்டே கேட்டார் காந்தியடிகள்.

''நீங்கள் எல்லாம் வாங்கிக் கொண்டு வந்து கொடுத்த போதிலும் நான் அவைகளை எப்பொழுது பயன்படுத்தினேன்? உங்கள் வழியே வேறென்று தெரிந்து கொண்டேன்! நீங்களோ துறவியைப் போல வாழ விரும்புபவர்; நான் மட்டும் சுகமாக வாழ்ந்து பயன் என்ன? உங்களுடைய போக்கைத் தெரிந்து கொண்ட பிறகு நான் என் மனத்தை அடக்கிக் கொண்டுவிட்டேன்''—பா பெருமிதமாகக் குறிப்பிட்டார்.

''மனத்தை அடக்கிக்கொண்டு விட்டேன்'' என்று பா குறிப்பிட்டாரே அந்த வாசகமும்-அதைச் சொல்ல வைத்த உள்ளமும் தான் அவரது வாழ்வில் வெற்றியைத் தேடித்தந்தன.

தென்னுப்பிரிக்காவில் 1913ல்; அப்போது ஒரு சட்டம் நிறைவேறியது. கிறிஸ்துவ முறையில் திருமண அலுவலரினுல் பதிவு செய்யப்படும் திருமணத்தைத் தவிர மற்றவை எல்லாம் சட்டப்படி நடைபெறும் மணம் அல்ல என்பதுதான் அந்தச் சட்டத்தின் கூற்று. அதன்படி, இந்து, முஸ்லிம், பார்சி ஆகிய மதத்தினர் செய்துகொண்டுள்ள திருமணங்களெல்லாம் செல்லாதவை என்ற சூழ்நிலே எழுந்தது. எனவே அந்தச் சட்டத்தை மாற்ற அந்த நாட்டு அரசுடன் பேச்சு வார்த்தை நடத்தினர் அண்ணல். அது பயனில்லாமல் போகவே அந்தச் சட்டத்தை ரத்து செய்ய அறப்போர் தொடுக்கும் முடிவினை மேற்கொண்டார்.

அந்தப் போரில் பெண்களும் பங்கு பெற வேண்டும் என்று தீர்மானித்தார். தீர்மானத்தைச் செயலாக்க முனைந்தார்; அங்குள்ள இந்தியப் பெண்களிடம் போராட்டம் குறித்துப் பேசினர். ஆனுல் தம் மனைவி கஸ்தூரி பாவிடம் போராட்டம் குறித்துப் பேசவே இல்லை. மற்றப் பெண்கள் எல்லாம் போராட்டத்தில் கலந்து கொள்ளும் போது, தான் மட்டும் ஏன் கலந்து கொள்ளக்கூடாது என்ற ஏக்கம் அவருக்கு எழுந்தது. உடனே காந்தியடிகளைக் கேட்டார்:

''போராட்டத்தைக் குறித்து நீங்கள் என்னிடம் பேசாதது எனக்கு வருத்தமளிக்கிறது. நான் சிறை செல்ல முடியாத அளவுக்கு என்னிடம் என்ன குறை இருக்கிறது? எந்தப் பணியைச் செய்யும்படி நீங்கள் என் சகோதரிகளுக்கு அறிவுரை கூறுகிறீர்களோ, அதையே நானும் செய்ய வேண்டியதுதானே!''

உடனே காந்தியடிகள் பதிலிறுத்தார்:

''என்னுல் உன்னை வருத்த முடியுமா? இதில் அவநம்பிக்கைக்குக் காரணம் எதுவும் இல்லை. நீ போராட்டத்தில் கலந்து கொள்வதனுல் எனக்கு மகிழ்ச்சிதான். ஆனுல் நான் சொல்லி நீ போனதாகக் கருதுவதற்குச் சிறிது இடமேற்பட்டாலும் அது எனக்குப் பிடிக்காது. இம்மாதிரியான பணியை எல்லோரும் தம் சொந்தத் தெம்பைக் கொண்டே செய்ய வேண்டும். நான் போகச் சொல்லி, நீ உடனே போய்விட்டு வழக்கு மன்றத்தில் நின்றதும் நீ பயந்து நடுங்கினுல்-சிறைச்சாலையில் உள்ள துன்பத்தைக் கண்டு துவண்டு போனுல்-என் நிலைமை என்னவாகும்? நான் உன்னை எப்படி வைத்துக் கொள்ள முடியும்? உலகத்தின் எதிரில் நான் எப்படி நிமிர்ந்து நிற்க முடியும்? இந்த அச்சத்தினுலேதான் நான் உன்னை ஏவவில்லை.''

இதைக் கேட்டவுடன் கஸ்தூரி பாவின் உள்ளம் மிகவும் வருந்திவிட்டது. தன் கணவரே தனது மன உறுதி குறித்துச் சந்தேகம் கொள்கிருரே என்ற சஞ்சலமும் ஏற்பட்டுவிட்டது.

''நான் சளைத்துத் திரும்பினுல் என்னை நீங்கள் வைத்துக்கொள்ள வேண்டாம். என் பிள்ளைகளால் கூடச் சகிக்க முடிந்து, நீங்கள் எல்லாவற்றையும் சகிக்க முடியும் பொழுது என்னுல் மட்டும் முடியாது என்று நீங்கள் எண்ணுவது எப்படி? நான் இந்தப் போரில் கலந்து கொண்டுதான் தீருவேன்''-நெஞ்ச உறுதியுடன் கூறினுர் பா.

பாவின் உறுதியைக் கண்டு வியந்து, அறப்போரில் ஈடுபடும் பெண்களில், அவரது பெயரையும் பதிவு செய்து கொண்டார் அண்ணல். அறப்போர் தொடங்கியது. அது பாவுக்குச் சிறைவாசத்தைத் தந்தது, அதனைப் பெருவிருப்போடு ஏற்றுக் கொண்ட பா; மூன்று மாதச் சிறைவாசத்தை அனுபவித்துத் திரும்பினுர்.

அறப்போரில் கலந்து கொள்ளும் உரிமையை, தாமே வலியச் சென்று தேடிப் பெற்று, சிறைத் துன்பத்தை அனுபவித்த முதல்

## வாசுகியும் கஸ்தூரியும்

அடிசிற் கினியாளே அன்புடை யாளே
படிசொல் தவருத பாவாய்—அடிவருடிப்
பின்தூங்கி முன்எழும் பேதையே போதியோ
என்தூங்கும் கண்கள் இரா.

—அன்புக்குரிய வாழ்க்கைத் துணைவி வாசுகி அம்மையார் உயிர்துறந்தபோது—அவர் அருங்குணத்தைச் செய்யுளாக்கி மன அமைதி அடைந்திருக்கிருர் குறளாசான் வள்ளுவர். 'பெண்ணிற் பெருந்தக்க யாவுள' என்ற புகழுரையை வழங்கிய வள்ளுவர், மனைவியைப் பாராட்டியிருப்பது இயல்பானதே.

வள்ளுவருக்குப் பின் ஏறக்குறைய இரண்டாயிரம் ஆண்டுகள் கழித்து—வள்ளுவரது நெறியில் வாழ்ந்த நமது தேசத் தந்தை காந்தியடிகள், தம் மனைவி கஸ்தூரி பாய் மறைவு எய்தியபோது—வள்ளுவரைப் போலவே கையறு நிலைக்கு ஆளாகியிருக்கிருர்; அவரைப் போலக் கவிதை பாடவில்லையே தவிர—கண்ணீர்க்கடலில் விளைந்த கருத்து முத்துக்களை வழங்கியிருக்கிருர்.

''அவளுடைய மரணத்தினுல் எனக்கு எவ்வளவு துக்கம் ஏற்படுமென்று நான் எண்ணிக் கொண்டிருந்தேனே அதைவிட அதிகத் துக்கம் ஏற்பட்டிருக்கிறது.

''தனது உறுதிமிக்க மனத்தின் காரணமாக, அவள் தனக்குத் தெரியாமலே அகிம்சை மயமான ஒத்துழையாமைக் கலையை மேற்கொள்வதில் எனக்கு ஆசான் ஆகிவிட்டாள். பெண் என்ற வகையிலும், மனைவி என்ற வகையிலும் என் வேலைகளில் ஐக்கியமாகிவிடுவதையே அவள் தன் கடமை என்று மதித்திருந்தாள். தன் இறுதி மூச்சு வரையில் என் வசதிகளைக் கவனிப்பதை அவள் நிறுத்தவே இல்லை.''

பெண்மணி, அகில உலகத்திலேயே கஸ்தூரி பாவாகத்தான் இருக்க முடியும் என்பதை இந்த நிகழ்ச்சி எடுத்துக் கூறுகிறது அல்லவா?

**1929**-ஆம் ஆண்டு! அப்போது காந்தியடிகள் இமயமலையில் கௌசானி என்னும் இடத்தில் தங்கியிருந்தார். அங்கே குளிரும் பனியும் அதிகமாக இருந்தபோதிலும்கூட, இரவு நேரத்தில், அறைக்குள் படுக்காமல் வழக்



கம் போலத் திறந்த வெளியில் தூங்கி வந்தார்.

ஒருநாள் இரவு! காந்தியடிகள் தூங்கிக் கொண்டிருந்த நேரம்; ஒரு புலிக்குட்டி அவரது படுக்கையைச் சுற்றி வட்டமிட்டுக் கொண்டிருந்தது. அங்கிருந்த ஊழியர்களில் ஒருவர் அதைப் பார்த்து விட்டார்; உடனே புலிக்குட்டியை விரட்டினார்.

மறுநாள், அந்தச் செய்தி காந்தியடிகளிடம் தெரிவிக்கப் பட்டது. அவர் அதைப் பொருட் படுத்தவில்லை. ஆனால் அங்கிருந்த ஊழியர்களும், கஸ்தூரி பாவும் அச்சம் அடைந்தார்கள்.

இரவு நேரம் வந்தது! "திறந்த வெளியில் தூங்க வேண்டாம்; உள்ளேயே தூங்குங்கள்" என்று ஊழியர்கள் காந்தியடிகளை வேண்டினார்கள். சிரிப்பைப் பதிலாக்கிவிட்டுப் படுக்கையை வெளியில் போட்டார் காந்தியடிகள்.

அண்ணலின் எண்ணத்தை மாற்ற முடியாது என்பதை நன்கு அறிந்திருந்த கஸ்தூரி பா என்ன செய்தார் தெரியுமா? தாமும் படுக்கையை வெளியே போட்டார்; அண்ணலுக்கு வருகின்ற ஆபத்தில் தாமும் பங்கு பெறுவதற்குத் தயாரானார்.

**1942**-ஆகஸ்ட் திங்கள் பம்பாயில் நடைபெற்ற செயற்குழுவில் கலந்து கொள்வதற்காகச் சென்ற காந்தியடிகளுடன் கஸ்தூரிபாவும் புறப்பட்டார். அவர்களை வழியனுப்புவதற்காக ஆசிரமத்து அன்பர்கள் சிலர் வார்தா புகை வண்டி நிலையத்திற்குச் சென்றிருந்தார்கள். "விரைவில் திரும்பி விடுங்கள் பா" என்று அவர்கள் பாவிடம் கேட்டுக் கொண்டார்கள்.

"உங்கள் அனைவரின் ஆசியினால் திரும்பி வர முடியுமானால் எனக்கு மகிழ்ச்சிதான்"—பா பதில் அளித்தார்; அந்தப் பதில் அவர் இனிமேல் சேவாகிராமத்திற்குத் திரும்பி வரமாட்டார் என்பதை மறைமுகமாகத் தெரிவித்தது.

அதன் பின்னர் நடைபெற்ற ஆகஸ்ட்டுப் புரட்சியின் காரணமாக, காந்தியடிகளும் கஸ்தூரி பாவும் மகாதேவ தேசாயும் ஏனைய முன்னணித் தலைவர்களும் கைது செய்யப்பட்டு ஆகாகான் மாளிகையில் சிறை வைக்கப்பட்டார்கள்.

சிறையிலே மகாதேவ தேசாய் இறந்துவிட்டார்; அவரது மறைவு காந்தியடிகளையும் கஸ்தூரி பாவையும் அதிர்ச்சிக்கு ஆளாக்கி விட்டது. தம்மைப் பார்க்க வருவோரிடம் எல்லாம் மகாதேவ தேசாயின் மறைவுச் செய்தியைச் சொல்லியே புலம்பிக் கொண்டிருந்தார் பா.

நாளடைவில் பாவின் உடல் நிலையும் சீர்கேடுற்றது. தம்மைக் காண வந்த தோழியரிடம் "இதுவே நமது கடைசிச் சந்திப்பு; நான் இங்கிருந்து பிழைத்து வெளிவரப் போவதில்லை" என்று சொல்லி வந்தார் பா.

*1944* ஆம் ஆண்டு பிப்ரவரி *22*-ஆம் நாள்.

பாவின் உடல்நிலை மிகவும் மோசமாகிவிட்டது. இரவு மணி 7-க்கும் மேல் இருக்கும். பா, அண்ணலை அழைத்தார். அண்ணலும் அவரருகில் சென்றார். பாவை அன்புடன் தமது மடியில் வைத்துக் கொண்டார். பா—அண்ணலை அன்புடன் பார்த்துத் தழுதழுத்த குரலில் சிரமத்துடன் பேசத் தொடங்கினார்.

"நான் இப்பொழுது போகிறேன்! நாம் எவ்வளவோ சுகம் அனுபவித்தோம்; துக்கமும் அனுபவித்தோம். நான் போன பிறகு அழாதீர்கள்; நான் இறந்த பின்பு மகிழ்ச்சியாக இருக்க வேண்டும்..." பேச்சு முடியவில்லை; அவரது உயிர் அண்ணலின் மடியில் இருந்தவாறே, நீங்கிவிட்டது.

அண்ணலால் பாவின் கடைசி வேண்டுகோளை நிறைவேற்ற முடியவில்லை; ஆமாம்! அழவேண்டாம் என்று அவர் வேண்டுகோள் விடுத்தாரே, அதை நிறைவேற்ற இயலாமல், கண்ணீரை அருவியெனக் கொட்டினார் அண்ணல். அங்கிருந்த அனைவரின் கண்களும் குளமாயின.

பாவின் மேனி நெருப்பிடப் பட்டது. நீறாயிற்று. ஆகாகான் மாளிகையில் அவருக்கு நினைவுச் சின்னம் உருவாக்கப்பட்டது.

—எஸ். சண்முகசுந்தரம் பி.லிட்.

## குந்தாவில் மேலும் ஒரு யூனிட்

**குந்தா நீர் மின்சாரத் திட்டத்தின் நான்காவது கட்ட விரிவாக்கத்தின்கீழ், குந்தாவில் 60 மெகாவாட் யூனிட் ஒன்று 8-2-1978 அன்று துவக்கி வைக்கப்பட்டது. இதனால், குந்தாவில் மொத்த மின்சார உற்பத்தி 485 மெகாவாட்டாக உயர்ந்தது. குந்தாவில் இன்னும் 3 அல்லது 4 மாதங்களில் 50 மெகாவாட் திறன் கொண்ட மற்றொரு யூனிட் துவக்கி வைக்கப்பட இருக்கிறது.**

**SIEMENS**

**மோட்டார், பம்ப், ஸ்விட்ச், ஸ்டார்ட்டர் கேபிள் தன்னை இணைத்திடுவீர்,**
**பஞ்சரத்தினம் இணைந்த ஸீமென்ஸ் பம்ப்ஸெட் பொருத்தி மகிழ்ந்திடுவீர்!**



பஞ்சரத்தினங்கள் வீட்டில் மகிழ்ச்சிபொங்க வைப்பது போல் ஸீமென்ஸ் பம்ப்செட்டின் ஐந்து உறுப்புகளும் வயல்களில் பசுமை பொங்க வைக்கின்றன. இந்த உறுப்புகள் இந்திய நிலவரத்தை மனதில் கொண்டு ஜெர்மன் டிசைன்களின்படி உருவாக்கப்பட்டவை. அதனால் இவை ஒன்றாக இணைந்து பல வருடங்கள் நல்ல உழைப்பைத் தருகின்றன.

- ஸீமென்ஸ் பம்ப் ஸெட்டைப் பெற பாங்குகளும் மற்ற சர்க்கார் நிறுவனங்களும் எளிதில் கடன் கொடுக்கின்றன
- ஸீமென்ஸ், அவர்களுடைய விற்பனையாளர்களின் எலெக்ட்ரீஷியன்களுக்கு பம்ப் ஸெட்டைப் பொருத்துவது, ஸர்விஸிங் மற்றும் ரிப்பேர் செய்வது பற்றிய முழுமையான பயிற்சி அளிக்கின்றனர்.
- விற்பனைக்குப் பிறகான சேவைக்கும். ஸ்பேர் பார்ட்டுகளுக்கும் அருகாமையிலுள்ள ஸீமென்ஸ் விற்பனையாளருடன் தொடர்பு கொள்ளுங்கள்

**பம்ப் செட்டின் எல்லா பாகங்களுக்கும் —ஸீமென்ஸ்**

**ஸீமென்ஸ் இந்தியா லிட்.**

பம்பாய . கல்கத்தா . சென்னை
புது டில்லி . அகமதாபாத்
பெங்களூர் ஹைதராபாத் லக்னோ

# வெற்றி வாகை சூடிய தமிழ்நாடு என்.சி.சி

அட்டை சொல்லும் செய்தி

டெல்லியில் நடைபெற்ற 1978 குடியரசு நாள் முகாமில், தமிழ் நாடு—புதுவை மாநில தேசிய மாணவர் படை இயக்ககம், அனைத்து இயக்ககங்களுக்கான வீர முதன்மை வெற்றிக் கொடியைப் பெற்றுள்ளது.

கடந்த ஆண்டைப்போல இவ்வாண்டிலும் தமிழ்நாடு தேசிய மாணவர் படையினர் வெற்றி வாகை சூடியுள்ளனர். இது வரை தமிழ் நாடு-புதுவை மாநில தேசிய மாணவர் படை இயக்ககம் எட்டுமுறை வீரமுதன்மை வெற்றிக் கொடியைப் பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது.

தேசிய மாணவர் படைக்கான இயக்ககங்கள் அமைக்கப்பட்டவுடன் 1964-ஆம் ஆண்டுக்குப் பிறகு அனைத்து இயக்ககங்களுக்கான வீர முதன்மை வெற்றிக் கொடி அளிக்கப்பட்டு வருகிறது.

நமது தமிழ்நாடு—புதுவை மாநில தேசிய மாணவர் படை எட்டு முறை, முறையே 1962, 1968, 1971, 1973, 1974, 1975, 1977, 1978 ஆகிய ஆண்டுகளில் வெற்றி வாகை சூடியுள்ளது. இயக்ககம் என்ற அமைப்பு உருவாவதற்கு முன்பே, 1962-லும் தமிழ்நாடு அணியினர் வெற்றி பெற்றுள்ளனர்.

பங்கேற்ற பதின்மூன்று முறைகளில் எட்டு முறை, குறிப்பிட்ட இயக்ககமே வெற்றி வாகை சூடியுள்ளது போற்றிப் பாராட்டுதற்குரியதாகும்.

இவ்வாண்டு நடைபெற்ற போட்டியில் மத்தியப் பிரதேச தேசியமாணவர்படை இயக்ககம், கேரள மாநில தேசிய மாணவர் படை இயக்ககம் ஆகியவற்றின் கடுமையான போட்டிகளைச் சந்தித்துத் தமிழ்நாடு இயக்ககம் மாபெரும் வெற்றிபெற்றுள்ளது.

அனைத்து தேசிய மாணவர் படை இயக்ககங்களுக்கு இடையேயான வீர முதன்மை வெற்றிக் கொடிப் போட்டியில் இதுவரை எட்டுமுறை வெற்றி சூடியமைக்காக என். சி. சி. டைரக்டர் ஜெனரல் அளித்த சிறப்புப் பரிசை மாநிலக் கல்லூரி மாணவர் திரு. அப்பண்ணா, தமிழக முதல்வர் அவர்களிடமிருந்து பெறுகிறார்.



இவ்வாண்டு கீழ்க் கண்ட போட்டிகளில் தமிழ்நாடு அணி முதன்மை பெற்றது.

*உடற்பயிற்சிப் போட்டி.

*விமான மாடலிங் போட்டி.

*சிக்னல் போட்டி.

*முதுநிலை அணி குறிபார்த்துச் சுடும் போட்டி.

*அனைத்து இந்திய சிறந்த முதுநிலை அணி பயிற்சிப் படைஞர் போட்டி.

*சீனியர் டிவிஷன் ஆண்களின் விளக்க வினாடி வினாப் போட்டி.

நடைபெற்ற முகாமின் போது டெல்லியில் கடுங்குளிராக இருந்த பொழுதும் தமிழ்நாடு தேசிய மாணவர் படையினர் தங்கள் கடும் உழைப்பின் மூலம் தாங்கள் சிறந்த அணியினர் என்று காட்டி வெற்றி வாகை சூடியுள்ளனர்.

இவ்வாண்டு தமிழ்நாடு-புதுவை மாநில தேசிய மாணவர் படையின் சார்பில் புதிதாகக் கலைக் குழு ஒன்றும் பங்கேற்றது. இக் கலைக் குழு நான்கு பரிசுகளைப் பெற்றதுடன் மூன்றாவது சிறந்த கலைக் குழுவாகத் தேர்ந்தெடுக்கப் பட்டுப்பரிசு பெற்றது.

வெற்றி பெறும் ஒவ்வோர் ஆண்டுக்கும் தனியாகச் சுழற் கோப்பைகளைப் பெற்றிருந்தாலும் பங்கேற்ற பதின் மூன்று போட்டிகளில் எட்டு முறை தமிழ்நாடு—புதுவை இயக்ககம் வீர முதன்மை வெற்றிக் கொடி பெற்றமைக்காகத் தனியானதொரு வெற்றிக் கோப்பையை அளிக்க வேண்டும் என்று தேசிய மாணவர் படையின் டைரக்டர் ஜெனரல் அவர்கள் முடிவு எடுத்தார்கள்.

**சென்னையில் விழா**

பதினாறு மாநிலங்களைச்சேர்ந்த தேசிய மாணவர் படை இயக்க



சென்னை விவேகானந்தா கல்லூரியைச் சேர்ந்த திரு. அனூப் குமார் சந்தோக், தமிழக முதல்வர் அவர்களிட மிருந்து அனைத்து இந்திய தேசிய மாணவர் படை ஆண்கள் சீனியர் டிவிஷனின் சிறந்த படைப் பயிற்சியாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டமைக்காகப் பரிசு பெறுகிறார்.

கங்கள் பங்கேற்ற போட்டி களில் வெற்றி பெற்ற தமிழ் நாடு தேசிய மாணவர் படையைப் பாராட்டிப் பரிசு வழங்கும் விழா சென்னை இராணி மேரிக் கல்லூரியில் 2-2-1978 அன்று நடைபெற்றது. தமிழ்நாடு-புதுவை மாநில தேசிய மாணவர் படை இயக்குநர் திரு கே. பி. கோபால் ராவ் அவர்கள் அனை வரையும் வரவேற்றார். விழாவுக்கு மாண்புமிகு கல்வியமைச்சர் திரு சி. அரங்கநாயகம் அவர்கள் தலைமை வகித்தார். அவர் தமது உரையில் குறிப்பிட்டதாவது :

"தேசிய மாணவர் படைப் பயிற்சி, மாணவர்களிடையே ஒற்றுமையையும் உணர்வையும் ஒழுங்கையும் கட்டுப்பாட்டையும் வளர்க்கிறது.

"இன்று இந்தியாவில் தேசிய மாணவர் படைப் பயிற்சியில் முன்னணியில் திகழும் நமது மாணவர்கள் இந்திய தேசிய ராணுவத்திலும் முன்னணியில் திகழவேண்டும்.

"இன்று தேசிய மாணவர் படையினர் பெற்றுள்ள வெற்றி அவர்களுக்கு எதிர்காலத்தில் பயன்படக் கூடிய நல்வாய்ப்பாக அமைந்துள்ளது. நமது மாணவமணிகள் இதனைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்."

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் குடியரசு நாள் அணி வகுப்பில் வெற்றி பெற்ற மாணவமணிகளுக்குப் பரிசுகளை வழங்கினார்கள்.

பதின்மூன்று முறைகள் நடைபெற்ற போட்டிகளில் 8 முறை வீரமுதன்மை வெற்றிக் கொடி பெற்றமைக்காகத் தமிழ்நாடு-புதுவை மாநில தேசிய மாணவர் படை இயக்ககத்திற்குச் சிறப்புப் பரிசு வழங்க டெல்லியில் முடிவு அறிவிக்கப்பட்டபொழுது அந்தப் பரிசுக் கோப்பை, அப்பொழுது தயாராகவில்லை. அதனை இவ் விழாவில் முதல்வர் அவர்கள் வழங்கினார்கள்.

பரிசுகளை வழங்கி முதல்வர் அவர்கள் பாராட்டுரை வழங்கிய போது குறிப்பிட்டதாவது :

"எதிர்காலத்திலும் இந்தியத் துணைக் கண்டத்தில் தமிழக மாணவர்கள் முதன் வரிசையில் நிற்க வேண்டும் என்ற நிலையை நாம் உருவாக்கி வர வேண்டும்.

"இந்தியத் துணைக்கண்டத்தில் உள்ள தேசிய மாணவர் படைகளுக்காக நடந்த அணிவகுப்பில் கலந்து கொண்டு தமிழ்நாடு அணி வெற்றி பெற்றது என்றால் அது தனிப்பட்டவர்கள் சேர்ந்து பெற்றது என்றாலும் தனிப்பட்ட நபர்களின் பெயர்களைச் சொல்லாமல் ஒட்டுமொத்தமாகச் சொல்வது சிறப்பு.

"நம்முடைய மாணவர்கள் பெற்ற வெற்றி நமக்கு மட்டும் சொந்தம் அல்ல. நாட்டு மக்களுக்கும் நாட்டு வாழ்வுக்கும் சொந்தமானதாகும்.

"இந்திய மாணவர்கள் மத்தியில் முன் வரிசையில் நிற்பவர்கள் தமிழர்கள் என்று சொல்லும் அளவுக்கு வாய்ப்பைப் பெற்றிருக்கிறோம்.

"நான் வெளிநாடு சென்றிருந்த போது சோவியத் நாட்டில் பார்த்திருக்கின்றேன். தாம் வெற்றி பெற்றோம் என்று எண்ணாமல் தம் நாடு வெற்றி பெற்றிருக்கிறது என்று தான் கருதுகிறார்கள்.

சுவிட்சர்லாந்து, பாரிஸ், லண்டன், தாய்லாந்து முதலிய பல நாடுகளில் நான் இதையே பார்த்திருக்கிறேன். சென்னையை விடச் சற்றுப் பெரிய அளவில் உள்ள சிங்கப்பூர் நாட்டில், மாணவர்களும்; மாணவிகளும் இதுபோன்ற பயிற்சியைப் பெற்றிருக்கிறார்கள்.

"நான் தொழில் சம்பந்தமாக காஷ்மீர் சென்றிருந்த போது, விமானங்களைச் சுட்டு வீழ்த்திய செயலை-வீரமரணத்தை எய்தினார் என்று கூறி படைத் தலைவர் அவைகள் நடந்த இடங்களை எனக்குச் சுற்றிக் காட்டினார், விளக்கினார்.

"மாணவர்களுக்கு அரசியல் வேண்டாம். ஆனால் அரசியல் வரலாறு தெரிந்தாக வேண்டும்.

"பொருளாதாரத்தில்-சமூகத்தில் உள்ள நல்ல கொள்கைகளை ஒழுங்காக நடத்தும் தகுதியுள்ள அமைப்பின் பெயர் அரசு-அரசியல்.

"இந்த நாட்டை மேம்பாடு அடையச் செய்ய வேண்டும்; எதிலும் கலந்து கொள்கிற மாணவர்கள் 'நான் எனக்காக உழைப்பேன்' என்று சொல்லாமல் நான் இந்த நாட்டுக்காக உழைப்பேன்' என்று சொல்வது பொருத்தமானதாகும்.

"உங்கள்பால் நல்லெண்ணம் கொண்ட நாங்கள் இந்தப் பணிக்காகப் பாடுபடுகிறவர்களின் நன்மைக்காக 25 ஆயிரம் ரூபாயை வழங்குகின்றோம்.

"1925-ஆம் ஆண்டில் பல்கலைக் கழக ஆசிரியர் பயிற்சி என்று தொடங்கி, இன்று தேசிய மாணவர் படை வரலாறு ஒவ்வொன்றையும் எண்ணிப் பார்த்தால் அத்தனையும் பாராட்டத் தக்கதாக அமையும்.

"தொடர்ந்து தமிழகம் எதிலும் முன்னின்று தகுதி சேர்த்து, தமிழ்ப் பண்பை—தமிழ்நாட்டுப் பண்பைப் பாதுகாத்துத் தர வேண்டும்."

இவ்விழாவில் முதலமைச்சர் பொது நிவாரண நிதிக்கு முப்பதாயிரம் ரூபாய் தமிழ்நாடு — புதுவை மாநிலங்களின் தேசிய மாணவர் படையின் சார்பில் வழங்கப்பட்டது.

ஆசிரியரும் வெளியிடுபவரும் : தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600002


INFORMATION

பதிவு எண். M. 8676



# மதுவை ஒழித்து மகிழ்ச்சி நிலவச் செய்வோம்!



"சாராயம் நம் உடலையும், நடத்தையையும், அறிவையும் பாழாக்குகிறது!"

"மலேரியா முதலிய நோய்கள் உடலை மட்டுமே பாதிக்கும்; மது பானங்களும், கஞ்சாவும் உடலோடு ஆன்மாவையும் பாதிக்கும்."

— அண்ணல் காந்தியடிகள்

"மதுவிலக்கு இல்லையேல் அரிசனங்களுக்கும், விவசாயத் தொழிலாளர்களுக்கும் விமோசனம் இல்லை!"

— பேரறிஞர் அண்ணா



வெளியீடு :—
இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத்துறை.
தமிழ்நாடு அரசு.